GOKULAM


கோகுலம்

நவம்பர் '93 ரூ. 3.00





எப்போது பார்லே மேங்கோ பைட்
உங்களிடம் உள்ளதோ
அப்போது 'கோகுலம்' இதழின்
ஆனந்தம் மேலும் அதிகரிக்கும்.



கோகுலம்

1993
நவம்பர்
மாத இதழ்
மலர் : 11
இதழ் : 10



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

இந்த ஆண்டு நவம்பர் மாதத்தையே குழந்தைகள் மாதமாக அறிவித்து விடலாம் போல் இருக்கிறது! சிறுவர்க்கு மகிழ்ச்சி யூட்டும் நவராத்திரியும், தீபாவளியும் இந்த மாதத்தில்தான் வருகின்றன. குழந்தைகள் தினம் இந்த மாதம்தான். சிறுவர் இலக்கியம் செழிக்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காகவே வாழ்ந்த கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர் களின் பிறந்த தினமும் இந்த மாதம்தான்.

மதத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு பெரியவர்களெல்லாம் சண்டை போடுவதை நீங்கள் கவலையோடு கவனித்திருப்பீர்கள். இந்தக் குறுகிய மனம் உங்களுக்கும் வந்துவிடக் கூடாது. நீங்கள் பண்டிகை களைக் கொண்டாடும்போது மற்ற மதத்தைச் சேர்ந்த நண்பர்களையும் உங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள். இது, ஒருவர் மதத்தின் பெருமையை மற்றவர் அறிந்து மதிப்பளிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் காரணமாக அமையும். இப்படி நீங்கள் மற்ற மதத்தைச் சேர்ந்த நண்பர்களையும் உங்கள் வீட்டில் நடை பெறும் பண்டிகைகளுக்கு அழைத்துக் கொண்டாடியதைப் பற்றி, கோகுலத்துக்கு எழுதி அனுப்புங்கள். சிறப்பானவற்றைத் தொடர்ந்து வெளியிடுகிறோம். உங்கள் பெயர், முகவரியையும் தவறாது குறிப் பிடுங்கள்.

அமைதி என்ற உடனேயே நமக்கு வெள்ளைப் புறாவின் நினைப்புத் தான் வருகிறது. கூடவே, நேருஜியின் நினைப்பும் வருகிறது. உலக அமைதியைக் காக்க அயராது பாடுபட்ட அந்த ஆசிய ஜோதிக்கு உலக நாடுகள் எல்லாம் பெருமையளித்தன. அமெரிக்காவில் அவர் சுற்றுப் பயணம் செய்த போது ஒரு பத்திரிகை நிருபர் அவரிடம், "நீங்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட தளபதி, இந்தியாவின் பிரதமர், உலக சமாதானக் காவலர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர். இப்படிப் பல துறை களிலும் பெருமைக்குரியவராக விளங்கும் நீங்கள், மனத்துக்குப் பிடித்த நிகழ்ச்சியாக எதை நினைக்கிறீர்கள்? எந்தப் பணி உங்கள் மனதுக்கு நிறைவு தந்தது?" என்று கேட்டார். "ஆண்டுதோறும் குழந்தைகள் தினத் தில் குழந்தைகளோடு நான் பழகும் நிகழ்ச்சிகளும், எல்லா வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திலும் குழந்தைகளோடு பழகும் நிகழ்ச்சிகளுமே என் மனத்திற்குப் பிடித்தமானவை" என்று பதிலளித்தார் நேருஜி. எந்த நாட்டில் சுற்றுப் பயணம் செய்தாலும் அந்த நாட்டுக் குழந்தைகளுடன் கலந்து பேசி, மகிழ ஒரு நிகழ்ச்சி அவரது சுற்றுப் பயணத்தில் கண்டிப் பாக இருக்கும். அவர் பிறந்த நாட்டில்தான் நாமும் பிறந்திருந்திருப்பதை எண்ணி, பெருமைப்படுவோம்.

கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்தநாளும் இந்த மாதம் வரு கிறது. குழந்தை கவிஞர், தாம் எழுதியதோடு மற்றவர்களையும் எழுத வைத்தார். மாணவப் பருவத்தில் இருந்தே என்னைப் போன்ற எழுத் தாளர்கள் பலரை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும். அவர் கவிஞர், பேச்சாளர், எழுத்தாளராக மட்டு மின்றி, மனித நேயம் மிக்கவராகவும் இருந்த பெருமையை விளக்கும் ஒரு கட்டுரையும் இந்த இதழில் வெளி யாகியுள்ளது.

உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தானே?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப் போம்.

அன்புடன்

(கௌரவ ஆசிரியர்)




...பிக்களிடத்தில் அன்பு
...லுணும் - தெய்வம்
...ண்மையென்று
...றிதல் வேணும்.
- பாரதியார்.

கோகுலம்

1993 நவம்பர்

இந்த இதழில்









✸ முகம்மது கண்டெடுத்த புதையல் பக்கம் 53

✸ கழுதைக்குப் பிடித்தது காகிதம்தானா? பக்கம் 86




✸ பட்டாக பிறந்த கதை பக்கம் 94



கலைமகளே!

பாரதி சுராஜ்



கலைமகளே! உன் கருணையினால்
கலைகள் பலவும் கற்றிடுவேன்
மலைமகளே! உன் மகிமையினால்
மலையென உடல்வலி பெற்றிடு
வேன்

அலைமகளே! உன் அருளால் நான்
அவனியில் செல்வன் ஆயிடு வேன்!

கலைமகள் தந்த கலை நலத்தால்
கல்வியை எங்கும் பரப்பிடுவேன்
மலைமகள் தந்த உடல்வலியால்
மாண்புடன் நாட்டைக் காத்திடுவேன்
அலைமகள் தந்த பெரும் திருவால்
அவனியில் வறுமை போக்கிடுவேன்


DIAMOND COMICS

Presents an unending series of the most renowned comics in the world, like...

Phantom
A typical haracter of the omic surviving in his own life for hundred of ears—like one soul in a series of bodies. He has taken a edge to efface ll evil from the orld. Although e dwells in the nse jungle, his field of action vers the whole world. He is the most helping friend for the needy. ressed persons his adversaries a vemitable death



now availabe No. 1 to 28




now available No. 1 to 15

Mandrake
The most widely read comic character in the world, who can hypotise anyone merely by looking at him. His enemies are determined to end his existence but every time not he but they who lose before his mighty magic.

Spider Man
An unbelievable xistence who in reality is a very ovial handsome outh, hating all that is criminal and evil in the world. When he comes in his deadly Spider-Form his enemies cannot stand before his imitable power No place is inaceesible for him, even that too which is beyond the imagination.



now available 1 and 2



now available No. 1 to 15

James Bond
An ace British detective known for his daredevilry and love for all good things of life including the young beauties! An expert masqurader who newer fails in his mission howso-ever dangerous

FREE! Sticker with evry comics

NEW DIAMOND COMICS (1 Oct. 93)

Pran's—**Billoo & Cricket**	8.00
Lambu Motu & Atomic Reactor	8.00
Chacha Bhatija, Crazy Elephant	8.00
Mahabali Shaka & A Confrontation with a devil	8.00
Phantom-27 (Digest)	15.00

NEW DIAMOND COMICS (15 Oct. 93)

Pran's—**Raman & The Hero of Serial**	8.00
Agniputra Abhay & Black Thunder (1994 Diary Free)	15.00
Fauladi Singh & The Time Man	8.00
Tauji & The Christ of Corpses	8.00

DIAMOND COMICS PVT.LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

IBUTORS: Madras: • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **abad:** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar.. **Bangalore:** • Sapna Book Stall, Gandhi Nagar. Agencies, Rajaji Nagar. • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road.




போலீஸ் ஆகலாமா?

சாதாரணமாக நம்ம வீடுகளில் பசங்க படித்துப் பெரியவங்களானா டாக்டராகவோ, இஞ்சினியராகவோ ஆகணும்னு சொல்லுவாங்க. சில பேர் கலெக்டராகணும்பாங்க. இன்னும் சில பேருக்கு ஆசிரியராகணும், பாடகராகணும், பெரிய நடனக் கலைஞராகணும் என்று இப்படியெல்லாம் லட்சியம் இருக்கும்.

ஆனால் போலீஸ் ஆபீசராகணும், இராணுவ வீரர் ஆகணும் என்றெல்லாம் இலட்சியம் உடையவங்க ரொம்பக் குறைவு.

காரணம், போலீஸ் இராணுவம்னா ரொம்ப முரட்டுத்தனமா நடந்துக்கணும். பயங்கரவாதிகள், இருடங்களோடல்லாம் சண்டை போடணும். துப்பாக்கி, வெடிகுண்டு இதையெல்லாம் பயன்படுத்தணுங்கற பயம்தான்.

ஆனால் ஒருநாடு மகிழ்ச்சியோடு பயமில்லாம, பிரச்னைகள் இல்லாம நல்லபடியா இருக்க அந்த நாட்டோட போலீஸ் துறையும், ராணுவமும்தான் முக்கிய காரணம்!



* பிடிப்பு இல்லாத சுவரில் ஏறுகிறார்கள்!

போலீஸ் துறைங்கறது ரொம்பப் பொறுப்பான ஒரு துறை. நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கற பெரிய பொறுப்பு அவங்ககிட்டதானே இருக்கு? சில கொடியவர்கள், தேச விரோதிகள் ஊடுருவும் போது அவங்களை ஒடுக்கி, நம்மையெல்லாம் காப்பாத்தறது போலீஸ் துறைதானே?

அப்படிப்பட்ட பொறுப்பு மிக்க போலீஸ்துறை பத்தி நாம தெரிஞ்சிக்க வேண்டாமா?

இன்றைக்குப் போலீஸ் துறைல ஆண்கள் மட்டுமில்லாம பெண்களும் நிறைய பேர் இருக்காங்க! அவங்களுக்கெல்லாம் வீடு, உறவினர் எல்லாம் ரெண்டாம் பட்சம்தான்! நாடு, நாட்டு நலன்தான் முதல் கவலை!

அந்தக் காலத்துல அரசர்கள் ஆண்டுக்கிட்டிருந்தபோது வீரர்கள் இருப்பாங்க. அவங்க வாள், வேல், வில் போன்ற ஆயுதங்களை ஏந்தி தீய சக்திகள் கிட்டேருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பாங்க. அரசர்கள் காலம் மறைந்து ஆங்கிலேய ஆட்சி வலுவூன்றியதும் சட்டம் ஒழுங்கைக் காக்கும் பொறுப்பை ஏற்க போலீஸ் துறை உருவாயிற்று.

போலீஸ் என்றாலே நாம் பயபக்தியுடன் ஓரமாப் போவோம். அவங்க நம்மைப் புடிச்சி ஜெயில்ல போட்டுடுவாங்களோன்னு ஓர் அசட்டு பயம்தான்! ஆனால் ஒருவிஷயத்தை மறந்துடறோம். போலீஸ் காரங்களும் மனுஷங்க தானே! டாக்டர், இஞ்ஜினியர் மாதிரி போலீஸ் என்பதும் ஒரு தொழில். சொல்லப் போனா மத்ததெல்லாத்தையும் விட அவங்க தொழில்தான் அதிகப் பொறுப்புள்ளது; ஆபத்தானதும் கூட!

ஆனால் போலீஸாறதுங்கறது அவ்வளவு சுலபமில்லை. போலீஸ் ஆகறதுக்கு முக்கியத் தேவை வலுவான உடல் கட்டு; கூர்மையான அறிவு. பயிற்சி காலத்தில் கடுமையான உடற்பயிற்சிகள் செய்யணும். காடு, மேடு, மலை என்று எப்பேர்ப்பட்ட அபாயம் நிறைந்த இடமானாலும் தயங்காமப் போய் திருடங்களைப் பிடிக்கணும். இரவு, பகல் பார்க்காம உழைக்கணும். கலவரங்கள், சண்டைகள் நடந்தா அதையெல்லாம் கட்டுப்படுத்தணும். மிகவும் கடினமான பணிதான். இருந்தாலும் இதையெல்லாம் நம்ம நாட்டுக்காகச் செய்யறோம்கிற ஒரு மன நிறைவு அவங் களுக்கு இருக்கும் இல்லையா?

போலீஸ் துறைல பல பிரிவுகள் இருக்கு. சாதாரணமா போலீஸ் துறை மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு துறை. பிரதமர் போன்றவர்கள் நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் செல்லும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கறது, விழாக்கள் மாநாடுகள் நடந்தால் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது எல்லாமே இந்தத்



● மகளிர் அணிவகுப்பு.



* மரத்திலிருந்து அடுத்த மரம் போகும் பயிற்சி

துறையின் பொறுப்புதான். இவை தவிர இருக்கவே இருக்கு, தீயவர்கள் அச் சுறுத்திலில் இருந்து மக்களைப் பாது காப்பது... இவங்களோட பணிகள் எல் லாமே தன்னலமில்லாதவை.

இப்படி மாநிலங்களோட கட்டுப் பாட்டுக்குக் கீழ் இயங்கற போலீஸ் துறை தவிர, மத்திய அரசின் கீழ் இயங் கற ரிஸர்வ் போலீஸ் படை ஒன்றும் இருக்கு. இவங்களுக்கு என்ன வேலைன்னா, எங்கேயாவது கலவரங் கள் நடக்கும் போது, அதை உள்ளூர் போலீஸ் படையால் கட்டுப்படுத்த முடியலைன்னா, இந்த ரிஸர்வ் போலீஸ் படை அங்க வேகமா வந்து, கலவரத்தை அடக்கும். இவங்களுக்கு இதுக்குன்னு, சிறப்பு பயிற்சி, ஆயுதங்களெல்லாம் உண்டு.

ரிஸர்வ் போலீஸ் என்பது ஏறக் குறைய நம்ம இராணுவம் போலத்தான். இவங்களுடைய பயிற்சியெல்லாம் மிகக் கடுமையா இருக்கும். படைக்குத் தேர்ந்தெடுக்கவே ஏகப்பட்ட பரீட்சை கள்!

இந்தியாவின் பல்வேறு மாநிலங் களிலேருந்து பல ஆயிரம் பேர்கள் இந்த ரிஸர்வ் போலீஸ் படையில் இருக் காங்க.

சரி, இவங்களை எப்படித் தேர்ந் தெடுக்கறாங்க?

முதல்ல, அரசாங்கம், செய்தித் தாள் களில் விளம்பரம் தரும். இதுமாதிரி, போலீஸ் படைக்கு ஆட்கள் தேவை. குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு படிச்சிருக்கணும். நல்ல வலுவான உடல் இருக் கணும். பயிற்சிகளில், தேர்வாக ணும் அப்படீன்னு. போலீஸ் துறையில் பணியாற்ற விருப்ப முடைய இளைஞர்கள் விண் ணப்பம் செய்வாங்க.

பிறகு நேர்முகத் தேர்வுக் குக் கூப்பிடுவாங்க. அந்தத் தேர்வுல தேர்ந் தெடுக்கப்பட்ட வங்களுக்கு, நாட்டின் பல இடங்களில் பயிற்சி தருவாங்க.

பயிற்சின்னா சாதாரணமா துப் பாக்கி சுடறது, திருடனைப் பிடிக்கறது அப்படின்னு இல்லை.... கடுமையான பயிற்சிகள்!

எல்லாவிதமான தட்பவெப்ப நிலை யிலும் எப்படிப்பட்ட கரடு முரடான இடங்களிலும் அவங்களால பணியாற்ற முடியுமான்னு முதல்ல பரீட்சை வைத்துப் பாப்பாங்க.

பரீட்சைன்னா சாதாரண பரீட்சை இல்லை... எரியற நெருப்பை தாண் டறது, முள் கம்பிகள் நடுவில் புகுந்து வெளில வரது, மிக உயரமான சுவர் களைத் தாண்டறது, உயரத்திலிருந்து குதிக்கறது, காட்டில் மரங்களின் மேலேயே நடந்து போறது, டைவ் அடிக் கறது, நீச்சல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், கனம் தூக்குதல் இப்படி பயங்கரமான பல பயிற்சிகள்!

இதிலெல்லாம் தேர்ந்து வரது அத் தனை சுலபமில்லை! அப்படித் தேர்ந்து வந்து விட்டால் போலீஸ் பயிற்சி யாளரா முதல்ல வேலைக்கு எடுத்துப் பாங்க! இந்தியாவோட எந்தப் பகுதிக் கும் எந்த நேரத்திலும் போகத் தயாரா இருக்கணும்!

பஞ்சாப் போன்ற மாநிலங்களில் தீவிரவாதிகளை அடக்குவது போன்ற பணிகளில் முதலில் வேலைக்கு அமர்த்துவாங்க!

சாதாரணமா ஆபீஸ் வேலை என் றால் காலைல பத்து மணிலேருந்து சாயங்காலம் அஞ்சு மணியோட சரி. ஆனா இந்தப் போலீஸ் பணி அப்படி இல்லை. இருபத்தி நான்கு மணி நேர மும் விழிப்போடு இருக்கணும்! ஏன்னா, எந்த நிமிஷமும் எதிரிங்க தாக்க லாம் இல்லையா?

இவ்வளவு கஷ்டத்தையும் அனுப விச்சிக்கிட்டு எதுக்குப் போலீஸா இருக் கணும்னு உங்களுக்கு சந்தேகம் தோன்ற

லாம். ஆனால் நம்ம நாட்டின் சட்டம் அமைதியைக் காக்கும் மகத்தான பணி இல்லையா இது? அதுக்காக இத்துன் பங்களைப் பொறுத்துக்கிட்டுத்தான் ஆகணும்!

அதுக்காக இவங்களுக்கு ஓய்வே கிடையாது என்பது இல்லை. பகைவர்களோட எப்பவுமேவா சண்டை போட்டுக்கிட்டு இருக்கிறோம்? எப்பவாவது அதுவும் அவங்க வாலை ஆட்டும் போதுதானே! மத்த நேரங்களில் இவங்க என்ன பண்ணுவாங்க?

சமீபத்துல ஆவடியில், இந்த ரிஸர்வ் போலீஸ் படையோட முகாமுக்குப் போயிருந்தோம். அவங்க தங்க ஓய்வு நேரத்தை எவ்வளவு அழகா, பயனுள்ள முறையில் செலவிடறாங்க தெரியுமா? பாட்டுப் பாடி, டான்ஸ் ஆடி, ஓடிப் பிடிச்சி விளையாடி.... அதையெல்லாம் பாக்கணுமே! இவங்களா அவசியம் நேரும்போது துப்பாக்கி எடுத்து சண்டையும் போடறாங்கன்னு கேட்கத் தோன்றும்!

அட்டைப்படம் : அமெரிக்காவில் உள்ள டிஸ்னி லாண்டில் தினந் தோறும் தீபாவளி.

அவங்க கிட்ட, ''ஏன் சார்! இப்படி அப்பா, அம்மா, பிள்ளை குட்டி சொந்தக்காரங்க எல்லாரையும் விட்டுட்டு இங்கே தனியா இருக்கறது கஷ்டமா இல்லையா?''ன்னு கேட்டோம். அவங்க என்ன சொன்னாங்க தெரியுமா?

''கஷ்டமா? நாட்டுக்காக சேவை செய்யறது எப்படிக் கஷ்டமாகும்? இந்த நாடுதான் நமக்கு அம்மா! நாட்டு மக்கள் தான் நமக்கு உறவுக்காரங்க! நாங்க ஒன்ணும் மக்களிடம் இருந்து பிரிஞ்சு இல்லையே?'' அப்படீங்கறாங்க!

என்ன, பெரியவனானதும் நாமும் போலீஸாகி தேச சேவை செய்யலாம் தோணுதா?

வாங்க, வாங்க! சீக்கிரம் படிப்பை முடிச்சுட்டு வாங்க!

பா.ரா.

பிருந்தாவனக் கவியரங்கம்



பட்டுப் பூச்சி

பட்டுப் பூச்சி வானிலே
பறந்து பறந்து சென்றது
தோட்டம் கீழே கண்டது
சிறகை விரித்து அமர்ந்தது.


கிட்டுப் பயல் வந்தனன்
கண்ணில் பூச்சி பட்டது.
கிட்டப் பிடிக்கப் போயினன்
கையைக் கொண்டு சென்றனன்.

பூச்சி பிடிக்கும் வேகத்தில்
பழத்தின் தோலை மிதித்தனன்.
போச்சு போச்சு காலுமே
பூச்சி பறந்து பிழைத்தது!

– இரா. பிரபாகரன்,
பட்டுக்கோட்டை.

எருமையார்


கரிய நிற எருமையார்
கொம்பு நீண்ட எருமையார்



சேறு மீதில் புரளுறார்
சொகுசாய் குளத்தில் உருளுறார்

கூரை ஓலை இழுக்கிறார்
கெட்டிப் பாலைத் தருகிறார்
பொறுமை மிகவும் உடையவர்
புகழைப் பாட வாருங்கள்!

– எம். ஷேக் உசேன், வடகரை.



மின்சாரம்

ஒளியும் ஒலியும் தந்திடுமாம்
ஒளிந்து நன்மை புரிந்திடுமாம்
களைப்பு ஏதும் இன்றியே
காற்றைக் கூடத் தந்திடுமாம்!

அறிவியல் புதுமை படைத்திடவே
ஆக்கச் செயல்கள் புரிந்திடுமாம்
மருந்து மாத்திரை செய்திடவே
மக்களுக்கு உதவிடுமாம்!

– மா. சுப்ரமணியன், முசிறி.

குரங்கு!

தாவித் தாவிக் குதிக்குமாம்
தத்தித் தத்தி நடக்குமாம்
குறும்புத் தனம் செய்யுமாம்
குதித்துக் குதித்து ஆடுமாம்!




மலையின் மீது ஏறுமாம்
மாலை தன்னைப் பிய்க்குமாம்
பழத்தை வீசி எறியுமாம்
பதுங்கிப் பதுங்கிச் செல்லுமாம்!

சுவரின் மேலே ஏறுமாம்
சுற்றிச் சுற்றிப் பார்க்குமாம்
கவன மாகத் தாவுமாம்
கிளைக்குக் கிளை ஏறுமாம்!

- வே. பூங்குன்றன்,
வடமாதிமங்கலம்.

சேவல் பாருங்க

வண்ணச் சேவல் பாருங்க
வந்து அழகைக் காணுங்க
கொண்டை ஒன்றே போதுங்க
காணக் காண இன்பங்க



தீனி கொத்தும் அழகினை
தினமும் பார்த்து மகிழுங்க
கூவி எழுப்பும் குரலினைக்
கேட்டுக் கேட்டு மகிழுங்க!

- பி. செல்வராஜ் - பி.பாலசுப்ர
மணியன், சங்கரன்கோவில்.

காவலன்

எங்கள் வயலைக் காப்பவன்
ஏற்ற நல்ல காவலன்
அங்கும் இங்கும் தூங்கிட
என்றும் நகர்ந்து சென்றிடான்!




அமா வாசை இருட்டிலும்
அச்ச மின்றி இருப்பவன்
எமனைக் கூடத் துச்சமாய்
எண்ணி எண்ணிப் பார்ப்பவன்

மழைக்கும் இடிக்கும் அஞ்சிடான்
மின்னல் பனிக்கும் அஞ்சிடான்
கோழைத் தனங்கள் செய்திடான்
காவல் பொம்மை காணுங்கள்

- பி. மேகலா, ஆட்டையாம்பட்டி.

பூனையாம்


எங்கள் வீட்டுப் பூனையாம்
ஏணி ஏறும் பூனையாம்
தங்கை வளர்க்கும் பூனையாம்
தயிர் குடிக்கும் பூனையாம்



மெத்தை போன்ற கால்களால்
மெல்ல நடக்கும் பூனையாம்
அத்தை பாட்டி விரட்டினால்
அழகாய் ஒளியும் பூனையாம்!

- மு. கிருஷ்ணன், பிளியலூர்.

நாய்



நல்ல நல்ல நாய் இது
நன்றி மிக்க நாய் இது
செல்ல மான நாய் இது
சிநேகம் மிக்க நாய் இது!

வாலை ஆட்டும் நாய் இது
வீட்டைக் காக்கும் நாய் இது
காலைச் சுற்றும் நாய் இது
கண்ணன் வீட்டு நாய் இது!

- பொன் குமார், சேலம்.

சின்னப் பாப்பா

சின்னச் சின்னப் பாப்பா
சிரிக்கும் நல்ல பாப்பா
எங்க வீட்டுப் பாப்பா
எனக்கு நல்ல பாப்பா




ஓடி ஆடும் பாப்பா
ஓட்டைப் பல்லு பாப்பா
பாடச் சொல்லி அழகாய்
படுத்துத் தூங்கும் பாப்பா!

- எம். உதயகுமார், மாத்தூர்.

குதிரை பார்!

குதிரை நல்ல குதிரைபார்
குஞ்ச வாலுக் குதிரைபார்
முதுகில் என்னை ஏற்றியே
மகிழ்ந்து ஓடும் குதிரைபார்!



கறுப்பு வண்ணக் குதிரைபார்
கனிவு மிக்க குதிரைபார்
வெறுப்பு ஏதும் இன்றியே
வண்டி இழுக்கும் குதிரைபார்!

சாட்டை சொடுக்க வேண்டாம்
சிறிதும் விரட்ட வேண்டாம்
பாட்டுச் சத்தம் போதும்
பஞ்சாய்ப் பறக்கும் குதிரை!

– ம. முன்ஷிப் ஷா (கத்திரி),
சென்னை - 2.

இன்பம் நிச்சயம்




உயிர்கள் மீது அன்பு காட்டு
உயர்வு கிடைக்குமே!
உயிர்களையே வெறுத்து வந்தால்
உலகம் மறக்குமே!

வாடுகின்ற மனிதருக்கு
வாழ்வு அளியுங்க!
ஓடிச் சென்று துயர்களையே
ஓட வையுங்க!

உதவிக் கரம் நீட்ட நீயும்
உருகித் துடிக்கணும்
இதனை என்றும் செய்து வந்தால்
இன்பம் நிச்சயம்!

– அ. சுப்ரமணியன்,
தேவநல்லூர்.



பள்ளி

நாடு போற்றும் பள்ளி
நல்ல வராக்கும் பள்ளி

வாழ்வை உயர்த்தும் பள்ளி
வல்லவ ராக்கும் பள்ளி

தங்கமான பள்ளி
தரணி போற்றும் பள்ளி

உழைத்து வாழும் அறிவை
ஊட்டி வளர்க்கும் பள்ளி.


– ம. கணேசன், குடந்தை.

ரயில் வண்டி

கூக்கூ கூக்கூ ரயில் வண்டி
குண்டூர் போகும் ரயில் வண்டி
கத்திக் கத்திப் பறந்திடுமாம்
காற்றை வென்று விரைந்திடுமாம்!

பறவை விலங்கு மனிதர்களை
படிக்க விரையும் பிள்ளைகளை
இரவும் பகலும் ஓய்வின்றி
ஏற்றிச் செல்லும் ரயில் வண்டி

– மா. வெ. கிருஷ்ணன்,
அம்மையார்குப்பம்.



கேட்கட்டுமா டாக்டர்?

✱ வி. புவனா, பெரியகுளம்.

? தலையில் கடிக்கும் பேன், நோய்களை உண்டாக்குமா டாக்டர்?

! ஆம். Epidemic Typhus, Relapsing fever, Trench fever, போன்ற நோய்களைப் பரப்பும் 'நோய்க்கடத்தி உயிரி (Vector) யாகப் பேன்கள் செயல்படுகின்றன. மேலும் பேன்கள் கடிக்கும் போது நாம் அடிக்கடி தலையைச் சொரிவதால், கரப்பான், காளான் போன்ற தோல் நோய்கள் தலையில் உண்டாவது சகஜம். பேன் தொல்லையால் அதிக காலம் அவதிப்படுபவர்களுக்கு தலையில் புண்கள் ஏற்படுவது வாடிக்கை. குறிப்பாக குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் தலையில் புண் வருவதற்கு பேன்கள்தான் முக்கிய காரணம்.

✱ எஸ். ராஜேந்திரன், அகமதாபாத்.

? சொத்தைப் பல் இருந்தால் என்ன செய்ய வேண்டும், டாக்டர்? அதை எடுக்கலாமா? இல்லை, அடைக்கலாமா?

! பல்லின் மேல்பூச்சு மட்டும் சொத்தையாக இருந்தால் அதனை அடைத்து விடலாம். பல்லின் வேர் வரைக்கும் சொத்தை பரவியிருந்தால் அந்தப் பல்லை அகற்றி விடுவதே நல்லது.

✱ என். பிரமிளா, பள்ளிகொண்டா.

? நகம் கடிக்கும் பழக்கத்தை என்னால் திறுத்தவே முடியவில்லை. நீங்களாவது அதற்கு ஒரு வழி கூறுங்களேன், டாக்டர்?

! ஒரு வழி என்ன, இரு வழிகள் சொல்கிறேன்! சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் வேப்பெண்ணெயை விரலில் தடவிக் கொள்ளுங்கள். சில வாரங்களில் நகம் கடிக்கும் பழக்கம் மறந்து போகும். இது இயலாவிட்டால் வீட்டில் இருக்கும் போது, பாட்டிகள் பணம் சேர்க்கும் துணியாலான சுருக்குப் பைகளை வாங்கி, அதை ஒரு கைக்கு ஒரு பை வீதம் மாட்டி சுருக்குப் போட்டுக் கட்டி விடுங்கள். இந்த முறையை சில தினங்கள் நடைமுறைப் படுத்தினாலே போதும், நல்ல பலன் கிடைக்கும்.

✱ மெய். வெற்றிவேல், அம்மையப்பட்டு.

? பரீட்சை நேரங்களில் இரவில் தூங்காமல் படிப்பதற்கு மாத்திரை உள்ளதாமே! அதைச் சாப்பிட்டால் தூக்கம் வராதா? உடம்புக்கு அது கெடுதலா? விளக்கம் தேவை, டாக்டர்!

! ஆபத்து! ஆபத்து! அந்த மாதிரியான மாத்திரைகளை நினைத்துப் பார்ப்பது கூட ஆபத்து, வெற்றிவேல்!


✱ என். ரவிகுமார், வெங்கடாபுரம்.

? நாம் பரவசம் அடைந்தாலோ, ஆச்சரியம் கண்டாலோ கை, கால்களில் உள்ள முடிகள் சிலிர்த்து நின்று கொள்கின்றனவே, இது எதனால்?

! நம் சருமத்துக்குக் கீழிருக்கும் அர்ரெக்டார் பைலோரம் (Arrector Pilorum) என்கிற தசை நாம் பரவசம் அடையும் போதோ, பயப்படும் போதோ இறுகுகிறது. இதனால் சருமம் இழுக்கப் பட்டு முடிகள் சிலிர்த்து நிற்கின்றன.

✱ தா. சிந்துகுமார், திருவட்டார்.

? என் உறவுக்கார சிறுவன் ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு சமீபத்தில் சிகிச்சை



டாக்டர் கு. கணேசன்

பெற்றான். பதினைந்து வயதான சிறுவனுக்கு எப்படி ரத்தக் கொதிப்பு ஏற்பட்டது, டாக்டர்? பொதுவாக ரத்தக் கொதிப்பு எந்த வயதினருக்கு ஏற்படும்?

! ரத்தக் கொதிப்பு பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வருவது இயல்பு. ஆனால், சில விதிவிலக்குகளும் உண்டு. ரத்தக் கொதிப்பு இந்த வகையைச் சார்ந்ததே! இரண்டாவது வகையில் தைராய்டு சுரப்பி, அட்ரீனல் சுரப்பி, சிறுநீரகம் போன்றவற்றின் பாதிப்பால் ரத்தக் கொதிப்பு வரும். உங்கள் உறவுக்கார சிறுவன் இரண்டாம் வகை ரத்தக் கொதிப்பால் பாதிக்கப் பட்டிருக்கலாம்!

* வி.எஸ். சண்முகம், சின்னசேலம்.

? பற்களில் உள்ள மஞ்சள் கறையை நீக்குவது எவ்வாறு?

! பல் முளைக்கும் போதே, பற்களில் மஞ்சள் கறை இருந்தால் அதை நீக்க இயலாது. அதற்குப் பிறகு அது தோன்றியிருந்தால், பல் மருத்துவரிடம் காண்பித்து 'ஸ்கேலிங்' (Scaling) செய்து கறையை நீக்கி விடலாம்.

* ஜெ. சரவணன், நல்லாடை.

? தலைமுடியைப் படிய வைப்பதற்கு 'ஹீட்டர்' போடுகிறோமே. இது தீமை விளைவிக்குமா? விளக்குங்கள், டாக்டர்!


! தினமும் 'ஹீட்டர்' உபயோகித்து தலைமுடியைப் படியவைத்தால் சீக்கிரம் முடி நரைத்து விடும். இதற்குக் காரணம் ஹீட்டர் கொடுக்கும் அதீத வெப்பத்தால் முடியிலிருக்கும் நிறமிகள் அழிந்து விடும்.

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? ஒருவர் தன் உடம்பிலிருந்து எவ்வளவு ரத்தத்தை தானம் செய்யலாம்? 45 கிலோவுக்கு கீழே உள்ளவர்களிடம் ரத்தம் எடுக்கமாட்டேன் என்கிறார்களே, அது ஏன்? யார் யார் ரத்த தானம் செய்யக்கூடாது, டாக்டர்?



! ஆரோக்கியமுள்ள ஒருவர் சுமார் 500 மி.லி. ரத்தத்தை தானம் செய்யலாம். 45 கிலோவுக்குக் கீழே உள்ளவர்களிடம் ரத்தம் எடுத்தால், அவர்களுக்கு மயக்கம் உண்டாகலாம்; ரத்த சோகை வரலாம். அதனைத் தவிர்க்கவே அவர்களிடம் ரத்தம் பெறுவதில்லை. எய்ட்ஸ் நோய், பால்வினை நோய் உள்ளவர்கள், சமீபத்தில் மலேரியா மஞ்சள் காமாலை டைபாய்டு காய்ச்சல் வந்தவர்கள், இதய நோய் உள்ளவர்கள், ரத்தக் கொதிப்பு உடையோர், போதை ஊசிகளைப் போட்டுக் கொள்கிறவர்கள், கர்ப்பிணிகள், ரத்த சோகை உள்ளவர்கள், ஹீமோபிலியா நோய் உள்ளவர்கள், ரத்ததானம் செய்யக் கூடாது, தம்பி.



அறிவது விருப்பம்; கைலாஸ், பக். 126, ரூ. 18.00, விற்பனை உரிமை – கைலாஸ் சேல்ஸ் ஏஜன்சீஸ், 43, நெல்லை லாட்ஜ் பில்டிங், திருநெல்வேலி – 627 001.

பூண்டு எந்த இனத்தைச் சேர்ந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? வெங்காய இனம் என்பீர்கள். ஆனால் இது உண்மையில் அல்லிப்பூ இனத்தைச் சேர்ந்தது. காசிக்கு வாரணாசி என்ற பெயர் இருப்பதை அறிவீர்கள். இந்தப் பெயர் எப்படி ஏற்பட்டது என்பது தெரியுமா? காசியின் இருபுறமும் வருணா, அசி என்ற இரு நதிகள் ஓடுவதால்தான். ஆகாச கங்கை என்பது என்ன தெரியுமா? மில்கிவே என்பதன் இந்தியப் பெயர். இப்படி சிந்தனையைத் தூண்டும் ஆயிரம் அறிவியல் கேள்விகள், அவைகளுக்கான விடைகள் எல்லாம் அடங்கிய புத்தகமே இது. இதன் ஆசிரியர் ஏற்கெனவே கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறி முகமானவர். நூலின் தலைப்புத்தான் சற்று மருள வைக்கிறது! வினாடி-வினா நடத்துபவர்களுக்கும், அறிவியல் செய்திகளைத் தேடுபவர்களுக்கும் நல்ல விருந்து.

குழந்தைகளுக்கு இராமானுஜர், டாக்டர் எஸ். குலசேகரன், பக். 100, ரூ. 12/–, அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளைத் தெரு, வ.உ.சி. நகர், வேலூர், வ.ஆ. அம்பேத்கர் மாவட்டம், 632 001.

வைணவத்திற்கு புது வேகமளித்து, தீண்டாமைக்கு முடிவு கட்டிய அருளாளர் இராமானுஜரின் வாழ்க்கை வரலாறு. எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. படித்துக் கொண்டு வருகையில் ஆசிரியரின் ஈடுபாட்டை உணர முடிகிறது. உள்ளே இரண்டொரு படங்களைச் சேர்த்து இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். நல்ல முயற்சி.

தில் கவனி புறப்படு!, அ. வெற்றிவேலன், பக். 88, ரூ. 12/–, வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.

படிக்க சோம்பித்திரியும் தம்பி தங்கைகளை இட்டமிட்டுப் படிக்க வைத்து சாதனை படைக்கத் தூண்டும் பயனுள்ள நூல். ஏற்கெனவே கோகுலத்தில் தொடர் கட்டுரையாக வெளி வந்து பலரது பாராட்டுதலையும் பெற்றது. நடைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒருமுறை, குதிப்பெடுக்க ஒருமுறை என்று பல முறை படிக்கத் தூண்டும் பயன் மிக்க நூல். பரிசளிக்க ஏற்றது.

ஐந்தருவிச் சாலையிலே, பி.எஸ். மணி, பக். 88, ரூ. 10/–, கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.

குண்டு மணி என்ற பெயரில் கோகுலம் வாசகர்களுக்கு ஸ்போர்ட்ஸ் பக்கங்கள் வாயிலாக நன்கு அறிமுகமான பி.எஸ். மணியின் சிறுகதை (நெடுங்கதைகளும்) தொகுப்பு இது. இதில் சாரல் விழா, எலி முதலாளி, ஆபத்தில் உதவி, குழந்தையைக் காணவில்லை (நெடுங்கதை), பாலுவின் தந்தை ஆகிய கதைகள் உள்ளன. நடையில் திருநெல்வேலி மாவட்ட மணம் வீசுகிறது. பெருமை யளிக்கும் தொகுப்பு.

பெருமையோடு வாழ்வது எப்படி?, கைலாஸ், பக். 35, ரூ. 12/–, விற்பனை உரிமை கைலாஸ் சேல்ஸ் ஏஜென்சீஸ், 43, நெல்லை லாட்ஜ் கட்டடம், திருநெல் வேலி – 627 001.

அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றுக் காட்சிகள் + உலக நீதிகள் எல்லாமாக இருக்கின்றன. எல்லாம் பயனுள்ளவைதான். பிரித்துக் கொடுத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். பயனுள்ள படைப்பு.

செவ்வகங்களைச் சேருங்கள் – போட்டி முடிவு

செப்டம்பர் இதழில் வெளியான இந்தப் போட்டி அறிவிப்பில், இதன் கூடவே இதற்குரிய விடையும் தவறுதலாக வெளியாகிவிட்டது. இதைச் சுட்டிக்காட்டி எழுதிய அனைவருக்கும் நன்றி. இதை நிறைவு செய்ய 'செவ்வகங்களைச் சேருங்கள்' புதிய போட்டி ஒன்று டிசம்பர் இதழில் வெளியாகிறது.

பிரெஞ்சுக் கதை

மூன்றாவது பையன்!



வெகு காலத்துக்கு முன்பு பிரான்சிலே ஒரு சிறிய நாடு. அதன் அரசனுக்கு ஒரு பெண். அவள் கொள்ளை அழகி. அதோடு குணசாலி. பதினெட்டு வயதான சமயம் திடீரென்று நோயில் படுத்து விட்டாள். காரணம் தெரியவில்லை.

அரண்மனை வைத்தியர் சொன்னார் : ''எனக்கு வைத்தியமும் தெரியும். வருங்காலமும் தெரியும். தென்கிழக்கே வெகுதூரத்துக்கு வெகுதூரம் ஏழு நாள் பயணமாகும் தூரத்தில் ஓர் ஆரஞ்சு தோப்பு இருக்கிறது. அதிலே ஒரு தனி மரம் ஆயிரக்கணக்கான வெள்ளைப் பூக்களுடன் சிறப்பாகத் தெரியும். எழுநூறு குயில்கள் இரவும் பகலும் இனிய கீதம் இசைத்தபடி இருக்கும். இந்த மரத்தில் ஒன்பதே ஒன்பது ஆரஞ்சுப் பழங்கள் பழுத்திருக்கும். யாராவது ஒரு வீரன் இவற்றிலிருந்து மூன்று ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டு வந்தால், ஒரு பழத்தைத் தின்றதுமே ராஜகுமாரி உடல் குணமாகி எழுந்து உட்கார்ந்து விடுவாள். அடுத்த பழத்தைத் தின்றதும் இப்போது இருப்பதை விட இன்னும் அழகியாகி விடுவாள். மூன்றாவது பழத்தைத் தின்றதும், 'இந்தப் பழத்தைக் கொண்டு வந்தவரையே மணந்து கொள்வேன். வேறு எவரையும் மணக்க மாட்டேன்' என்று சொல்லுவாள்.''

அரசன் உடனே தனது ராஜ்ஜியத்தில் ஏற்ற அறிவிப்பைச் செய்தான்.

அந்தச் சிறிய நாட்டிலே ஒரு மூலையில் ஒரு மூதாட்டி, மூன்று மகன்களுடன் ஒரு பழைய குடிசையில் வாழ்ந்து வந்தாள். கணவன் காலமாகி விட்டதால் பிள்ளைகளை நம்பி வாழ்ந்தாள். மூத்தவர் இருவரும் சோம்பேறிகள். சின்னவன் சிரித்தபடி இருப்பான். யாருக்கும் எப்போதும் உதவ எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பான்.

அரசனின் அறிவிப்பைக் கேட்டதும், மூத்தவன் அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டு வரக் கிளம்பினான். அம்மா அவனுக்கு ஒரு கூடையில் கட்டுச் சோறு கொடுத்தாள். இரவும் பகலும் நாற்பத்தொன்பது நாள் வழி நடந்து ஆரஞ்சுப் பழத் தோட்டத்தை அடைந்தான் மூத்தவன். அந்தத் தோட்டம் பசுமையான இடமாக இருந்தது. ஒரு தனி மரத்தைச் சுற்றி போர்வை போர்த்தின மாதிரி வெள்ளை நறுமணப் பூக்கள்! எழு நூறு குயில்கள் இசைத்தபடி இருந்தன. மரக்கிளையில் ஒன்பது ஆரஞ்சுப் பழங்கள் காய்த்துத் தொங்கின. மூத்தவன் எளிதாக மூன்று பழங்களைக் கொய்து, தனது கூடை

தமிழில் : தம்பி சீனிவாசன்

யில் வைத்துக் கொண்டான்.

அரண்மனை நோக்கி வந்தான். இன்னும் இரண்டு மைல் தூரம்தான் இருக்கிறது என்னும் நேரத்தில் களைத்துப் போய் ஒரு பெரிய மரத்தடியில் களைப்பாற உட்கார்ந்தான். அங்கே ஒரு வயதான தொண்டு கிழவி மெல்ல வந்து, ''என்னடாப்பா, கூடையிலே என்ன?'' என்று தடுமாறும் குரலில் கேட்டாள்.

மூத்தவன் கர்வமாகவும் அலட்சியத்துடனும், மரியாதை இல்லாமலும், ''எதுவானால் என்ன கிழமே. மூன்று தவளைகளைக் கூடையிலே எடுத்துப் போகிறேன். போதுமா?'' என்று எரிந்து விழுந்தான்.

''தவளையா? சரி சரி. அது தவளையாகவே இருக்கட்டும்'' என்றாள் கிழவி.

அன்று மாலைக்குள் மூத்தவன் அரசனைப் பார்க்க அரண்மனை சென்று அவர் முன்னே கூடையை வைத்தான்.

அரசர் ஆர்வத்துடன் மூடி போட்ட கூடையைத் திறந்தார். ''சடக் படக்'' கென்று மூன்று தவளைகள் குதித்து ஓடின. ஆரஞ்சைக் காணோம்.

பொல்லாத கோபத்துடன் அரசர் சிறைக் காவலனைக் கூப்பிட்டு மூத்தவனை சிறையில் அடைக்கச் செய்தான்!

போன அண்ணன் வரவில்லையே என்று இரண்டாமவன் அம்மாவிடம் போனான். அம்மா வழிச் சாப்பாடு கொடுத்தாள். ஏழு வாரம் நடந்து முடிந்ததும் ஆரஞ்சுத் தோட்டத்தைப் பார்த்தான். மிக எளிதாக மூன்று பழங்களைப் பறித்துக் கூடையிலே போட்டுக் கொண்டு, திரும்ப ஊரைப் பார்க்க நடக்கலானான்.

அரண்மனை இன்னும் இரண்டு மைல் தூரம்தான் என்னும் போது அவனுக்கும் ஓய்வு கொள்ள ஆசை வந்தது. அண்ணன் தங்கிய அதே மர நிழலில் அமர்ந்து சற்றே கண் அயர்ந்தான். அதே குடுகுடு கிழவி வந்து பார்த்து, நடுங்கும் குரலில், ''யாரப்பா அது? கூடையிலே என்ன?'' என்று விசாரித்தாள்.


இரண்டாவது பையனுக்கும் பெரியவர்களிடம் மரியாதை கிடையாது. இதமாக பேச்சு பேசத் தெரியாது. ''அதைப் பற்றி உனக்கென்ன கிழட்டுக் கோட்டானே..'' என்று மனத்திலே நினைத்துக் கொண்டு, உரக்க ''மூன்று பாம்புகள் எடுத்துப் போகிறேன் பாட்டி'' என்றான்.

''பாம்பா? அப்படியே அது பாம்பானால் சரி'' என்று சொல்லி விட்டு நகர்ந்தாள் கிழவி.

அன்று மாலையே அரசரைப் பார்த்து கூடையை வைத்து, வணங்கினான் இரண்டாமவன்.

அரசன் ஆர்வத்துடன் கூடை மூடியைத் திறந்தார். மூன்று நாகப் பாம்புகள் சீறிக் கொண்டு வெளியே வந்தன. ஆரஞ்சைக் காணோம்!

அரசர் வெகுண்டு போய், சிறைக் காவலனைக் கூப்பிட்டு இரண்டாமவனையும் அவனிடம் ஒப்படைத்தார்.



கோழி கூவ கோர்ட் தடை!

இலண்டன் கோர்ட் ஒன்று சமீபத்தில் கோழி கூவ தடைவிதித்துள்ளது!

இலண்டனைச் சேர்ந்த ஒருவர் தன் வீட்டில் கோழி வளர்த்தார். இந்தக் கோழி இரவெல்லாம் கூவி தங்கள் தூக்கத்தைக் கெடுப்பதாக வழக்குத் தொடுத்தனர் அண்டை வீட்டார்! வழக்கை விசாரித்த நீதிபதி, காலை 7 மணிக்குள் இக் கோழி, அடுத்தவர் தூக்கத்தை கெடுக்காமல், மெதுவாகக் கூவ வேண்டும் என்று உத்தரவிட்டதுடன், வழக்குக்கான செலவு 5000 பவுன்களை கோழியின் சொந்தக்காரர், வழக்குத் தொடுத்தவருக்குத் தர வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினார்!

- சம்பத் குமாரி



பதினாலு வாரமாகியும் செய்தி யொன்றும் தெரியவில்லையே. அண் ணன்மாரும் திரும்பவில்லையே என்று மூன்றாவது பிள்ளையான சின்னவன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

அம்மா அவனுக்கு ஆகாரமும் ஆசி யும் அளித்தாள். ஏழு வார காலம் பய ணம் செய்தான். கடைசியில் ஆரஞ்சுத் தோட்டத்தை அடைந்தான். தனி மரத் தில் இருந்த மூன்று ஆரஞ்சுப் பழங் களையும் பறித்துப் போட்டுக் கொண்டு வந்த வழியே திரும்பினான்.

அரண்மனை இன்னும் இரண்டு மைல் தூரம்தான் என்ற போது அவனுக் கும் ஓய்வு எடுக்கத் தோன்றியது.

மூத்தவர் இருவரும் ஓய்வு கொண்ட அதே மரத்தடியில் வந்து அமர்ந்தான். அதே குடுகுடு கிழவி மெல்ல வந்து நடுங்கும் குரலில் ''அப்பனே, கூடை யிலே என்ன?'' என்று கேட்டாள்.

சின்னவன் அன்போடு சிரித்தபடி ''மூன்று ஆரஞ்சுப் பழம் வைத்திருக் கிறேன் பாட்டி!'' என்றான்.

''மூன்று ஆரஞ்சா. அப்படியே இருக் கட்டும். இந்தப் பழத்தை வைத் துக் கொண்டு என்ன செய்வாய்?''

''இதை அரண்மனையிலுள்ள அரச னுக்கு எடுத்துப் போகிறேன். அரச குமாரிக்கு குணமாக வேண்டும். இந்த அதிசய ஆரஞ்சுகளைக் கொண்டு வரும் வீரனுக்கு அவளையே கல்யாணம் செய்து தருவதாக அரசர் வாக்களித் திருக்கிறார். ஆனால் பாட்டி, நான் ஓர் ஏழைக் குடிமகன். அதனால் திருமணம் அது இது என்று நான் எதிர்பார்க்க வில்லை. அரசரும் அப்படி இணங்கு வார் என்று தோன்றவில்லை. இருந்தா லும் எதாவது காசு கொடுக்க மாட் டாரா? என் அம்மாவுக்கு உதவியாக இருக்காதா?''


''தம்பி! என் பேச்சை நம்பு! கட்டா யம் நீதான் ராஜகுமாரியை மணந்து

கொள்வாய். அந்த வாய்ப்பு வருவதற்கு அரசன் உனக்கு சில ஏவல்கள் இடு வான். நான் தரும் பொருள்களைப் பெற்றுக் கொள். அவற்றை எளிதில் முடிக்கலாம்'' என்றாள் குடுகுடு கிழவி.

தனது மேலங்கியிலிருந்து கிழவி ஒரு சாட்டையை எடுத்துக் கொடுத் தாள். வெள்ளியால் செய்த ஓர் ஊதல், தங்கத்தால் ஆன ஒரு சிறு மோதிரம் இரண்டையும் கூடக் கொடுத்தாள்.

''இந்தச் சாட்டை ஈக்களை விரட் டும். ஊதல் முயல்களை ஈர்க்கும். இந்த மோதிரத்தை நீ ராஜகுமாரியின் விரலில் அணிவித்ததும் அது இறுகப் பற்றிக் கொண்டு விடும். ''ஐயோ, மோதிரம் என்னை இறுக்குகிறதே! அதிசய ஆரஞ்சு கொண்டு வந்தவரை மணக்க அனுமதி தராவிட்டால் நான் இப்படியே இறந்து விடுவேன் என்று அவள் அலறுவாள்'' என்று அவற்றின் முக்கியத்துவத்தைக் கிழவி விளக்கினாள். இளையவன்





நேரம் பொன் போன்றது

அண்ணல் காந்தியடிகள் பகவத் கீதையை முழுவதுமாக மனப்பாடம் செய்ய விரும்பினார். ஆனால் அதற்கு நேரம் கிடைப்பது அரிதாக இருந்தது. மிகவும் வருத்தப்பட்டார். கடைசியில் அவரே ஒரு வழியைக் கண்டுபிடித்தார். காலையில் பல் துலக்க ஏறக்குறைய பதினைந்து நிமிடங்கள் ஆனது. இரவு படுப்பதற்கு முன் இரண்டு சுலோகங்களை காகிதம் ஒன்றில் எழுதி மறுநாள் காலை தோட்டத்துச் சுவரில் ஒட்டினார். பல் துலக்கிக் கொண்டே பகவத் கீதை சுலோகங்களை தம் மனதுள் படித்தார். 15 நிமிடம் கழிந்தது. பல் துலக்கியானது. பகவத் கீதையும் மனப்பாடம் ஆனது. இப்படியே முழுவதையும் படித்து முடித்தார்.

– சுகாராஜ்

கிழவிக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்பினான்.

அரசர் ஆர்வமாகக் கூடையைப் பிரித்தார். ''ஆமாம், இவை ஆரஞ்சு தான்'' என்று மகிழ்வுடன் மகளுக்கு வழங்கினார்.

முதல் பழத்தைத் தின்றதும் ராஜகுமாரி படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். இரண்டாவது பழத்தைத் தின்றதும் முன்னிலும் அழகியானாள். மூன்றாவது பழத்தைத் தின்றவுடனேயே 'இந்தப் பழங்களைக் கொண்டு வந்தவரையே மணப்பேன். வேறு யாரையும் மணக்க மாட்டேன்' என்றாள்.

அரசன் ஒருகணம் சின்னவனைப் பார்த்தார். 'இவனா நமது மாப்பிள்ளை' என்று அருவெறுப்புடன் நோக்கினார். ''இவன் கேவலம் ஒரு குடியானவப் பையன் இவனா நமது மகளை மணப்பது என்று இகழ்ச்சியாக நினைத்தார்.

''தம்பி, இந்த நாட்டில் உள்ள எல்லா ஈக்களையும் விரட்டி விட்டால் உனக்கே என் மகள்'' என்று நிபந்தனை போட் டார்.

''உங்கள் ஆசியால் இதிலும் வெற்றி பெறுவேன் அரசே!'' என்று பணிவாகக் கூறிய சின்னவன், குடுகுடு கிழவி கொடுத்த சாட்டையை கையில் எடுத்துச் சொடுக்கினான்!

அந்த சாட்டை ஒலி கேட்ட ஈக்கள் எல்லாமே கூட்டம் கூட்டமாக ராஜ்யத்தை விட்டுப் பறந்து போயின!

அதன் பிறகும் அரசனுக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை. ''இந்த நாட்டிலுள்ள எல்லா முயல்களையும் நீ ஒன்று திரட்டி விட்டால், உனக்கே என் மகள்'' என்று புதிய நிபந்தனை இட்டார்.

''செய்தால் போச்சு அரசே!'' என்ற சின்னவன் குடுகுடு கிழவி கொடுத்த வெள்ளி ஊதலை எடுத்து வெளியே வந்து ஊதினான். அவ்வளவுதான். நாட்டில் இருந்த அத்தனை முயல்களும் அரண்மனை வாயிலில் வந்து குவிந்தன.

''இதிலே நான் விரும்பும் முயலைத் தனியே எடுத்துக் கொடு'' என்றார் அரசர்.

''அப்படியே தருகிறேன் அரசே! ஆனால் அதற்கு முன், ஒரு அனுமதி தர வேண்டும். இந்த அழகு கொஞ்சும் தங்க மோதிரத்தை ராஜகுமாரிக்கு அணிவிக்க வேண்டும்'' என்றான் சின்னவன்.

அனுமதி கொடுத்தான் அரசன்.

தங்க மோதிரத்தைச் சின்னவன் ராஜகுமாரி விரலில் போட்டானோ இல்லையோ, அடுத்தகணமே அது சுருங்கி, அவள் விரலை அழுத்தலாயிற்று. அவள் அலறினாள். குடுகுடு கிழவி சொன்னபடியே நடந்தது.

''ஐயோ! மோதிரம் என்னை இறுக்குகிறதே, நான் சாகிறேனே! அதிசய ஆரஞ்சு கொண்டு வந்தவரை மணக்க அனுமதி தராவிட்டால் நான் இறந்து விடுவேன் அப்பா!'' என்று ராஜகுமாரி கூவினாள்.

இதற்கு மேல் சின்னவனைத் தடுக்க முடியாது என்று அரசனுக்குப் புரிந்தது. ''நாளைக்கே திருமணம்'' என்று அனுமதித்தார். உடனே மோதிரம் விரலுக்குச் சரியாக அமைந்து கொண்டது!

தன் அம்மாவுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்து, அரசகுமாரியுடன் ஆனந்தமாக வாழ்ந்தான் சின்னவன்.

பூங்காவனக் கதையரங்கம்

கூறவில்லையே?

ஒரு குரு, தன் நான்கு முட்டாள் சீடர் களுடன் வெளியே புறப்பட்டார். வழியில் குரு தன்னுடைய கைக்குட்டையை எடுக்கும் போது அத்துடன் இருந்த சீப்பு கீழே விழுந்துவிட்டது. அவர் அதைக் கவனிக்கவில்லை. சீடர்கள் பார்த்தனர். ஆனால் யாரும் அதை எடுக்கவில்லை.

சிறிது தூரம் போனதும் ''தம் சீப்பைக் காணவில்லை'' என்றார் குரு. அதற்குச் சீடர்கள், ''வழியில் அது விழுந்து விட்டது, நாங்கள் பார்த்தோம்!'' என்றனர். ''பின் ஏன் நீங்கள் அதை எடுக்கவில்லை?'' என்று கேட்டார் குரு. ''கீழே விழுந்த எதையும் எடுக்க வேண்டும் என்று நீங்கள் கூறவில்லையே?'' என்றனர் அவர்கள்.

குரு, ''அட முட்டாள்களா! இனி, கீழே விழுந்த பொருட்களை எடுக்க வேண்டும்'' என்றார். பிறகு சீடர்கள் வந்த வழியே போய், சீப்பை எடுத்து வந்னர். அப்போது காற்றடித்ததால் உதிர்ந்த இலைகளையும் கூடவே பொறுக்கி வந்தனர்.

இதைக் கண்ட குரு, ''இலைகளை ஏன் பொறுக்கி வந்தீர்கள்?'' என்றார். அதற்கு, ''நீங்கள் தானே கீழே விழுந்த பொருட்களையும் எடுக்க வேண்டும் என்று கூறினீர்கள்?'' என்றார்கள் நான்கு சீடர்களும்.

''அட மடையர்களா, குருவின், சீப்பு, கோட்டு, பை, குடை, ஆகியவற்றை மட்டும்தான் எடுக்க வேண்டும்'' என்றார் குரு.

சிறிது தூரம் சென்றதும் குரு தவறி, ஒரு சேற்றுக் குட்டையில் வீழ்ந்து விட்டார். ஆனால் சீடர்களில் எவரும் அவரைத் தூக்கிவிட வரவில்லை!


குரு கோபமாக, ''மடையர்களா, ஏன் என்னைத் தூக்காமல் இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

சீடர்கள் அமைதியாக, ''கீழே விழுந்தால் எடுக்கச் சொன்னவற்றில் குருவை நீங்கள் சேர்க்கவில்லையே? குரு விழுந்தாலும் தூக்க வேண்டும் என்பதை நீங்கள் கூறவில்லையே?'' என்று கேட்டனர்.

''மடையர்களே, குரு விழுந்தாலும் தூக்க வேண்டும்'' என்றார் குரு.

பிறகே குருவைத் தூக்கினர், அந்த நான்கு முட்டாள் சீடர்களும்!

- பா. ஜெயக்குமார்.



நான்கு முட்டாள்கள்

ஓர் ஊரில் பெரிய முதலாளி, சின்ன முதலாளி என்று இரண்டு முட்டாள் முதலாளிகள் இருந்தனர். அவர்கள் மட்டும் முட்டாள்கள் இல்லை. அவர்களுடைய இரண்டு வேலைக்காரர்களும் கூட முட்டாள்களே!

ஒரு நாள் பெரிய முதலாளி தன் வேலைக்காரனிடம், ''முனியா, நான் பதினேழாவது அறையில் இருக்கின்றேனா என்று பார்த்துக் கொண்டு வா!'' என்றார்.

வேலைக்காரன், 'சரிங்க ஐயா', என்று கூறி விட்டுச் சென்றான்.



சின்ன முதலாளி, தன் வேலைக்காரன் கப்பனிடம், ''இந்தா ஒரு ரூபாய். இதை எடுத்துக் கொண்டு போய் இன்றைய புது மாடல் கார் ஒன்றை வாங்கிவா'' என்றார்.

''அப்படியே செய்கிறேன்'', என்று கூறி விட்டுச் சென்றான் கப்பன்.

இரு வேலைக் காரர்களும் வீதியில் சந்தித்துக் கொண்டனர்.

இருவரில் ஒருவன், ''எங்க முதலாளி சரியான முட்டாள். சாவியைக் கொடுக்காமலே பதினேழாம் எண் அறையில் தான் இருக்கிறோமான்னு பார்த்துட்டு வரச் சொல்லியிருக்கார்'' என்றான்.

இரண்டாமவன், ''என்னுடைய முதலாளியும் சரியான வடிகட்டின முட்டாள்தான். ஒரு ரூபாயைக் கொடுத்து கார் வாங்கி வரச் சொல்லி இருக்கார். இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே. கடைகளெல்லாம் லீவுன்னு கூட அவருக்குத் தெரியவில்லையே?'' என்று வியந்து சொன்னான்.

இவர்களில் யார் பெரிய முட்டாள் என்று உங்களுக்குத் தெரிகிறதா?

- பா. ஜெயக்குமார்.

பரிசு வேறா கேட்கிறே?

''மாலையில் வீட்டுக் கணக்கைச் செய்ய பையில் ஜாமெட்ரி பாக்ஸை தேடிய கோபிக்கு அதிர்ச்சி. பையில் ஜாமெட்ரி பாக்ஸ் இல்லை! யோசித்த போது பள்ளியில் கூட யாருக்கும் ஜாமெட்ரி பாக்ஸ் கொடுக்கவில்லை என்பது நினைவுக்கு வர, அதைக் கவனக் குறைவாக நாம்தான் தவறவிட்டு விட்டோம் என்று எண்ணிக் கொண்டான்.

கணக்குகளைச் செய்ய வேண்டுமே, இல்லையென்றால் ஆசிரியர் அடிப்பாரே என்ன செய்யலாம் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட கோபிக்கு அடுத்த தெருவிலுள்ள ராஜுவின் நினைவு வர, அவனிடம் இரவல் வாங்கி வந்து கணக்குகளைச் செய்தான்.

மறுநாள் பள்ளிக்குச் சென்ற கோபி, தன்னுடைய ஜாமெட்ரி பாக்ஸ் பள்ளி



யில் தொலைந்து விட்டது என்பதையும் கண்டெடுத்தவர்கள் தந்தால் தனது பாக்கெட் மணி சேமிப்பில் இருந்து ஐந்து ரூபாய் பரிசு தருவதாகவும் அறிவிப்புச் செய்தான்.

சிறிது நேரத்தில், கோபியின் வகுப்பைச் சேர்ந்த ராமு, ஜாமெட்ரி பாக்ஸை கோபியிடம் கொடுத்துவிட்டு, அது முந்திய தினத்தன்று மாலை விளையாட்டு மைதானத்தில் கிடைத்ததாகவும், கூறினான்.

ராமு சொன்னது எதையும் காதில் வாங்காமல், கோபி ஜாமெட்ரி பாக்ஸில் தன்னுடைய பொருட்களெல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்.

ராமு நீண்ட நேரம் கோபிக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். எல்லாம் சரியாக இருந்த திருப்தியுடன் தலையை உயர்த்திய கோபி, ராமு அருகில் நின்றிருப்பதைக் கண்டு, ''ஏண்டா இங்கே நின்னுட்டு இருக்கே? அதான் கொடுத்திட்டே இல்ல? போக வேண்டியது தானே?'' என்றான்.

''நீதானே சொன்னே. ஜாமெட்ரி பாக்ஸை எடுத்துத் தருபவர்களுக்கு ஐந்து ரூபாய் பரிசு தரேன்னு? இப்ப கொடுக்காமல் இருந்தால் எப்படி?'' என்று கேட்டான் ராமு.

''ஓகோ! உனக்கு ஐந்து ரூபாய் பரிசு கேட்குதோ? ஜாமெட்ரி பாக்ஸ்ல நான் வைத்திருந்த பத்து ரூபாய் காணவில்லை. அதை நீ எடுத்துக் கொண்டதுமில்லாம பரிசு வேற கேட்கிறியே?'' என்று அபாண்டமாகப் புளுகினான்.

ராமு வகுப்பாசிரியரிடம் போய்ச் சொன்னான். ஆசிரியர் கோபியை அழைத்து விசாரித்தார். கோபி, தன்னுடைய ஜாமெட்ரி பாக்ஸில் பத்து ரூபாய் வைத்திருந்ததாகவும், அதை ராமுதான் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் சாதித்தான். கோபி பொய் சொல்கிறான் என்றறிந்த ஆசிரியர் ராமுவைப் பார்த்து, ''கோபி தன்னுடைய ஜாமெட்ரி பாக்ஸில் பத்து ரூபாய் வைத்திருந்திருக்கிறான். நீ கண்டெடுத்த பாக்ஸில் அது இல்லை. எனவே இது கோபியுடைய பாக்ஸ் இல்லை. ஆகையால் இதை நீயே வைத்துக் கொள். வேறு யாராவது வந்து கேட்டால் கொடு'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

கோபி, 'அறிவித்தபடி பரிசு கொடுக்காமல் ராமுவை ஏமாற்றியதற்கு இது நல்ல தண்டனை' என்று புலம்பியவாறே வீடு போய்ச் சேர்ந்தான்.

- பண்ருட்டி பி. பாலாஜி.

நகை வேண்டாம்!

''அம்மா, எனக்கு நகை வேண்டாம்மா'' என்று அழுதான் கோபி.

''உனக்கு வேண்டாம்னாலும், உனக்குப் போட்டுப் பார்க்கணும்னு



எனக்கு ஆசையா இருக்கே?'' என்று மைனர் சங்கிலியைக் கோபியின் கழுத்தில் போட்டாள் அம்மா.

''எனக்கு இது வேண்டவே வேண்டாம். நான் இதைப் போட்டுண்டு போனால், என் நண்பர்கள் யாருமே என்னை விளையாட்டில் சேர்த்துக்க மாட்டேங்கறாங்க. பயப்படறாங்க. 'போடா கோபி. சங்கிலியை வீட்டில் கழற்றி வைத்து விட்டுவா'ன்னு விரட்டறாங்க'' என்று முரண்டு பிடித்து, சங்கிலியைக் கழற்ற முயன்றான் கோபி.

''அதுகளெல்லாம் வக்கத்த பசங்க. அதனால தங்களுக்கு இல்லாததை வெளியே சொல்ல வெட்கப்பட்டு, இப்படி உன்னை பயங்காட்டறாங்க. இந்த சங்கிலி உனக்கு எத்தனை அழகாய் இருக்கு தெரியுமா? என் பணக்கார பிரேண்டு ஒருத்தி பம்பாய்லேருந்து வரா. அவ வரப்போ நீ மைனர் சங்கிலி போட்டுக்கிட்டிருந்தால் எனக்கு எத்தனை பெருமையா இருக்கும் தெரியுமா? நீ எங்கேயும் தெருவில் விளையாடப் போகாதே. நம்ம வீட்டு வாசலிலேயே ஆடிக்கிட்டிரு'' என்று கோபியைக் கெஞ்சி சம்மதிக்க வைத்துச்சங்கிலியை அணிவித்து அனுப்பினாள் அம்மா.

அரை மணி கூட ஆகியிருக்காது. வாசலில் ஏதோ அலறல் சப்தம் கேட்டது. அம்மா ஓடிச் சென்று பார்த்தாள். கோபி கீழே சாய்ந்து கிடந்தான். கழுத்தில் வெட்டுப்பட்டது போன்ற காயம். இரத்தம்!

''ஆண்ட்டி சைக்கிளில் வந்த ஒரு ஆள், கோபிகிட்ட குனிஞ்சு அவனுடைய சங்கிலியை அறுத்துக்கிட்டுப் போயிட்டான்'' என்று நடந்ததை விவரித்தாள் ஒரு சிறுமி.

சங்கிலி போனது போனதுதான். கழுத்து காயம் ஆற, கோபி பத்து நாட்கள் மருத்துவ மனையில் இருக்கும்படி ஆயிற்று. இப்பொழுதெல்லாம் அம்மா நகை போட்டுக் கொள்ளும்படி கோபியைக் கேட்பதில்லை. தான்கூட அணிவதை மாற்றிக் கொண்டு விட்டாள்.

- கி. கணேஷ்ராம்.



சாய்ந்தாடு!

வானின் மதியே சாய்ந்தாடு
வண்ணப் புறாவே சாய்ந்தாடு
கட்டித் தங்கமே சாய்ந்தாடு
கண்ணின் மணியே சாய்ந்தாடு!

கொய்யா கனியே சாய்ந்தாடு
கோபுர விளக்கே சாய்ந்தாடு
கடலின் அலையே சாய்ந்தாடு
கவிதைக் கனவே சாய்ந்தாடு!

தென்னங் குலையே சாய்ந்தாடு
தென்றல் காற்றே சாய்ந்தாடு
அன்பின் உருவே சாய்ந்தாடு
அறிவின் திருவே சாய்ந்தாடு!

- தங்க சங்கரபாண்டியன்.

இனியாவது வாங்கிக் கொள்!

புவனை கலைச்செழியன்

பள்ளியில் மதுரைக்கு இன்பச் சுற்றுலா போக ஏற்பாடு செய்திருந்தனர். அதில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர் ஒவ்வொருவரும் ஐம்பது ரூபாய் செலுத்த வேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட்டிருந்தது.

சுற்றுலாவுக்குப் பெயர் கொடுத்தவர்களுள் பிரபுவும் ஒருவன். ஆனால், அதற்கு மட்டும் கேட்டவுடன் பணம் கொடுக்க அவன் அப்பாவால் இயலவில்லை.

பிரபு மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவன். பொதுத் தேர்வுக்குரிய கட்டணம் ரூபாய் ஐம்பதை மட்டும் போன வாரமே கட்டி விட்டான். அவன் அப்பா தாசில்தார் அலுவலகத்தில் ஒரு குமாஸ்தா. சம்பளம் வந்த கையோடு தேர்வுப் பணத்தை மகனிடம் தந்து கட்டச் செய்தார்.

பிரபு இப்போது சுற்றுலாவுக்குரிய பணத்தைக் கேட்டு நச்சரித்தான், பெற்றோர் இருவரையும்.

''நாம் இருக்கிற நிலைமைக்கு, நீ சுற்றுலா போய்த்தான் ஆகணுமா?'' அம்மா வினவினாள்.

''என்னம்மா, இப்படிச் சொல்றீங்க? நாலு இடங்களைச் சுற்றிப் பார்த்தால் தானே அனுபவ அறிவு விருத்தியாகும்? அது ஏட்டுப் படிப்பை விட ரொம்ப உசத்தியானது அம்மா!'' என்று கூறி விட்டு, அப்பாவின் முகத்தை ஏறிட்டான் பிரபு.

பையனைப் பார்க்க அப்பாவுக்குப் பரிதாபமாக இருந்தது. மகன் சொல்லிலும் உண்மை இருப்பது அவருக்குத் தெரிந்ததுதான். ஆனால், பாவம் அப்போது மனம் இருந்தும், அவனுக்கு உதவ வழியில்லாததை எண்ணி வருந்தினார். சற்று நேரம் சிந்தனை செய்த அவருக்கு, திடீரென்று ஒரு யோசனை உதயமாயிற்று.

''பிரபு! நான் படிக்க வாங்குகிற ஹிந்து பேப்பரை ஆறு மாசமாய் எடைக்குப் போடாமல் வைத்திருக்கிறோம் அல்லவா? நீ அவைகளை எடுத்து விற்று வருகிற பணத்தைக் கொண்டு சுற்றுலாவுக்குக் கட்டணம் கட்டிக் கொள்! தற்சமயம் அதைத் தவிர, வேறு வழி எதுவும் தோணல்லே எனக்கு'' என்றார்.

''சந்தோஷம் அப்பா! இப்பவே பேப்பர்ங்க அவ்வளவையும் எடுத்துக்கிட்டுப் போய், வழக்கமாய்ப் போடற கடைக்காரர்கிட்டே போட்டுட்டு, காசு வாங்கியாறேன் அப்பா!''

துள்ளிக் கொண்டே அப்பாவின் அறைக்குள் ஓடினான் பிரபு. ஆறு மாதச் செய்தித்தாள்களையும் ஒரு பெரிய பைக்குள் போட்டுத் திணித்துக் கொண்டான். பையைத் தூக்கிக் கொண்டு நேராகக் கடைத் தெரு நோக்கி நடந்தான்.

கடைக்காரர், பிரபு கொண்டு வந்த பத்திரிகைப் பிரதிகளைத் தராசில்

வைத்து எடை போட்டார். மொத்தம் பன்னிரண்டு கிலோ தேறிற்று. கிலோ ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் கணக் கிட்டு, அறுபது ரூபாயை அவனிடம் தந்தார்.


பிரபு மகிழ்ச்சியுடன் வீட்டிற்குள் நுழைந்த போது, அவன் அப்பா அலு வலகத்திற்குப் போய் விட்டிருந்தார். அம்மா மட்டுமே வீட்டில் இருந்தாள்.

''அம்மா, மொத்தம் அறுபது ரூபாய் கிடைச்சுது. இந்தாங்க, பத்து ரூபாயைச் செலவுக்கு வச்சிக்கோங்க. ஐம்பது ரூபாயை நான் சுற்றுலாவுக்குக் கட்டிடறேன். வர்றேன்மா'' என்று சொல்லி விட்டு, புத்தகப் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு, பள்ளிக் கூடம் புறப்பட்டான் பிரபு.

பையனின் பொறுப்புணர்வு அம்மாவைப் புல்லரிக்க வைத்தது.

'தேர்வுக்குப் பணம் கட்ட இன் றைக்குத்தான் கடைசி நாள். நல்ல வேளையாய் ஒரு வாரம் முன்னாடியே நான் அதைக் கட்டி விட்டேன். இப் போது சுற்றுலாவுக்கு மட்டுந்தான் பாக்கி. ஏதோ இந்த மட்டும் அப்பா உதவினாரே!'' - நிம்மதிப் பெருமூச்சு விட்டவனாக நடந்தான் அவன்.





பிரபு தன் வகுப்பறையை அடைந்தான். சோகமே உருவாக, அவன் வகுப்பு நண்பன் ராஜா, தன் இடத்தில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நேற்று ஆசிரியர், "ராஜா, நாளைதான் பரீட்சைக்குப் பணம் செலுத்தக் கடைசி தேதிங்கிறதை மறந்துடாதே! ஞாபகமா காலையிலே பணத்தோட வந்து சேர்ந்திடு. இல்லாட்டிப் போனா, அரசாங்கத் தேர்வை எழுத முடியாது. படிச்ச படிப்பு பூரா வீணாய்ப் போய் விடும்" என்று எச்சரித்தது நினைவுக்கு வந்தது.

ராஜா படிப்பில் புத்திசாலி. ஆனால், பரம ஏழை. அவனுக்கு அப்பா இல்லை. விதவை அம்மா, நாலு வீடுகளில் பற்றுப் பாத்திரங்கள் தேய்த்து, சொற்பக் காசு சம்பாதிக்கிறாள். எப்படியோ வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி மகனைப் படிக்க வைக்கிறாள். திடீரென்று அவளால் ஐம்பது ரூபாய் புரட்டித் தர முடியவில்லை. 'நாளை தருகிறேன், மறுநாள் தருகிறேன்' என்று சொல்லியே இவ்வளவு தினங்களை காலம் ஓட்டி விட்டான் ராஜா.

நேற்று ஆசிரியர் எச்சரித்த போது, பணம் கொண்டு வருவதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டி விட்டுத்தான் போனான் அவன். ஆனால், தன் இயலாமையை எண்ணி மனம் நொந்தவனாக, இன்னது செய்வது என்று புரியாமல், பரிதாபமாக அமர்ந்திருந்தான் இப்போது! அவன் விழிகளில் இருந்து சொட்டுச் சொட்டாக வடிந்த கண்ணீர், அவனது கன்னம் முழுவதையும் ஈரமாக்கியிருந்தது.

பிரபுவுக்கு விவரம் புரிந்தது. இவ்வளவு நேரம் வரை அவனைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்த மகிழ்ச்சி, இப்போது சொல்லாமல் கொள்ளாமல் அவனிடமிருந்து விடைபெற்றது!

பரபரப்புடன் ராஜாவின் அருகில் போய் அமர்ந்தான் பிரபு. நல்லவேளையாக மற்ற மாணவர்கள் இவர்களைக் கவனிக்கவில்லை.

"என்ன ராஜா, பரீட்சைக்குப் பணம் கட்டவில்லையா?" விவரம் தெரிந்திருந்தும், கேட்டு வைத்தான் பிரபு.

"என் அம்மா எப்படி எப்படியெல்லாமோ முயற்சி பண்ணினாங்க. கேட்கக் கூடாதவங்ககிட்டப் போய், பிச்சைக்காரி மாதிரி கெஞ்சினாங்க. ஆனால், எல்லாரும் ஒரேயடியாய்க் கையை விரிச்சுட்டாங்க பிரபு!" அழுதே விட்டான் ராஜா.

பிரபு ஒன்றும் சொல்லத் தோன்றாமல் சற்றே உணர்ச்சிவசப்பட்டான்.

"நான் என் நிலைமையைச் சொல்லி உன்னை வருத்தப்பட வைத்து விட்டேன். அதைப் பெரிசுபடுத்தாதேடா, பிரபு!"

"நான் உன் நண்பன் இல்லையா? என்னிடம் உன் துயரத்தை வெளிப்படுத்திக் கொள்வதில் என்ன தப்பு?" பிரபு கேட்டான்.

"எனக்கு எப்போதும் ஆறுதல் சொல்லி மகிழ்ச்சி தருபவன் நீ ஒருவன்தான் பிரபு. ஆனாலும், முடியக் கூடிய பெரியவர்களுக்கே செய்யத் தோன்றாத இந்த ஐம்பது ரூபாய் உதவியை, உன்னால் மட்டும் எப்படி செய்து விட முடியும்? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? பஞ்சைப் பராரியான எனக்குப்

படிப்பு அரைகுறைதான் என்று விதித்திருப்பதை நான் மனமார ஏற்றுக் கொள்வதுதானே முறை?''

'உயிருக்கு உயிரான நண்பன், பன்னிரண்டு ஆண்டுகள் படித்த படிப்பின் விளைவைப் பெற ஐம்பது ரூபாய்க்கு வழியில்லாமல் தவிக்கிறான். அவன் நிலை அப்படி இருக்கும் போது, சுற்றுலாவில் கலந்து கொண்டு உல்லாசம் அனுபவிக்க ஐம்பது ரூபாயை நான் செலவிடுவதா? மதுரையை இப்போது பார்க்காவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது! ஆனால், மேல்நிலைத் தேர்வை நண்பன் இப்போது எழுதத் தவறினால், அவனுக்கு அநியாயமாக ஓராண்டு வீணாகிப் போகும். உடன் பயிலும் மற்ற பிள்ளைகள் தேர்வு எழுதி வெற்றி பெற்று உயர, தான் மட்டும் முன்னுக்குச் செல்லாமல் பின்தங்கி விடும் துரதிர்ஷ்டத்தை எண்ணி அந்த ஏழை உள்ளம் என்ன பாடுபடும்?'

பிரபுவின் சிந்தனையில் ஒரு திருப்பம்.

ராஜாவுக்கு உதவி செய்து, தன்னிடமுள்ள பணத்தை நல்ல காரியத்திற்குப் பயன்படச் செய்தால் என்ன?

ஆனால், ராஜா அந்தப் பணத்தை வாங்கத் தயங்கினான். ''பிரபு, நீ சுற்றுலாவுக்காகக் கட்ட எடுத்து வந்த பணம் தானே இது? அதைப் போய்...''

''தயங்காதே ராஜா! சுற்றுலாவுக்காகச் செலவாகிறதை விட, இந்தப் பணம் உயிர் நண்பனுக்குக் கைகொடுக்கப் போறதைத்தான் என் மனசு விரும்புது.''

பிரபுவின் உதவியை ஏற்க உறுதியாக மறுத்தான் ராஜா. ''சாரி பிரபு! என்னை மன்னிச்சுக்கோ'' என்றான்.

வழிபாட்டுக் கூட்ட அழைப்பும் மணி தொடர்ந்து ஒலித்தது. வழிபாடு முடிந்த பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைவுடன், ராஜா பின்தொடர முன்னால் நடந்தான் பிரபு.

இறைவணக்கம் முடிந்தது. தலைமையாசிரியர் தம் பேச்சைத் தொடங்கி வழக்கம் போல் மாணவர்களுக்கு அறிவுரை கூறிய அவர், வரப் போகும் பொதுத் தேர்வில் மாணவரின் சிரத்தை குறைந்து விடப் போகிறதே என்று கருதுவதால், சுற்றுலாப் போகும் திட்டம் கைவிடப்பட்டதாகவும் கட்டிய பணத்தை மாணவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவித்தார்.

அறிவிப்பைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்த பிரபு, ''இனிமேலாவது வாங்கிக் கொள்ளலாம் அல்லவா?'' என்று ராஜாவைக் கேட்டான்.


சிரித்துக் கொண்டே ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்ட ராஜா, ''இந்த உதவியை என்றைக்குமே மறக்க மாட்டேன் பிரபு! கடவுள் உன் உருவத்தில் வந்து எனக்கு உதவியிருக்கிறார்'' என்றான்.

உதவி புரிவதால் வரும் உற்சாகத்தை உண்மையாக உணர்ந்து பெருமிதம் அடைந்தான் பிரபு.

''டேய் உங்க தாத்தா பிறந்த நாளைக்கு கேக்கு வெட்டியா கொண்டாடினார்?''

''இல்லைடா. பாக்கு வெட்டி கொண்டாடினார்.''

- வலங்கைமான் நூர்தீன்





''அந்தக் காலத்துல நான் தெரு விளக்குல உட்கார்ந்துதான் படிச்சேன். தெரியுமா?''

''சரிப்பா... இப்ப நம்ம தெரு விளக்கை எரிய வைங்க; நானும் படிக்கக் காட்டறேன்!''

- தோணிபுரம் வீரா

அரை கிளாஸ் பையனா?



“திலீப், மணி ஒன்பதாகப் போறது. இன்னும் என்னடா செஞ்சுகண்டிருக்கே? பள்ளிக் கூடத்துக்கு நாழியாறது. சாப்பிட வாடா.”

சமையல் அறையிலிருந்து அம்மா கத்துவது காதில் விழுந்தாலும் திலீப் பதில் கூட சொல்லாமல், இடத்தை விட்டு அசையாமல் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்தான்.


அவன் வகுப்பு ஆசிரியர் ரொம்பவும் கண்டிப்பானவர். தினமும் ஆங்கிலம் ஒரு பக்கமும், தமிழ் ஒரு பக்கமும் அழகாக, நிறுத்தி, பிழை இல்லாமல் ஒரே சீராக தெளிவாக புத்தகத்தைப் பார்த்துத் தவறாது எழுதிக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறார். மாணவர்கள் அனைவரும் கையெழுத்துச் கவடிகளை ஒழுங்காக வைக்கிறார்களா, பிழை இல்லாமல் எழுதியிருக்கிறார்களா என்று பார்க்க, தனக்கு உதவியாக இரண்டு லீடர்களை வேறு போட்டுக் கொண்டிருக்கிறார். அவர்கள் பார்த்து சொல்ல வேண்டும்! அதற்குப் பிறகுதான் நோட்டில் கையெழுத்தே போடுவார். எந்த மாணவனாவது கையெழுத்து எழுதிக் கொண்டு வரவில்லை என்றாலோ, பிழைகளோடு எழுதினாலோ அதற்கு என்று வைத்திருக்கும் மெல்லிய பிரம்பால் வெளுத்துவிடுவார்.

“எட்டாம் வகுப்புப் படிக்கறேன். இன்னமும் அரைக் கிளாஸ் பையன் மாதிரி என்ன கையெழுத்துப் பயிற்சி வேண்டிக் கிடக்கு?” என்று மனத்திற்குள் தினம் கடுப்படித்துக் கொண்டேதான் திலீப் வீட்டுப் பாடம் எழுதுவான்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை. டீ.வி முன்பு அதிக நேரத்தைச் செலவிட்டு விட்டான். இரவில் அசதி - சோம்பல். அதனால்தான் திங்கட்கிழமையான இன்று அவசரம் அவசரமாகக் கையெழுத்தை எழுதிக் கொண்டிருக்கிறான்.

“டேய் திலீப். தட்டிலே சாப்பாடு ஆறிப்போறது. அப்புறம் சாப்பிடாமல் ஸ்கூலுக்குப் போனா உங்கப்பா திட்டுவார்டா!”

மறுபடியும் அம்மா குரல் கொடுக்க, ''இதோ... வந்துட்டேம்மா!'' என்று பதில் கூறியபடி, எழுதி முடித்திருந்த குறிப்பேட்டை மறக்காமல் பள்ளிக்குக் கொண்டு செல்லும் பையில் வைத்து விட்டுச் சமையல் அறையை நோக்கி விரைந்தான்.



இரண்டு வாரங்கள் ஓடி மறைந்தன. அன்று சனிக்கிழமை காலை நேரம். காப்பியைக் குடித்து விட்டு, தன் வகுப்பு ஆசிரியரை மனத்திற்குள் திட்டியபடியே சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று நாட்களுக்கான கையெழுத்தை குறிப்பேட்டில் எழுதிக் கொண்டிருந்தான் திலீப்.

அப்பொழுது குளித்துவிட்டு துண்டால் தலையைத் துவட்டிய படியே வந்த அவன் தந்தை, ''நான் ரகு மாமா வீட்டுக்குப் போறேன். நீயும் வரயா?'' என்று கேட்டார்.

''நானும் வரேம்ப்பா'' என்று கூறிவிட்டுக் கையெழுத்தை எழுதி முடித்தான். ரகு மாமாவை அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும். எப்பப் போனாலும் அவனுக்குப் பிடித்த ஐஸ் கிரீமை ஃபிரிட்ஜிலிருந்து எடுத்துக் கொடுப்பார். அன்பாகப் பேசுவார். சாப்பிட்டு விட்டுத் தந்தையுடன் கிளம்பினான்.

அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் தந்தையும் மகனும் ரகு மாமா வீட்டை அடைந்தனர். மகிழ்ச்சியோடும் நட்போடும் வரவேற்றார் ரகு. அவர் மனைவி வழங்கிய இனிப்புப் பலகாரங்களோடு ஐஸ் கிரீமையும் சாப்பிட்ட பொழுது மகிழ்ச்சியாக இருந்தது.

டி. ஜானகி

ரகுவின் தங்கைக்குத் திருமணம் நிச்சயமாகி இருந்தது. மேசையின் மீது உயரமாக, கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த திருமண அழைப்பிதழ்களுக்கு, அட்ரஸ் நோட்டைப் பார்த்து திலீப் தானே முகவரி எழுதிக் கொடுத்தான். ''திலீப், உன்னோட கையெழுத்து ரொம்ப அழகா இருக்கு. என் பையன் மனோஜ் நல்லாப் படிப்பான். டென்த் பப்ளிக் எக்ஸாமிலே பள்ளி முதலா வருவான்னு எதிர் பார்த்தேன். பாஸாயிருந்தான். ஆனா எதிர்பார்த்தபடி நல்ல மார்க்கை அவனால வாங்க முடியலை. காரணம், அவனோட மோசமான கையெழுத்துத்தான். நல்ல மார்க் வாங்க நதுக்கு விடையை மட்டும் எழுதினாப் பத்தாது... அந்த பதிலை, தெளிவா அழகா மணி மணியான கையெழுத்திலே எழுதினாத்தான் திருத்தறவங்க முழு மார்க் போடுவாங்க. இப்ப மனோஜ் +2 படிக்கறான். இந்த ஒரு வருஷமா அவனும் தினமும் ஒருபக்கம் கையெழுத்து எழுதிண்டு வரான்.

இப்ப அவன் எழுத்து கொஞ்சம் திருந்தியிருக்கு. நீயும் உன்னோட கையெழுத்தைத் தொடர்ச்சியா இப்படியே அழகான நிலையிலே எழுதிக் கொண்டிரு'' என்று ரகு அங்கிள் சொன்னபோது ரொம்ப மகிழ்ச்சியாக - காற்று உள்ள பலூன் போல மனம் குதித்து ஆடியது.

இப்பொழுதெல்லாம் திலீப் கையெழுத்துப் பக்கங்களை எழுதிக் கொண்டு போகச் சலித்துக் கொள்வதில்லை. ''எட்டாவது படித்தாலும் கூட எங்க ஆசிரியர் கையெழுத்துப் பக்கம் எழுதலேன்னா விட மாட்டார்'' என்று பெருமையாகக் கூறுகிறான்!

பாரத நாடு

அன்பினை எவர்க்கும் அளிக்கிற நாடு
அறிவுடை மனிதர் களிக்கிற நாடு
பண்பினை உலகில் வளர்க்கிற நாடு
பாரதம் என்கிற தாய்த்திரு நாடு.

விந்தைகள் பலவும் புரிகிற நாடு
விரமும் பயிராய் விளைகிற நாடு
சிந்தையில் புதுமை சிறக்கிற நாடு
சீரிய இலக்கியம் பிறக்கிற நாடு.

மானம் உயிரெனக் கருதிடும் நாடு
மக்களின் அரசே பெரிதெனும் நாடு
தானம் செய்கிற தகவுடை நாடு
தர்மம் காக்கிற தனிப்பெரும் நாடு.

உண்மையின் ஒளியாய்த் திகழ்ந்திடும் நாடு
உயிரோ வியம் என விளங்கிடும் நாடு
பண்ணொடு பாடல் பரவிடும் நாடு
பற்பல கலைகள் நிலவிடும் நாடு.


சித்தரின் சாதனை சிறக்கிற நாடு
சிருடன் சாந்தியும் சிரிக்கிற நாடு
புத்தரும் காந்தியும் தோன்றிய நாடு
பூமியில் புகழை ஊன்றிய நாடு.

- பூவிழிவண்ணன்.





இதயம்

ஆழி



மார்பு அறையில், இரண்டு நுரையீரல்களுக்கு நடுவில், செம்பழுப்பு நிறத்தில் சுமார் 220 கிராம் எடையுடன் இருப்பது இதயம். இதயத்தின் தசை இழைநார்களால் அமைந்தது.






மனித இதயத்தின் உள் அமைப்பு: இதயத்தின் உள்ளே நான்கு அறைகள் இருக்கின்றன. மேற்புறம் வலது, இடது என இரண்டு சிறிய ஏட்ரியம் (ஆரிக்கிள்) அறைகள். இவை இரத்தத்தைப் பெறுகின்றன. கீழ்ப்புறம் வலது, இடது என இரண்டு பெரிய வென்ட்ரிக்கிள் அறைகள். இவை இரத்தத்தை மேலெழுப்புகின்றன. இதயம் இரத்தத்தை, வலது ஏட்ரியத்திலிருந்து வலது வென்ட்ரிக்கிளுக்கும், இடது ஏட்ரியத்திலிருந்து இடது வென்ட்ரிக்கிளுக்கும், தன்னுள் இருக்கும் தசை வால்வுகளின் உதவியால் செலுத்துகிறது.

இதயத்தின் வேலை என்ன? அசுத்த இரத்தத்தை உடல் பகுதிகளிலிருந்து வாங்கி, நுரையீரல்களுக்கு அனுப்பி, ஆக்ஸிஜன் கலந்த சுத்த இரத்தமாக மாற்றி, மீண்டும் நுரையீரல்களிலிருந்து பெற்று, மேலெழும்புச் செய்து, அதை உடல் முழுவதும் அனுப்புகிறது இதயம்.




மனிதக் கரு உண்டானபின் 18-வது நாளிலேயே பட்டாணி அளவில் இருக்கும். அப்போதே அந்தக் கருவுக்கு (இதயத்) துடிப்பு உண்டாகி விடுகிறது. இரத்தம் தோன்றாத 21 நாட்களிலேயே கருவில் (இதயத்) துடிப்பு விநாடிக்கு ஒருதடவை துடிக்கிறது.



தாயின்
கருப்பையில்
கரு உருவாகி
35 நாட்களுக்கு
மேல், 56 நாட்
களுக்குள் இதயம்
முழு வடிவம்
பெற்றுவிடுகிறது.


இதயம்
சுருங்கி விரியும்
நிகழ்ச்சிதான்
இதயத் துடிப்பு.
குழந்தை பிறந்தவுடன்
இதயத்துடிப்பு
நிமிடத்திற்கு
140 தடவைகள்.
வயதான ஒருவரின்
இதயத் துடிப்பு
நிமிடத்திற்குச்
சுமார் 76 தடவைகள்.
அதாவது,
ஒரு நாளைக்குச்
சுமார் 1 லட்சம்
தடவைகள்!






ஒரு மனிதன் சுமார்
70 ஆண்டுகள்
வாழ்வதாக
இருந்தால், அவன்
இதயம் சுமார்
255 கோடி
தடவைகள் துடிக்கும்!


இதயத்திற்கு ஓய்வே கிடையாதா?
உண்டு. எப்படி? ஓர் இதயத்
துடிப்பின் நேரம் 0.49 விநாடி
கள். ஒரு துடிப்புக்கும்
அடுத்த துடிப்புக்கும்
இடையேயும் 0.31 விநாடிகள்
இடைவெளி உண்டு.
இந்த இடைவெளிதான்
ஓய்வு!






இரத்த அழுத்தம் என்பது
என்ன? இதயம் சுருங்கும்
போது அதன் அழுத்தம்
120 மி.மீ. Hg. விரியும்
போது அதன் அழுத்தம்
80 மி.மீ. Hg. இந்த அளவில்
மாறுபடும் போது இதயக்
கோளாறுகள் வருகின்றன!

உடலில் மொத்தம் உள்ள
இரத்தம் சுமார் 6 லிட்டர்.
ஆனால், இதே இரத்தம்
இதயத்திற்கு வந்து போவதைக்
கணக்கிட்டால் சுமார் 7500
லிட்டர்! இந்த இரத்தம்
உடலில் எவ்வளவு தூரம்
இதயத்தால் பம்ப் செய்து
செலுத்தப் படுகிறது தெரியுமா?
சுமார் 450 கி.மீ!






ஒரு மனிதன் படுத்து இளைப்பாறும் போது, அவனது இதயம் செலுத்தும் இரத்தத்தை விட, அவன் ஓடும் போது 10 மடங்கு அதிகமான இரத்தம் ஒவ்வொரு நிமிடமும் இதயத்தால் தள்ளப்படுகிறது!



இதயத் துடிப்பை அறிய உதவும் ஸ்டெதாஸ்கோப்பை 1816-இல் கண்டு பிடித்தவர் பிரெஞ்சு டாக்டர் 'ஹையாசிந்த் லேன்னக்.'

டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட் என்பவர்தான், தென்ஆப்பிரிக்காவில், கேப்டவுன் நகரில், முதன் முதல் இதயமாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.




சிறிதாக இருக்கும் உயிரினங்களுக்கு இதயத்துடிப்பு அதிகமாகவும், பெரிதாக இருக்கும் உயிரினங்களுக்கு இதயத் துடிப்பு குறைவாகவும் இருக்கும்!




கோல்டு டிட்:
எடை 8 கிராம்.
இதயத் துடிப்பு:
நிமிடத்திற்கு
1200 தடவைகள்.



பூனை 1.3 கிலோ.
நிமிடத்திற்கு
240 தடவைகள்.



யானை:
எடை 3 டன்கள்.
இதயத்துடிப்பு
நிமிடத்திற்கு
46 தடவைகள்.




திமிங்கிலம்:
எடை 150 டன்கள்.
இதயத் துடிப்பு
நிமிடத்திற்கு 7 தடவைகள்
மட்டுமே!

கிடைமட்டமாக உள்ள பாம்பு, செங்குத்தாக நிறுத்தப்பட்டால், இதயத்தால் மூளைக்குப் போதிய இரத்தம் செலுத்தப்பட முடியாமல் அது மயக்கமடையும்.






உயிரினங்களில் வௌவால் மட்டும் விதிவிலக்கு. வௌவாலை நேராக, தலைகீழாக எப்படி நிறுத்தினாலும் அதன் இதயத்திற்கு எந்த பாதிப்பும் உண்டாவதில்லை!



இதயத்திலிருந்து தலை உயரே அமைந்திருக்கும் போது, இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கும். 6 மீட்டர் உயரம் உள்ள ஒட்டைச் சிவிங்கியின் இதயம், அதன் தலைக்குக் கீழே 3 மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதனால் ஒட்டைச் சிவிங்கிக்கு அதிகமான இரத்த அழுத்தம் உண்டு. அதாவது, மனிதனின் இரத்த அழுத்தத்தைவிட இரண்டு மடங்கு!




மீன்களின் இதயத்தில் இரண்டு அறைகளே உள்ளன. இரத்தத்தை ஒரு வால்வு கட்டுப் படுத்துகிறது. இரத்தம் இதயத்திலிருந்து செவுளுக்குத் தள்ளப் படுகிறது. பிறகு, நேரடியாக ஆக்ஸிஜன் உடலுக்குச் செலுத்தப் படுகிறது. கார்பன் டை ஆக்ஸைடு இதயத்துக்கு வருவதில்லை.



தவளையின் இதயத்தில் 3 அறைகளே உள்ளன. மேலே இரண்டு அறைகள், கீழே ஓர் அறை. கீழ் அறையிலிருந்து இரத்தம் தமனிகள் வழியாக எல்லா உறுப்புகளுக்கும் பாய்கிறது. மேலே இடது அறையின் இரத்தம் ஆக்ஸிஜன் நிறைந்தது. வலது அறையில் ஆக்ஸிஜன் அற்றது.

கடலில் வாழும் கணவாய் மீனுக்கு மூன்று இதயங்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு இதயங்கள் செவுள்களின் அடித்தளத்தில் உள்ளன. அசுத்த இரத்தத்தை செவுள்களுக்குப் பாயச் செய்வது இவற்றின் வேலை. இங்கு ஆக்ஸிஜன் உறிஞ்சப்படுகிறது. பிறகு, இரத்தம் மத்தியில் உள்ள மூன்றாவது இதயத்தை அடைந்து, பல உறுப்புகளுக்கும் செல்லுகிறது.





சிங்கம் எவ்வளவு பலமுள்ள, பயங்கரமான விலங்கு! ஆனால், பாலூட்டிகளில், உடலையும் இதயத்தையும் ஒப்பிடும் போது, சிங்கத்தின் இதயம் மிகவும் சிறியது!



விட்டுக் கொடுக்காமல்
ஒட்டிக் கொள்ளும்
அற்புதமான பசை வெமிக்கால்
பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பொம்மை வீடு கட்டிடுவீர்.
ஃபர்னிச்சர்கள் போட்டிடுவீர். கைக்கடக்கமாய் மெத்தெனப்
பஞ்சடைத்த மிருக பொம்மைகள், பயமுறுத்தும் முகமூடிகள்,
மரப் பாச்சிகள்.... மரம், காகிதம், கார்ட்போர்டு, துணிகள்
இவற்றின் துணையுடனே...
உங்கள் கற்பனையே வேடிக்கைக்கு எல்லை! உங்கள் ஓய்வு
வேளையை உல்லாசமாய்க் கழித்திட சிறந்த வழி.
VAMICOL®
ஆர்ட் அண்டு கிராஃப்ட் அட்ஹெஸிவ்
VAMICOL
ART AND CRAFT ADHESIVE
VAMICOL
வேம் ஆர்கானிக்
கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஸ்கைலின் ஹௌஸ், 85, நேரு பிளேஸ், புது தில்லி-110 019.
React/198/92 Tam



● காகிதத்தில் பொருட்கள் செய்யும் பயிற்சி

ஜப்பானுக்குப் போன



● வெளிநாட்டுச் சிறுவர்களுடன்...

சிறுவன் கணேசரத்தினம், சென்னை டி.ஏ.வி. உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் படிப்பவன். அவன் கடந்த ஆகஸ்ட் மாதம் ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 'ஐந்தாவது ஆசிய நாடுகளின் குழந்தைகள் சந்திப்பு' நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஜப்பான் சென்று வந்துள்ளான்.

ஆசியாக் கண்டத்திலுள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் சிறுவர் சிறுமியர் கலந்து கொள்ளும் மாநாடு இது! நம் இந்தியாவிலிருந்தும் சில சிறுவர் சிறுமியர் இந்த ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற இம் மாநாட்டிற்குச் சென்றிருந்தனர். அவர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரே சிறுவன் கணேச ரத்தினம் தான்! 'ஜூனியர் சேம்பர்' என்கிற ஜேஸீஸ் அமைப்பு (இது உலகளாவிய ஓர் அமைப்பு) கணேச ரத்தினத்தை ஜப்பானுக்கு தமிழ்நாட்டின் சார்பில் அனுப்பியிருந்தது!

பிறநாட்டுச் சிறுவர்களோடு கலந்து பழகுதல், அவர்களது பழக்க வழக்கங்கள், நடைமுறை போன்றவற்றைத் தெரிந்து கொள்ளுதல், உலக அறிவை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற பல நன்மைகள், இப்படிப்பட்ட சிறுவர் சந்திப்பினால் கிடைக்கிறது அல்லவா?

சிறுவன் கணேச ரத்தினம் தனது ஜப்பான் அனுபவங்களைப் பற்றி நம்மோடு பகிர்ந்து கொள்கிறான்!

''முதலில் உன்னை ஜப்பானுக்குச் செல்லத் தேர்ந்தெடுத்த போது உனக்கு எப்படி இருந்தது?''

''ஐயோ! ரொம்ப ஜாலி! ஏரோப்ளேன்ல போறதே பெரிய ஜாலி



* கணேச ரத்தினம்

சின்னப் பையன்!

இல்லையா? அதுவும் ஜப்பான் நாட்டுக்குப் போய், பல நாட்டுக் குழந்தைகளோட பழகறது, ஜப்பான் நாட்டைச் சுற்றிப் பார்க்கறது இதெல்லாம் அத்தனை சுலபமா கிடைக்கக்கூடிய வாய்ப்பா? எனக்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்த போது ரொம்ப சந்தோஷப்பட்டேன்!''


''உனக்கு இந்த வாய்ப்பு எப்படிக் கிடைச்சது?''

''ஜூனியர் சேம்பர் அமைப்பில் எங்கப்பா ஒரு உறுப்பினர். என் அம்மாவும்தான்! இந்த அமைப்பு உலகம் முழுக்கப் பரவின ஒன்று. பல நல்ல தொண்டு செய்து வருகிறார்கள். என் அப்பா, இந்த அமைப்பில் ஓர் ஆக்டிவ் மெம்பர் என்பதால் அவர் மூலமா எனக்கு இந்த வாய்ப்பு கிடைச்சது!''





* கலை நிகழ்ச்சிகள்...



● விண்வெளிக் கூடம்

''தனியா - அப்பா, அம்மா கூட இல்
லாம பத்து, பதினைந்து நாள் ஜப்பான்ல
இருந்தது கஷ்டமா இல்லையா?''

''இல்லவே இல்லை. ரொம்ப ஜாலி
யாத்தான் இருந்தது. ஜப்பான் ஒரு குட்டி
நாடு. அதுவும் நிறைய தீவுகளால் ஆன
நாடு. ஒரு ஊர்லேர்ந்து இன்னொரு
ஊருக்குப் போறதானாக் கூட கடல்
தாண்டித்தான் போகணும். ஆனா இந்தக்
குட்டி நாடு எவ்வளவு முன்னேறி இருக்
கிறது தெரியுமா? அறிவியல் வளர்ச்சி
எக்கச்சக்கம். எங்க பார்த்தாலும் கம்ப்
யூட்டர்தான்! நிறையக் கடைகள்,
தொழிற்சாலைகள், புதுப்புது வாகனங்
கள். ராத்திரி ஆனாக் கூட சாலையெல்
லாம் ரொம்ப கறுகறுப்பா இருக்கு!''

''ஜப்பானில் என்
னென்ன நிகழ்ச்சி களில்
நீ கலந்துக்கிட்டே?''

''நாங்க ஜப்பானுக்
குப் போனதும் ஃபூ
கோகா நகர் என்கிற
இடத்துக்குக் கூட்டிட்
டுப் போனாங்க. அங்க
தான் இந்தக் குழந்தை
கள் மாநாடு நடந்தது.
மாநாடுன்னா உடனே
மீட்டிங் பேசறதுன்னு
நி னை ச் சு க் கா
தீங்க. எல்லா நாட் டுக்
குழந்தைகளும் ஒன்
னாச் சேர்ந்து விளை
யாடுவோம். கலை
நிகழ்ச்சிகள் நடத்து
வோம். பாட்டுப் பாடு
வோம். ஊர் சுத்திப்
பார்ப்போம், சாப்பிட்
டுத் தூங்குவோம். அவ்
வளவுதான்!''

''அவங்க, அங்க
ஏதாவது வகுப் புகள்
நடத்தினாங்களா?''

''அப்படி ஒன்
ணும் இல்லை. ஆனால்
காகிதத்தில் பறவை,
பொம்மை செய்யறது,
படம் வரையறது இந்த
மாதிரி சில கற்றுக்
கொடுத்தார்கள். ஜூடோ கூட கொஞ்
சம் சொல்லிக் கொடுத்தாங்க!''

''ஜப்பான்ல உனக்குப் பிடிச்ச விஷ
யங்கள் என்னென்ன?''

''முதல்ல அந்த ஊர் பஸ்கள்.
எவ்ளோ அழகு தெரியுமா? முழுக்க
ஏ.ஸி. அப்புறம் டீவி கூட பஸ்லயே
இருக்கு. நம்ம ஊர் மாதிரி கண்டக்டர்
எல்லாம் கிடையாது! எல்லாம் கம்ப்
யூட்டர்தான் டிக்கெட் குடுக்குது! ரோடு
ரொம்ப சுத்தம்! பளிச்னு அலம்பி விட்
டாற்போலத்தான் எப்பவும் இருக்கும்!
அப்புறம்... அந்த ஊர் டீவில எக்கச்சக்க
சேனல். விளையாட்டுக்கு ஒண்ணு,
பாட்டுக்கு ஒண்ணு, செய்திகளுக்கு
ஒண்ணு, குழந்தைகள் நிகழ்ச்சிக்காக

ஒண்ணுஇப்படி. அந்த நாட்டு அரசரைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் காட்டறதுக் காகவே தனியா ஒரு சானல் இருக்கு!''

''ஜப்பான் நாட்டுக் குழந்தைகள் யாரோடயாவது பழகினியா?''

''ஓ! நிறைய பேர். அவங்க ஊர் ஸ்கூல்ல எல்லாம், ஆறு மாசம்தான் கிளாஸ். மீதி ஆறு மாசம் லீவு! இங்கே யும் அப்படி இருந்தா எவ்ளோ ஜாலி இல்லே?''

''ஆறு மாசம் லீவா? அப்ப பசங்க விளையாடிக்கிட்டே இருப்பாங்களா?''

''அதான் இல்லை. லீவ் நாட்களில் கூட அவங்க அடுத்த வருஷத்துப் பாடங் களைப் படிக்க ஆரம்பிச்சுடறாங்க! பாட மெல்லாம் இங்க இருப்பது மாதிரி இல்லை! அதிகமா அறிவியல் சம்பந்தப் பட்டதுதான்! சின்னப் பசங்களெல்லாம் ஆராய்ச்சி பண்ணறாங்க!''

''அந்த ஊர் சாப்பாடெல்லாம் எப்படி?''

''ஜப்பான் மக்களுக்கு நூடுல்ஸ், அரிசிதான் முக்கியமான உணவு. ஆனா அதிகமா அசைவம் சாப்பிடறாங்க. ஒரு விஷயம் சொல்லட்டுமா? அங்க யாரும் அதிகமா சக்கரையும் உப்பும் சேர்த்துக் கறதே கிடையாது! தண்ணீர் கூடக் குடிப் பது கிடையாது. தாகமெடுத்தால் 'கோலா'தான் குடிக்கிறார்கள்!''

''ஜப்பான்லேர்ந்து என்னென்ன பொருட்கள் வாங்கிட்டு வந்தே?''

''அம்மாடி! அந்த ஊர் கடைகளில் எதுவுமே 'சீப்' கிடையாது. பயங்கர விலை! எங்கப்பாவுக்கு ஒரு குடை வாங்கலாம்னு விலை கேட்டா முன் னூறு ரூபாய்ங்கறாங்க! ஓடியே வந்துட் டேன்!''

''அங்க உனக்கு வேற என்ன பிடிச்ச விஷயம்?''

''டால்ஃபின் ஷோ ஒண்ணு நடந் தது. மரைன் லாண்ட் என்கிற இடத்தில். டால்ஃபின் மீன்கள் ஆள் உயரத்துக்கு துள்ளிக் குதிக்கறதைப் பார்க்க ரொம்ப ஜாலியா இருந்தது. அப்புறம் ட்யூப் ட்ரெயின். தரைக்கு அடில ரயில்ல போறது எவ்ளோ ஜாலி!''


''மற்ற நாட்டுச் சிறுவர்களோடு பேச கஷ்டமா இருந்திருக்குமே?''

''எனக்கு இங்கிலீஷ் நல்லா பேச வரும். அதனால பிரச்னையே இல்லை. ஆனா, ஜப்பான் நாட்டுப் பிள்ளை களுக்கு இங்கிலீஷே வராது! அவங்க ளுக்கு ஜப்பான் மொழி மட்டும்தான் தெரியும். அதனால நான் ஜப்பான் - இங்கிலீஷ் டிக்ஷனரி வெச்சிக்கிட்டு 'தத் தித் தத்தி'ப் பேசி சமாளிச்சேன்!''

''இந்த ஜப்பான் பயணம் எந்த வகைல உனக்கு உபயோகமா இருந் தது?''


''வெறும் படிப்பு, பாடம்னு இல் லாம வேற நாட்டுக்குப் போய் அந்த ஊர் மக்களோட, அவங்க சூழ்நிலைல பழ கினது ஒரு புதிய அனுபவம்தான்! ஜப்பானியர்களின் சுறுசுறுப்பு எனக்கு ஆச்சர்யமா இருந்தது. 'வேலை செய்ய அவங்க சோம்பல்படுவதே இல்லை! அப்புறம் அந்த ஊர் தொழில்நுட்ப வளர்ச்சி. இதெல்லாம் எனக்குப் புதிய அனுபவம்தானே! நாமும்'ஜப்பான் சிறு வர்கள் மாதிரி நிறைய அறிவியல் விஷ யங்கள் படிக்கணும்னு ஆர்வமே வந்து டிச்சி! கண்டிப்பா படிச்சி, பெரிய ஆளாகி மறுபடியும் ஒரு தடவை ஜப் பான் போய் வரணும்!''

பேட்டி : ஜக்குநாதன்
புகைப்படம் : கோபிநாத்



''அடேங்கப்பா... ஆபரேஷன் பில் இவ் வளவா...?! பகல் கொள்ளையா இருக்கே...! அந்த டாக்டர் முகமூடி போட் டுக்கிட்டு ஆபரேஷன் தியேட்டருக்குள்ளே நுழையும்போதே நினைச்சேன்!''

- ஆர். பிரசன்னா.



நகைச்சுவைப் போட்டி

கோகுலத்தில் நகைச்சுவைப் போட்டி வைத்துப் பல ஆண்டுகளாகிவிட்டன. விரைவில் நகைச்சுவைப் போட்டி ஒன்றை வையுங்கள் என்று பல வாசகர்கள் விடாது எழுதி வருகிறார்கள். இவர்களது வேண்டுகோளுக்கு ஏற்ப நகைச்சுவைப் போட்டி (Jokes) வைக்கப்படுகிறது. ஜோக்குகள் சிறுவர் பத்திரிகையான கோகுலத்தில் வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். ஒருவரே எத்தனை ஜோக்குகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு ஜோக்குடனும் ஒரு கூப்பன் இணைக்கப்பட வேண்டும். பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

நகைச்சுவைப் போட்டி

பெயர்:..

வயது:..


முகவரி:..

....

....

பின்கோடு :..

முடிவு தேதி 15.11.93.





அபிராமியின் அட்டிகை

கூத்தபிரான்

5. தனியாக வந்தாள்!

'சுற்றுலா' என்று கூறிய உடனேயே அபிராமி ஏன் அலறித் துடித்தாள் என்பதைக் குழந்தைகளால் இப்பொழுது ஊகிக்க முடிந்தது. அன்பு இல்ல விடுதிக் குழந்தைகளில் பலர் அபிராமிக்கு நேர்ந்த சோகத்தை எண்ணித் தங்களை மறந்து விசும்ப ஆரம்பித்து விட்டார்கள்.

''அபிராமி! இத்தனை கஷ்டங்களையும் இத்தனை சின்ன வயதில் எப்படியம்மா நீ தாங்கிக்கிட்டே'' என்று விவேகானந்தன் சொல்ல முடியாத துயரத்தோடு கேட்டான்.

''என்ன செய்யறது? இப்பவும் நான் மனதுக்குள் அழுதுக்கிட்டுத்தான் இருக்கேன்'' என்றாள் அபிராமி. ''எங்கப்பாவோட நண்பர் தீபன் மட்டுமில்லேன்னா நான் மனம் தேறி இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்க முடியாது'' என்று தன் கதையை மேலும் தொடர்ந்தாள்.

''தீபன் வீட்லேயிருக்கும் போது என்னைப் பார்க்க யாருமே வரல்லே. அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அவங்க சொந்தக்காரங்களோட நெருங்கிய தொடர்பு கிடையாது. வேலை பார்த்த இடத்திலே அப்பாவுக்குன்னு வேண்டியவங்க ரொம்பப் பேர் இருந்தாங்க. எனக்கு தைரியம் சொல்லித் தேத்தினாங்க. தீபன் என்னை ஒருநாள் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கிட்டுப் போனார். அங்கே எங்க வீட்டுலேயிருந்த நகைகள், பணம், பொருட்களைப் பற்றி விவரம் தெரிஞ்சுக்க கேள்வி மேல கேள்வி கேட்டாங்க. எனக்கு என்ன தெரியும்? 'அப்பாவும் அம்மாவுமே போயிட்டாங்க. அப்படி இருக்கும் போது, ஏன் இப்படி விசாரிக்கிறாங்க'ன்னு எனக்கு அழுகை வந்திட்டுது.

''அழாதேம்மா! கொலைகாரங்களையும் கொள்ளைக் காரங்களையும் பிடிக்க, எல்லா முயற்சியும் எடுத்திருக்கு. நிச்சயம் உங்க வீட்டுப் பொருள்கள் கிடைக்கும்''ன்னு சொன்னார் ஓர் அதிகாரி. மத்தவங்க நின்னுக்கிட்டு இருந்தாங்க. என்கிட்டே ஆறுதலா பேசினவரு மட்டும் உட்கார்ந்திருந்தாரு. அதனாலே அவர் பெரிய அதிகாரியாத்தான் இருக்கணும்னு பட்டுது.

தீபன் கிட்டே கூட அந்த அதிகாரி, ''கவலைப்படாமே போங்க. மனசு ஒடிஞ்சு போயிடாம பத்திரமா இந்தச் சிறுமியைப் பார்த்துக்குங்க. மேலே தகவல் கிடைச்சா சொல்லி அனுப்புறோம்''னு சொன்னாரு.

எல்லாம் நடந்து முடிஞ்சு, ஒரு வாரத்துக்கு அப்புறம் நான் பள்ளிக்குப் போக ஆரம்பிச்சேன். பள்ளிக் கூடத்தில் தலைவரிலேருந்து ஆயாவரை, என் வீட்டுக்கதையை, பேப்பர்ல பார்த்தேன், கேள்விப்பட்டேன், அவங்க சொன்னாங்க, இவங்க சொ ன் னா ங் க, அப்படி.... இப்படின்னு சொல்லி அனுதாபம் தெரிவிச்சு என்னைப் பேச முடியாம செய்துட்டாங்க.

''அன்னிக்கு பள்ளியிலேருந்து வந்து, சீருடையை மாத்திக் கிட்டிருந்தேன். அப்போ.... தீபன் சாரும் அவர் மனைவியும் பேசிக்கிட்டு இருந்தது காதிலே விழுந்தது.

''ஆமாம் உங்க நண்பர் பொண்ணு இங்கேதான் இருக்கப் போகுதா? நாம தான் பார்த்துக்கப் போறமா?''

''ஆமாம். பாவம் அந்தப் பொண்ணுக்குன்னு யாரு இருக்கா? எங்கே போகும்?''

''நமக்குன்னு ரெண்டு பொண்ணுங்க இருக்கு. அதுங்க சாதாரண ஸ்கூல்லதான் படிக்குது. இந்தப் பொண்ணுக்கு கான்வெண்டுக்கு ஒரு மாசம் கட்டற சம்பளம், உங்க மாத சம்பளத்தில் முக்கால் பங்குங்க! இது எத்தனை நாளுக்கு ஓடும்? நம்மால் முடியுமா'ன்னு தீபன் மனைவி கேட்டாள்.

இப்போ இந்தப் பேச்சு எதுக்கு....? நான் ஏதாவது கடன் வாங்கி சமாளிக்கறேன். போயி வேலையைப் பாரு'ன்னு சொல்லிட்டு தீபன் சார் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்.

''தீபன் சார் மனைவியைக் குற்றம் கூற முடியாது. அவங்க எளிய வருமானமுள்ளவங்க. அவங்க கிட்ட இருந்துகிட்டு நான் பழையபடி பெரிய கான்வென்டில் தொடர்ந்து படிக்க முயன்றால் முடியுமா?

மேற் கொண்டு என்ன செய்வது என்பதை ராத்திரி பூரா யோசனை செய்துகிட்டே இருந்தேன். அவங்களுக்கு சுமையா இருக்கக் கூடாதுங்கற முடிவுக்கு வந்தேன். விடியற்காலையில மத்தவங்க எழுந்திருக்கிறதுக்கு முன்னாடி எழுந்தேன். வாசலைப் பெருக்கி, கோலம் போட்டேன். எங்கம்மா நல்லா கோலம் போடுவாங்க. எனக்கும் அப்பப்போ சொல்லிக் கொடுத்திருந்தாங்க. ராத்திரி சாப்பிட்ட பாத்திரங்களையெல்லாம் நல்லா தேய்ச்சுக் கழுவி வெச்சேன். சமையல் அறையை நல்லாக் கூட்டினேன். காஸ் அடுப்பைத் துடைச்சு சுத்தமா வெச்சேன். பால் வந்தது. காய்ச்சினேன். செல்லமா வளர்ந்தாலும் வீட்டு வேலைகளை ஒண்ணு விடாம, அம்மா எனக்குக் கண்டிப்புடன் சொல்லிக் கொடுத்திருந்தாங்க. ட



போட்டுத் தயாரா எடுத்து தீபன் சாரையும், அவர் மனைவியையும் எழுப்பினேன். அவங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சந்தோஷமாகவும் இருந்தது.

''ஏம்மா இதெல்லாம் நீ செய்யறே? நீ படிம்மா. நான் பார்த்துக்கிறேன். ஸ்கூலுக்குப் போகணும். அதுக்கு ரெடி பண்ணிக்க'ன்னு தீபன் மனைவி கனிவா சொன்னாள்.

''நான் பிடிவாதமா, ''இல்லைம்மா. இனி நான் பள்ளிக்குப் போகப் போறதில்லே. படிச்சது போதும். நான் உங்களுக்கு உபயோகமா இருந்து, வீட்டு வேலைகளையெல்லாம் கவனிக்கப் போறேன்னு'' அழுத்தமா சொன்னேன்.

''தீபன் சாருக்கு இது பிடிக்கவேயில்லை. அவரும் என்கிட்டே எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். நான் என் அப்பா மாதிரி. ஒரு முடிவு எடுத்தா அதை மாத்திக்கவே மாட்டேன். கண்டிப்பு, உறுதி, நேர்மை, ஒழுங்கு இதுக்குத்தான் முதலிடம் கொடுப்பார் அப்பா. அவரோட பொண்ணு நான். என் புத்தியும் அப்படித்தானே இருக்க வேண்டும்?

''இந்தச் சமயத்திலே வீட்டு வேலை செய்துக்கிட்டு வந்த ஆயா காய்ச்சல்லே படுத்து நின்று விடவே எனக்கு அது ஒரு வகையிலே சாதகமாப் போச்சு. அந்த ஆயா செய்த துணி துவைக்கிறது, காயப் போடறது, மடிக்க வைக்கிற வேலைகளை எல்லாம் நானே சந்தோஷமா செய்து, அந்த வீட்டிலே என் காலத்தை ஓட்டிக் கிட்டிருந்தேன். அந்தச் சமயத்திலேதான் அன்பு இல்லம் பத்தின கட்டுரை ஒன்று ஒரு மாதப் பத்திரிகையிலே பேட்டியா வெளி வந்தது.



''தீபன் வீட்டில் நூல் நிலையத்திலிருந்து எல்லாப் பத்திரிகைகளும் வரும். அதிலே நிச்சயமா, ஒண்ணு ரெண்டு தமிழ்ப் பத்திரிகைகள் எனக்காக இருக்கும். அன்பு இல்லம் பற்றி வெளியான பத்திரிகையை நான் படிச்சேன். எனக்குப் புது நம்பிக்கை பிறந்தது. அன்பு இல்ல விலாசத்துக்கு; அதோட நிர்வாகத்துக்கு விவரமா ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். உடனே புறப்பட்டு வரச் சொல்லி பதில் கடிதமும் வந்தது.

''அந்தக் கடிதம் தீபன் சார் கையிலேயா கிடைக்கணும்? என் பேரு போட்டுக் கடிதம் வரவே அவருக்குள்ளே ஒரு குழப்பம். இந்த விலாசத்திலே நான் இருக்கிறது தெரிஞ்சு எழுதினது யாராக இருக்கும்கறதைத் தெரிஞ்சுக்க ஆவல் அதிகமானதால், கடிதத்தைப் பிரிச்சுப் பார்த்தார். விவரம் பூராத் தெரிஞ்சுக்கிட்டார். நேரே கடிதத்தோடு என்கிட்டே வந்து, ''ஏம்மா எங்களை எல்லாம் விட்டு ரொம்ப தூரம் போறதா முடிவு பண்ணிட்டியா? இங்கே உனக்கு என்னம்மா நாங்க குறை வெச்சோம்? நீயா தானேம்மா படிக்கப் போகாம, வீட்டு வேலைகளை எல்லாம் உன் தலையிலே தூக்கிப் போட்டுக்கிட் டே'ன்னு வருத்தமா சொல்லி கடிதத்தை என் கிட்டே கொடுத்தார். படிச்சேன்.

''நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் ஒண்ணுமில்லே. எனக்கும் எல்லாத்தை யும் மறக்க, ஒரு மாற்றம் வேணும்னு நினைச்சேன். அப்போத்தான் பத்திரி கையைப் பார்த்து எழுதிப் போட் டேன்'னு சொன்னேன்.

''எனக்கென்னவோ நீ எங்களை எல்லாம் விட்டுப் போறது பிடிக்கல்லே. நல்லா யோசனை பண்ணி முடிவு

செய்''னு நீபன் சார் அவர் எடுத்த முடிவிலேயே நின்னாரு.

''நான் அவரை உட்கார வைத்து, அவரது பொருளாதார நிலை, என்னுடைய வரவால் அதிகரித்துள்ள பணச் சுமை எல்லாவற்றையும் விளக்கி, என்னால் அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எதிர் காலம் பாதிக்கப்படக் கூடாது என்பதையும், விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் அவர் என்னை வந்து பார்க்கலாம் என்பதையும் தெளிவு படுத்தி சம்மதிக்க வைத்தேன்.

''நான் வர வாரம் ஆபீசுக்கு லீவு போடறேன். உன்னைக் கொண்டு போய் விடறேன்'னாரு.

''எனக்காக நீங்க எதுக்கு லீவு போடணும்? நான் பாப்பா இல்லே. படிச்ச சிறுமி. தைரியமா தனியே போயிக்கிறேன். உங்க ஆசீர்வாதம் மட்டும் இருந்தா போதும்''னு சொன்னதைக் கேட்டவுடனே நீபன் சார், உன் இஷ்டப்படியே செய்'னு சொல்லி, நான் புறப்பட எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

''என்னை வழியனுப்பக் குடும்பத்தோடு ஸ்டேஷனுக்கு வந்தார் நீபன்சார். கைச் செலவுக்குப் பணம், எப்படிப் போகணும், எங்கே இறங்கி ரயில் மாறணும், எல்லாத்தையும் விவரமாக் குறிச்சுக் கொடுத்தார். அம்மா, அப்பா, சொத்து எல்லாத்தையும் இழந் திட்டு ஆதரவை எதிர் பார்த்து, புதுசா வாழ்வைத் தொடங்க நம்பிக்கையோட இங்கே வந்திருக்கேன். கற்றுலான்னு நீங்க சொன்ன ஒரு வார்த்தை என்னைப் பத்தி எவ்வளவு விஷயங்களை நீங்கள் தெரிஞ்சுக்கும் படியா செய்திட்டுது பார்த்தீங்களா?'' என்று சொல்லி நிறுத்தினாள் அபிராமி.

மனதிலிருந்து பெரிய கனத்தைக் கீழேயெடுத்து வைத்ததால் அபிராமியின் உள்ளத்தில் தெளிவும் நிம்மதியும் ஏற்பட்டது.

அபிராமியின் கதையைக் கேட்ட பிறகு அன்பு இல்லக் குழந்தைகளுக்கு அபிராமியின் மேல் இருந்த மதிப்பு மேலும் உயர்ந்ததோடு மட்டுமில்லாமல், அவள் எல்லோர் மனதிலேயும் நல்லதோர் இடத்தையும் பிடித்துக் கொண்டாள்.

எல்லோரும் அன்று தூங்கப் போன போது நள்ளிரவு ஆகிவிட்டது.

விடியற்காலை நேரம். முன்பே எழுந்து விட்ட சில பிள்ளைகள் பள்ளி விடுதி வெளியோரமாகப் பார்த்தார்கள். அவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

(தொடரும்)

துருவங்கள்




டேராடூனில் ஒரு பல்கலைக் கழகத்தில் மாணவன் ஒருவன் புறாவின் உதவி கொண்டு பரீட்சையில் காப்பியடித்தான். அடிக்கடி புறா இறக்கைகளை அடித்துக் கொண்டு வருவதும் போவதுமாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டு, மேற்பார்வையாளருக்கு சந்தேகம் ஏற்பட்டு அந்த மாணவன் கையும் களவுமாகப் பிடிபட்டான்.

பஞ்சாப்பில் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் குரு நானக் தார்விவால் கல்லூரியில் கேள்வித்தாள்கள் முன் கூட்டியே கொடுக்கப்பட்டால் கூட உரிய நேரம் ஆன பிறகுதான் மாணவர்கள் பிரித்துப் பார்ப்பார்கள்! அதே போல் பரீட்சை நேரம் முடிந்து மணியடித்தவுடனேயே ஹாலை விட்டுப் போவார்கள். பரீட்சை ஹாலுக்கு மேற்பார்வை யாளர்களே கிடையாது. அவர்கள் காப்பியடிக்க வும் மாட்டார்கள்.

இப்படி இரண்டு துருவ மாணவர்கள்! நீங்கள் எந்த துருவமாக இருக்கப் போகிறீர்கள்?


-ஆர். ஸ்ரீகாந்தன்.

புத்தகம் யாருடையது?



கருத்து: திரு. சிவா

நான்தான் கம்ப்யூட்டர்!



விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனைகளில் கம்ப்யூட்டர் குறிப்பிடத்தக்கதாகும். கம்ப்யூட்டர் இல்லாமல் 'கையும் ஓடலை, காலும் ஓடலை' என்ற நிலையில் இருக்கிறோம்.

இந்தக் கம்ப்யூட்டர் எப்படி உருவானது, வளர்ச்சி பெற்றது எவ்வாறெல்லாம் நமக்கு உபயோகமாகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.


வானத்து நட்சத்திரங்களையும், கிரகங்களையும் ஆராய்ச்சி செய்ய கணித சாஸ்திரம் அவசியமானது.

கொஞ்ச காலத்திற்கு முன்பெல்லாம், எல்லா கணக்குகளையும் மூளையை உபயோகித்துத்தான் போட வேண்டி இருந்தது.

இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லஸ் பாபேஜ் என்ற விஞ்ஞானி, வான ஆராய்ச்சிக்காக கணித மேதைகள் அடங்கிய ஒரு படையையே தம்முடன் வைத்திருந்தார். அதில் ஒருவர் ஒரு சிறுபிழை செய்தாலும், மொத்த கணக்கு முடிவுகளுமே தவறாகி விடுகிற நிலை. இந்த சிரமத்தைத் தவிர்க்க, 'கணக்கு போடுகிற மெஷினை நாமே கண்டு பிடித்தால் என்ன?' என்று நினைத்தார் பாபேஜ்.

1822 ஆம் ஆண்டில் டிபரன்ஸ் என்ஜின் (Difference Engine) என்ற கருவியை அவர் தயாரித்தார். அதன் திருத்திய பதிப்பாக அனலிட்டிகல் என்ஜின் (Analytical Engine) என்ற கருவியை உருவாக்க விரும்பினார். அவருடைய காலத்தில் அத்தனை தொழில் நுணுக்கங்கள் இல்லாமையால் அவரது ஆசை நிறைவேறாமல் இருந்தது.

இரண்டாம் உலகப் போர் வந்த போது ராணுவத்திற்குப் புதிய ஆயுதங்கள் தேவைப்பட்டன. பெரிய நீளமான துப்பாக்கிகளும், குண்டு வீசிகளும், நீர்மூழ்கிகளும் நடைமுறைக்கு வந்தன. அவை தூரத்திலிருந்து செயல்படும் போது அவற்றைத் திருப்பித் தாக்க என்ன



வழி? ராடார் (Radar) என்ற சாதனம் கண்டு பிடிக்கப்பட்டது. அது எதிரிகள் எந்தத் திசையில், எந்த வாகனத்தில் வருகிறார்கள் என்பதைக் காட்டியது. அதை வைத்துத் தான் எதிரிகளின் இலக்கைத் தாக்கினார்கள். அதற்கெல்லாம் துல்லியமான கணக்கிடும் முறை தேவைப்பட்டது.


அமெரிக்கர்கள் ஏராளமான பணத்தை செலவழித்து எனியாக் (Eniac) என்ற கம்ப்யூட்டரைத் தயாரித்தனர். நூறு சதவீதம் துல்லியமாகக் கணக்கு போட்ட அந்த மெஷின் 1946 - பிப்ரவரி 15ந் தேதி பிறந்தது.

'IBM' (International Business Machines) என்ற நிறுவனம்தான் சமீப காலம் வரை கம்ப்யூட்டர்களைத் தயாரித்து மார்க்கெட்டில் விட்டது. இப்போது பல கம்பெனிகள் கம்ப்யூட்டர் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அவை புதுப்புது வடிவிலும் வரத் தொடங்கி உள்ளன.

கம்ப்யூட்டர் நூறு சதவீதம் துல்லியமாகக் கணக்கிடக் கூடியது. எத்தனை முறை சோதித்தாலும் சரியான முடிவுகளையே காட்டும். மனிதர்கள் கூட அத்தனை துல்லியமாகக் கணக்கிட முடியாது. தொடர்ந்து பல முறை கணக்கு போடும்போது, நாம் களைப்பின் காரணமாகத் தவறுகள் செய்து விடுவோம். ஆனால் கம்ப்யூட்டர் களைப்படைவதே இல்லை.

ஒருவர் 4 முதல் 6 கணக்கீடுகளைத் தான் ஒரு வினாடியில் செய்ய முடியும். நவீன கம்ப்யூட்டர் 10,00,000 கணக்கீடுகளை நொடியில் செய்து முடிக்கிறது.

நம்மால் ஒருநூறு பெயர்களை அல்லது எண்களைத்தான் நினைவில் வைத்துக் கொள்ள முடியும். ஆனால் சில மாதங்களில், ஏன், சில நாட்களிலேயே கூட அதை மறந்து போவோம். கம்ப்யூட்டர் தன்னுள் ஊட்டப்பட்ட ஒரு செய்தி அல்லது தகவலை அது எத்தனை வருஷமானாலும் நினைவில் வைத்



திருக்கும்.

கம்ப்யூட்டருக்கும், நமக்கும் என்ன வித்தியாசம்? அது நம்மைப் போல் சுயமாக சிந்திப்பதில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அது மற்ற மெஷின்களைப் போலத்தான்.

கம்ப்யூட்டரின் பாகங்களில் இன்புட் யூனிட் (Input Unit) என்று ஒன்று. இதன் மூலம் புள்ளி விவரங்கள் ஊட்டப் (Feed) படுகின்றன. அது கொடுக்கப்பட்ட தகவல்களை மின் துடிப்புகளாய் மாற்றித் தரும்.

சென்ட்ரல் ப்ராஸஸிங் யூனிட் (Central-processing Unit) என்பது நினைவாற்றல் (Memory), கட்டுப்பாடு



(Control) மற்றும் கணித எண்களை (Arithmatic) உள்ளடக்கியது.

அவுட் புட் யூனிட் (Output Unit) என்பது நினைவாற்றல் பகுதியிலிருந்து புள்ளிகளை (Data) நாம் படிக்கக்கூடிய விதமாய் வெளிப்படுத்துகிறது.

இன்புட் தொடர்பான கருவிகளையும், சேமிப்பு (Storage) பகுதியையும் கொண்டது ஹார்ட்வேர் (Hardware) எனப்படும். அது எலக்ட்ரிகல் மற்றும் மெகானிக்கல் பாகங்களைக் கொண்டிருக்கிறது.

நாம் தரும் எல்லா விவரங்களையும் (Program) கிரகித்து, பல்வேறு வேலைகளைச் செய்து முடிப்பது சாஃப்ட்வேர் (Software) எனப்படும்.


பொதுவாக கம்ப்யூட்டர்கள் மூன்று வகைப்படும். அனலாக் (Analog) எவ்வளவு என்பதைக் காட்டும். டிஜிட்டல் (Digital) எத்தனை என்பதைக் காட்டும். ஹைபிரிட் (Hybrid) மேற்கூறிய இரண்டின் இணைப்பு.

கம்ப்யூட்டர் ஒரு சக்தி வாய்ந்த கருவி. இது குறுகிய காலத்தில் நிறைய மாற்றங்களையும், வளர்ச்சியையும், பெற்று வருகிறது. இப்போது மிகவும் சிக்கனமாக இவற்றைத் தயாரிக்கிறார்கள்.

கம்ப்யூட்டர் இல்லா விட்டால் மனிதன் சந்திர மண்டலத்தில் காலடி வைத்திருக்க முடியாது. ராக்கெட் செல்ல வேண்டிய சரியான பாதை எது, எங்கே இறங்க வேண்டும் என்பதிலிருந்து விண்வெளிப்பயணத்தை முடித்துத் திரும்புகிறவரை கம்ப்யூட்டர் தான் பெருந்துணை புரிகிறது.

மேல் நாடுகளில் விமானப் பயணத்திற்கான முன்பதிவு வேலைகளை கம்ப்யூட்டர்தான் கவனிக்கிறது. 1981 - ல் இருந்து நமது 'ஏர் இந்தியா' கம்பெனியும் கம்ப்யூட்டரை அறிமுகப் படுத்தி விட்டது. தற்போது இந்திய ரயில்வேயிலும் முன்பதிவுப் பணிக்கு கம்ப்யூட்டர் வந்தாயிற்று. காவல் துறையிலும் கம்ப்யூட்டர் புரட்சிகளைச் செய்துள்ளது. ஒரு இடத்தில் குற்றம் நிகழ்ந்தால் அது சம்பந்தமாகப் பல குற்றவாளிகள் பற்றிய விவரங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்கிறார்கள். போலீஸார் கொடுக்கிற துப்புகளை அந்தத் தகவல்களுடன் ஒப்பிட்டு குற்றவாளிகள் பற்றிய ஒரு சின்ன லிஸ்டை கம்ப்யூட்டர் தொகுத்து குற்றவாளியைப் பிடிப்பதில் போலீஸாரின் பணியை எளிதாக்கி விடுகிறது.

வான ஆராய்ச்சியிலும் குறிப்பாக மழை, புயல், வெள்ளம் பற்றி முன் கூட்டியே அறிந்து கொள்ளவும் கம்ப்யூட்டர் உதவுகிறது. ஜனமுற்றவர்கள்




வாழ்வை மேம்படுத்துவதிலும் கம்ப்யூட்டர் பெரும் பங்கு வகிக்கிறது. கை, கால் விளங்காதவர்களுக்கும், பேச இயலாதவர்களுக்கும் உதவக்கூடிய வகையில் கம்ப்யூட்டர்கள் தயாரிக்கப்படுகின்றன.

மருத்துவத் துறையில் கம்ப்யூட்டரின் சாதனை அபாரமானதுதான். ஒரு ஸ்பெஷலிஸ்டின் வேலைகளை கம்ப்யூட்டரே கவனிக்கிறது.

கார் தயாரிப்பிலும் புதிய டிஸைன்களைக் கம்ப்யூட்டரைக் கொண்டுதான் வடிவமைக்கிறார்கள்.

காரின் வேகத்தை சாலைக்கேற்ப அட்ஜஸ்ட் செய்து 'ட்ரைவ்' செய்கிறவருடன் பேசவும், அவர் இடும் கட்டளைகளை நிறைவேற்றவும் கம்ப்யூட்டர் உதவுகிறது.

விளையாட்டுத் துறையிலும் கம்ப்யூட்டர் புகுந்து விளையாடுகிறது. விளையாட்டு வீரரின் உணவு மற்றும் பயிற்சி சம்பந்தமான நல்ல யோசனைகளை அது தருகிறது. இதனால்தான் சிறிய நாடுகளாலும் கூட இதன்படி பயிற்சி பெற்று ஒலிம்பிக்கில் தங்க மெடல்களைத் தட்டிச் செல்ல முடிகிறது.



அமெரிக்க, 'செமாடெக்' ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள், கம்ப்யூட்டருக்குத் தேவையான மிக நுண்ணிய சிப் (Chip) களை, அதாவது ஒரு அங்குல நீளத்தில் 75000 சிப்களுக்கு மேல் வரிசைப்படுத்தக் கூடிய விதமாக, தயாரிக்கிறார்கள்.

மிகச்சிறிய பர்ஸனல் கம்ப்யூட்டருக்குத் தேவையான டிஸ்க் (Disc) ட்ரைவ்களை சிங்கப்பூரில் தயாரிக்கிறார்கள். இவை ஜப்பான், தென் கொரியா, தைவான் நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

ஒற்றை அணு (Atom)விலான சுவிட்சுகளை IBM நிறுவனம் தயாரிக்கிறது.

நோட்புக் சைஸிலான பர்ஸனல் கம்ப்யூட்டரும் வந்துவிட்டது. பாக்கட் சைஸ் மற்றும் உள்ளங்கை அளவிலான 'PICO' என்கிற சக்திவாய்ந்த கம்ப்யூட்டர்கள் மார்க்கெட்டில் முதலிடம் பெற்றுவிட்டன.

ஸ்கூப்மேன் டிஜிடல் மைக்ரோ ரிகார்டர், 'கின்னஸ்புக்'கில் இடம் பெற்று விட்டது. இதிலுள்ள நாடா 21.5 மி.மீ X 30.5 மி.மீ. அளவிலானது. 90 நிமிடங்கள் ஓடக்கூடியது.


பாக்கட்சைஸ் செல்லுலார் ஃபோனை தாங்களும் தயாரிக்கவிருப்பதாக அமெரிக்க 'மொட்டாரோலா' நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் எடை 7.7 அவுன்ஸ் இருக்குமாம்.

தபால்தலை அளவேயான வீடியோ காமிராவும் வந்துவிடும் என்கிறார்கள்! இன்னும் என்னென்ன பண்ணப் போறதோ இந்த கம்ப்யூட்டர்!


– தேவராஜ்

சிரிப்பு



பரீட்சையில் பாஸானா உனக்கு சைக்கிள் வாங்கித் தர்றேன்
சைக்கிள் கிடைக்காது என்பதை நேரிடையா சொல்ல வேண்டியதுதானே?


மத்தியான நேரத்துல, வெயில்ல அலையாமல் உங்க பையன் சமத்தா தூங்கறானே, எப்படி?
பாடம் படிக்கிறியா, படுக்கிறியா -ன்னு கேட்பேன்; உடனே படுத்துக்கிடுவான்!


எங்க ஊர் ஆற்றில் படகு ஓட்டறாங்க..
இதென்ன பெரிய விஷயம்... எங்க ஊர் ஆற்றில் நாங்க சடுகுடுவே ஆடறோம்..!


முதியோர் கல்விக்குப் போன தாத்தா ஏன் அழுதுண்டே வராரு..?!
அவருடைய பல்பத்தை யாரோ திருடிட்டாங்களாம்!
—கே. பலராமன்



உலகிலுள்ள கண்டங்கள் யாவை...?
ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கணக்கு...!





முகம்மது கண்டெடுத்த புதையல்!
கதை: ஆனந்தி
படம்: ஜெ...
என்ன ஏகளை?
அசடு!
நீதான் அசடு
அசடுகள் எல்லாருமே முழு அசடு இல்லை. கெட்டிக்காரங்க எல்லாரும் அசட்டுத்தனமே பண்ணாமலும் இல்லை..
ஒரு கதை சொல்லட்டுமா? துருக்கி தேசத்துக் கதை!
ஹை ஜாலி!
சொல்லு! சொல்லு!
சுலைமான், முகம்மது - அண்ணன் - தம்பி, - மாடு மேய்க்கச் சென்றனர்....
அண்ணா! ஒரு யோசனை!
முட்டாள்! உனக்கு யோசனை ஒரு கேடா!
தம்பி முகம்மது சொன்னான் -
நீ சும்மா என்னைத் திட்டுறே... நாம மாடுகளைப் பங்கு போட்டுக்கொண்டு பிரிந்தே இருப்போம்..என்ன?


சுலைமான் தந்திரமாக~
சரி.. நம்ம நிலத்துல ரெண்டு மாட்டுக் கொட்டகை இருக்கில்ல? மாலைல பெரிய கொட்டிலுக்குள் நுழையும் மாடெல்லாம் என்னுது. சின்னதுக்குள் நுழையும் மாடெல்லாம் உன்னுது! சரியா?
இல்லே! சின்னதுக்குள் நுழைபவைதான் உன்னுது!
தான் விரித்த வலையில் தம்பி தானே விழுந்துவிட்ட குஷியில் சுலைமான்~
சரி, சின்ன கொட்டகைக்குள் போகும் மாடுகளே எனக்குப் போதும்!
மாலையில் எல்லா மாடுகளும் தீனி வைக்கப்பட்டிருந்த கொட்டிலையே நாடின. ஒரே ஒரு மாடுதான் பெரிய கொட்டிலுக்குச் சென்றது.
முகம்மது~
ஹூம் கொட்டகைதான் பெரிசு... கிடைச்சது ஒரு மாடுதான்!
மறுநாள் முகம்மது தனியாகத் தன் ஒற்றை மாட்டை மேய்ப்பதற்காகக் காட்டுக்குச் சென்றான்~ அப்போது பலமான காற்று வீசியது~
ஊய்ய்ய்ய்
ஏ மரமே! என் இப்படி ஆடுறே? என் சத்தம் போடறே!



கோபமாக முகம்மது கோலால் மரத்தைத் தட்டினான்...
அட... பொற்காசு விழுதே!
பொந்துக்குள் கையை விட்டு...
ஆஹா!
...இரண்டு தங்கக்காசு முடிச்சை எடுத்தான்.
கோபத்தைக் கட்டுப்படுத்தி அண்ணனிடம் கேட்டான்...
அண்ணா, பணம் காய்ச்சி மரம் கண்டுபிடிச்சிருக்கேன்!
உன் உளறலுக்கு அளவே இல்லையா?
முகம்மது தன் அண்ணனை வற்புறுத்தி அழைத்து வந்து காட்டியபின், பொந்துக்குள் கையை விட்டு, தங்கக் காசுகளை வெளியே எடுத்தான் சுலைமான்.
ஆ! அத்தனையும் தங்கக் காசுகள்!
இன்னும் ஏகப்பட்ட பணமுடிப்புகள் இருக்கு அண்ணே!



சுலைமான் இலையுடன் ஒரு கிளையை ஒடித்து அந்தப் பொந்தினுள் செருகி வைத்துவிட்டு—
இதுதான் உன் முதல் புத்தி சாலித்தனம்! யாரிடமும் சொல்லாதே! மூச்!
சரி!
அன்று இரவு யாரும் அறியாமல் வந்து, இருவரும் அத்தனை தங்கத்தையும் எடுத்துப் பெட்டியில் வைத்து, சுலைமான் வீட்டுத் தரைக்குள் புதைத்துப் பூசிவிட்டார்கள்—
இதைப்பற்றி யாரிடமும் சொன்னே.... எல்லாம் திரும்பிப் போய் விடும், ஜாக்கிரதை!
சரி!
மறுநாள் வியாபாரர்—
என்ன முகம்மது? ஜரிகைச் சட்டை? ஜரிகைக்குல்லா? பணம் ஏது? அண்ணன் கொடுத்தானா?
ஆ! அண்ணனா கொடுப்பான்? மரப்பொந்தில் நான் கண்டெடுத்து எங்க வீட்டில் வச்சதை உங்களுக்குச் சொல்லவே மாட்டேன்!
ஏண்டா புது உடை போட்டே? ஊருக்கெல்லாம் தெரிஞ்சுடும்... மடையா?
கேட்டாங்களே! நான் இல்லேன்னு சாதிச்சுட்டேன்!


முகம்மதுவின் செயல் கண்டு சுலைமான் திடுக்கிட்டு...
உன்னையும் வைத்துக்கொண்டு.. ஹும்.. பணத்தை அல்லாதான் காப்பாத்தணும்.. வேலைதேடிப் போறதாச்சொல்லி வெளியூர் கிளம்பிடுவோம்!
பயணத்தின் போது....
அந்த மர நிழலில் உட்கார்ந்து சாப்பிடலாம்!
வெய்யில் கொல்லுது!
சாப்பிடும் போது-
அடடா! வீட்டு வாசல் கதவைச் சரியாகப் பூட்டினோமா?
அதுக்கென்ன, சாப்பிட்டுட்டு நான் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன், அண்ணா!
மாலையில்....
என்ன இது? போனவனை இன்னும் காணலையே?
சுலைமான் காத்திருந்தான்-
இருட்டி வேற போகுது...
முகம்மது, கையில் கதவோடு வந்தான்-
என்னடா இது?
கதவு இருந்தாத்தானே யாரும் மாற்றுச்சாவி போடறது, எல்லாம்! அதனால கதவையே கழட்டிக் கொண்டாந்துட்டேன்!
அடப் பாவி!


மூன்று கொள்ளைக் காரர்கள் அச்சமயம் தென்பட்டார்கள்–
சீக்கிரம் மரத்தில் ஏறி ஒளிந்து கொள்வோம்.. நம் பணத்தைப்பிடுங்கிக்குவாங்க!
கொள்ளைக் காரர்கள் மரத் தடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது முகம்மது, மேலிருந்து கதவைக் கை நழுவ விட்டு விட்டான்.
ஐயோ பேய்!
ஓடுங் கடா
திருடர்கள் அந்த இடத்தை விட்டுப் பறந்து விட்டார்கள்!
கதவைப் பெயர்த்துக்கொண்டு வந்த உன்னைத் திட்டுவதா, பாராட்டுவதா என்று எனக்கே தெரியலை!
!



ஒரு ஊரை அடைந்தனர் -
நீ இந்த ஊரில் வேலை தேடிக் கொண்டு இங்கேயே இரு... நான் வரும் வரை! நான் அடுத்த ஊருக்குப் போய் வேலை தேடுறேன்!
சரி!
ஒரு பணக்காரர் வீட்டில் முகம்மது வேலை கேட்டான்...
நீ யார்?
என் அண்ணனுக்கு தம்பி!
உன் அப்பா அம்மா எங்கே?
அப்பா அம்மாதான் கிடையாதே!
சரி நீ இங்கே வேலை செய். இரண்டு வேளை சாப்பாடு மட்டும்தான் தருவேன்!
சரி!
மனைவியிடம்...
இந்த முட்டாளுக்கு சம்பளம் தேவையில்லை!
ஆனால் ஒரு நிபந்தனை!
என்ன?
என் அண்ணன் சொல்வது போல் என்னை 'முட்டாள்' என்று சொல்லக்கூடாது. நான் கோபப் பட்டால் நீங்க நூறு அடி கொடுங்க. நீங்க கோபப்பட்டால் நான் நூறு அடி கொடுப்பேன். சரியா?
சரி!


ஒருநாள் பேகம்...
முகம்மது! என்னடா கோழி எண்ணிக்கை குறையுதே!
ஒரு ஏழை கேட்டான். ரெண்டு கோழி கொடுத்தேன்...
!
மறுநாள் -
டேய் பால் பொங்குதே!
இறக்கி வைடா!
நீங்க பாலைப் பார்த்துக் கத்தானே சொன்னீங்க!
என்னங்க இவனைக் கண்டிக்கக் கூடாதா?
என்ன, நான் நூறு அடி வாங்கணுமா?
இவன் படுத்தற பாட்டுக்கு முடிவே இல்லையா?
சரி, ஒரே ஒரு வழிதான். இவனுக்குத் தெரியாமல் நாம் எங்கேயாவது ஓடிப்போயிடலாம்!



வீட்டுக்குக் காவல் ஏற்பாடு செய்துவிட்டு தனவானும் அவன் மனைவியும் இரவோடு இரவாகக் கிளம்பிவிட்டனர்~
விடியும்போது ஒரு ஏரிக் கரையை அடைந்து....
நல்ல பசி!
அப்போது அங்கே குதித்தது—
அடப்பாவி இங்கேயும் வந்துட்டானே!
ஹை! வனபோஜனம்! எனக்கும் பசி!
சாப்பிட்டு விட்டு வந்துக் குதிரை மீது ஏறிட
அடேய்! அடேய்! என்னடா இது?
குதிரைச் சவாரி செய்யறேன்!
ஓ! அல்லா!



இவனை இப்படியே விட்டா நமக்கும் பைத்தியம் தான் பிடிக்கும்.
பேசாம இவனைத் தூங்க வச்சி ஏரியிலே உருட்டி விட்டுடலாம்!
சரி வா... கொஞ்சம் தூங்கிடா!
நான் மாட்டேன். தூக்கத்திலே உருண்டு ஏரியிலே விழுந்துட்டா? நீச்சல் தெரியாதே!
எனக்குக் கூடத்தான் தெரியாது! தூங்கும்போது விழமாட்டோம்!
சரி... எழுந்துக்கும் போது?
எழுந்து நின்று காட்டி–
இப்படி எழுந்தால் எப்படி விழுவாங்க?
முகம்மது வணிகனைத் தள்ளி விட்டு–
இப்படி விழுந்தால் என்ன ஆகும்?
ஐயோ!



காப்பாத்து... முகம்மது காப்பாத்து!
எனக்கு நீந்தத் தெரியாதே!
முகம்மது! எப்படியாவது காப்பாத்துடா! நீ என்ன சொன்னாலும் செய்யறேன்!
எனக்கும், என் அண்ணை ஆயிக்கும் நிக்காஹ் செய்து வைக்கிறியா?
கண்டிப்பா!
முகம்மது, வண்டிக் கயிற்றை அவிழ்த்துத் தூக்கிப் போட்டான்–
இதைப் பிடிச்சு, வாங்க!
அல்லா உக்கு நன்றி!
நீந்தத் தெரியாத போது ஏன் ஏரியிலே நீந்திக்கிறீங்க?
ஐயோ நானா? நீந்தப்படுபோவி...
அவனைத் திட்டாதீங்க. அவன்தான் உங்களைக் காப்பாத்தினான்... ஷயக மிருக்கட்டும்!




என் தங்கைகளை இவனுக்கும், இவன் அண்ணனுக்கும் நிக்காஹ் செய்து கொடுத்துடலாம்!
இந்தப் பயலுக்கா?
அதெல்லாம் இல்லை..
வாக்குக் கொடுத்துட்டேன்!
சீக்கிரத்திலேயே-
அண்ணா சந்தோஷம் தானே?
ஓ! இப்ப நாம் பணக்காரப் பெண்களைக் கட்டிக்கிட்டதால், நாம் நம்ம பெரிய புதையலை எடுத்து வரலாம்! யாரும் சந்தேகப் படமாட்டாங்க!
தம்பி இத்தனை நாள் உன்னை முட்டாள்னு சொன்னது தப்புதான். அதுக்காக வருத்தப்படறேன்... புதையல் கூட உன்னால்தானே வந்தது!....
அதனால என்னண்ணா?
முற்றும்.

எங்கள் ஊரில் நடந்தது!

வடை

எங்கள் ஆங்கில ஆசிரியர் நல்ல கலகலப்பானவர். தாய்மொழிப் பற்று மிக்கவர். ஆங்கில வகுப்பில் கூட ஏதாவது உதாரணம் கொடுக்க வேண்டி இருந்தால்,அதைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கு



வார்; எழுதுவார். அன்று ஒருநாள் அவர் அப்படித்தான், கரும்பலகையில் "Nedu nal Vadai" (நெடுநல் வாடை) என்று எழுதி விட்டு, திரும்பி மாணவர்கள் பக்கம் பார்த்தார். இரண்டு மாணவர்கள் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவனை எழச் செய்து ''போர்டில் உள்ளதைப் படி?'' என்றார். உடனே அவன் ''நெடு நாள் வடை'' என்று படித்ததுதான் தாமதம். ஆசிரியர் உள்பட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

– எஸ். அமீர் அலீ.

தொட்டுக்க விக்ஸ்!

எங்கள் வீட்டில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு புனைப் பெயர் வைத்தே அழைப்போம். அது விளையாட்டுதான் என்றாலும் வித்தியாசமாக இருக்கும். உதாரணமாக எவர் சில்வர் ஜக்கை, ''கூர்க்கா'' என்று அழைப்போம். அதைப் பார்த்தால் ஒரு கூர்க்கா துப்பாக்கி வைத்து நிற்பதுபோல் தெரிகிறது அல்லவா?

அன்று ஒருநாள் வீட்டிற்கு மாமா வந்திருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் மோர் சாதம் சாப்பிடும் போது, 'தொட்டுக் கொள்ள என்ன வேண்டும்' என்று என் அம்மா கேட்க, ''அம்மா தொட்டுக் கொள்ள மாமாவுக்கு விக்ஸ் போடுங்க'' என்றேன்.

''என்ன....! விக்ஸா? விக்ஸைத் தலைவலி, ஜலதோஷத்துக்கு அல்லவா தடவிக் கொள்வார்கள்? மோர் சாதத்திற்குத் தொட்டுக் கொள்வாங்களா?'' என்றார் மாமா திகைப்புடன்.



''இதுதான் விக்ஸ். மோர் சாதத்திற்கு தொட்டுக் கொள்வது மாமா'' என்று ஊறுகாய் பாட்டிலிலிருந்து எலுமிச்சை ஊறுகாயை எடுத்துப் போட்டேன். அந்த எலுமிச்சை ஊறுகாயை விக்ஸ் மாத்திரை அளவுக்கு நறுக்கி ஊறுகாய் போட்டிருந்தாள் அம்மா.

மாமாவுக்கு, சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை! திருதிருவென்று முழித்ததைப் பார்க்கத் தமாஷாக இருந்தது.

- பி. தீபா.


கணக்குப் பாருங்கள்

கோடை விடுமுறை. நானும் அக்காவும் சேர்ந்து ஒரேயடியாக அமர்க்



களம் செய்து கொண்டு இருந்தோம். எங்கள் கொட்டத்தைப் பொறுக்க முடியாத பாட்டி, ''ஏன் இப்படி அமர்க்களம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். இந்த நேரத்தில் தினமும் டிக்ஷனரி (Dictionary) எடுத்து வைத்துக் கொண்டு, கணக்குப் பாருங்களேன்?'' என்றார். எல்லோரும் குபீர் என்று சிரித்தோம்.

- என். பாலாஜி.




சுலபமா இருக்கும்!

நானும் நண்பன் விகவும் கடைக்குச் சென்று பத்து கிலோ அரிசி வாங்கப் புறப்பட்டோம். ''பத்து கிலோ அரிசி அறுபது ரூபாய்'' என்றார் கடைக்காரர். போடச் சொன்னோம்.

கடைக்காரர் பையை வாங்கி, பத்து கிலோவுக்கு பதிலாக ஒன்பது கிலோ அரிசியைப் போட்டார். இதைக் கவனித்து விட்ட விக ''பத்து கிலோ கேட்டோமே. ஏன் ஒன்பது கிலோ போடுறீங்க?'' என்று கேட்டான். கடைக்காரர் சிரித்துக்கொண்டே ''தூக்கிட்டுப் போக சுலபமாக இருக்குமுன்னுதான் ஒன்பது கிலோ போட்டேன் என்றார். விக சற்று யோசித்தான். பிறகு ரூபாயைக் கொடுத்தான். கடைக்காரர் எண்ணிப் பார்த்து விட்டு ''என்ன தம்பி? காசு குறையுதே?'' என்று கேட்டார். நன்றாகப் பேசத் தெரிந்த விக, ''எண்ணிப் பார்க்க உங்களுக்குச் சுலபமாக இருக்குமுன்னு தான் குறைச்சுக் கொடுத்தேன்'' என்றான். கடைக்காரர் திகைத்து நின்றார்.

- சி. பாரதி ராஜா.



கொடாக் கண்டர்

எங்கள் மாமா எந்தப் பிச்சைக்காரருக்கும் பிச்சை போடமாட்டார். எங்களையும் பிச்சை போட விட மாட்டார். என்னமாவது சொல்லி அனுப்பி விடுவார். அவருடைய நண்பர்கள் அவரை ''நாய்த் தோலில் வடிகட்டின கஞ்சன்'' என்று நையாண்டி செய்வார்கள். அவ்வளவு அழுத்தம் அவர்.

ஒரு நாள் வீட்டு வாசலில் காலையில் ஒரு பிச்சைக்காரர் வந்து, ''அய்யா சாமி! அய்யா சாமி! என்று குரல் கொடுத் தார். நாங்கள் பதில் கூற வாசற்படியை நோக்கி ஓடினோம். ''போக வேண் டாம்'' என்று எங்களுக்கு சைகை செய்து தடுத்துவிட்டு, பிச்சைக்காரரிடம் போனார்.

''ஏம்பா! அய்யாசாமியா! அவரு இங்கே இல்லையே?'' என்று மாமா கூற, பிச்சைக்காரர் ''அது இல்லீங்க, பிச் சைங்க!'' என்றார்.

கொடாக் கண்ட மாமா உடனே ''அடடே பிச்சையா? அவன் நேற்றே ஊருக்குப் போயிட்டானே? என்றார். பிச்சைக்காரர் திகைத்து நின்றார்.

– ப.இரா. செரிப்.

பொம்மக்கா



பொம்மக்கா பொம்மக்கா
தஞ்சா வூரு பொம்மக்கா
தம்பிப் பாப்பா அழுதாலே
சிரிக்க வைக்கும் பொம்மக்கா.

பானை வயிறு கொண்ட
பல்லே இல்லா பொம்மக்கா
யானை சேனை இல்லா
அழகு ராணி பொம்மக்கா.

கால் இல்லாது ஆடும்
குண்டு ராணி பொம்மக்கா
பால் ரொட்டி கேட்கா
பாலர் விரும்பும் பொம்மக்கா!

– மணிகண்டன்

ஒருகதை போடலாம் வரீங்களா?

கோடை விடுமுறை என்றால், நாங்கள் கோயமுத்தூருக்குப் போவோம். கோயமுத்தூருக்கு ஏழை களின் ஊட்டி என்ற பெயர் உண்டு. கோவை எப்போதும் குளுகுளுவென்று இருக்கும். சென்னையில் அக்கினி நட்சத்திரம் கொளுத்துகிற மே மாதத்தில் கோவையில் அடிக்கடி மழை பெய்யும். விடுமுறையில் ஒரு நாள் நிச்சயம் ஊட்டிக்குப் போய் வருவோம்.

இந்த வருடம் இது மாறி விட்டது.

நாங்கள் கோவைக்குப் போவதற்கு பதில் கோவையில் உள்ள எங்கள் மாமா குடும்பம் சென்னைக்கு வந்து விட்டது. 'இந்த வருடம் கோயமுத்தூரிலும் கடுமையான வெய்யில், சென்னை போலத் தான்' என்றார், மாமா.

மாமா, அத்தை அவர்களுடைய இரண்டு குழந்தைகள், சங்கரி, செந்தில் ஆகிய நால்வரும் எங்கள் வீட்டில் பத்து நாள் தங்குவதற்காக வந்திருந்தார்கள்.



எங்கள் வீட்டில் நான், ரம்யா, கீர்த்தி ஆகிய மூன்று குழந்தைகளுடன் அப்பா, அம்மா, வீட்டிலேயே தங்கியிருக்கும் வேலைக்காரி ஆகிய ஆறு பேர். மொத்தம் பதினோரு பேருடன் வீடு கலகலப்பாக இருந்தது.

என் பெயர் பொன்னன்.

குழந்தைகள் என்று குறிப்பிட்டாலும் நாங்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்.

தினமும் ஏதாவது ஒரு விளையாட்டு விளையாடுவோம்.

ஒருநாள் ''விவாடி வினா'' நடத்தினோம். மாமா குழந்தைகள் பத்து கேள்வி கேட்க வேண்டியது. அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். பிறகு நாங்கள் பத்து கேள்விகள் கேட்க வேண்டியது. அதற்கு மாமா குழந்தைகள் பதில் சொல்ல வேண்டும்.

மாமா குழந்தைகள் பத்துக் கேள்விகள் கேட்க முடியாமல் திண்டாடினார்கள். கேட்ட கேள்விகளும் எளிமையானவை. நாங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லி விட்டோம். பிறகு நாங்கள் கேள்விகள் கேட்க வேண்டும்.

எங்கள் வீட்டில் நான்தான் மூத்தவன். பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருக்கிறவன். பள்ளியில் சில க்விஸ் போட்டிகளில் கலந்து கொண்ட அனுபவமும் உண்டு. அதனால் நானே கேள்விகள் கேட்டேன்.

மாமா குழந்தைகள் பதில் சொல்ல முடியாமல் திணறினார்கள். அவர்கள் பெற்ற மதிப்பெண் மிகப் பெரிய பூஜ்யம்!

சங்கரிக்கும் செந்திலுக்கும் இதனால் மனவருத்தம் ஏற்பட்டது. இரு

வரும் அன்று முழுவதும் எங்களுடன் கலகலப்பாகப் பழகவில்லை.

மறுநாள் காலைச் சிற்றுண்டி முடிந்தது.

சங்கரியும், செந்திலும் தமக்குள் ஏதோ 'குசுகுசு' என்று பேசிக் கொண்டார்கள். பிறகு எங்களிடம் வந்தார்கள்.

''பொன்னா, ரம்யா, கீர்த்தி இன்னைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்னு நாங்கதான் முடிவு பண்ணப் போறோம். சரியா?'' சங்கரி மிடுக்காகக் கேட்டாள்.

நாங்கள் மூவரும் 'சரி' என்று ஒப்புக் கொண்டோம்.

''இன்றைய விளையாட்டு விடுகதை. முதலில் நாங்க சில விடுகதைகள் சொல்றோம். அதை நீங்க விடுவிங்க. பிறகு நீங்க சில விடுகதைகள் சொல்லுங்க. அதை நாங்க விடுவிக்கிறோம்.'' செந்தில் சொன்னான்.

அதற்கும் 'சரி' என்றோம்.

விடுகதைப் போட்டி தொடங்கியது.

'அதிசயக் குளத்திலே, அற்புதக் குருவி ஒன்று

வாலினால் தண்ணீரை வற்றவற்றக் குடிக்குது! அது என்ன?''

சங்கரி கேட்டாள்.

நான் விழித்தேன்.

அதிசயக் குளம் எது?

அற்புதக்குருவி எது?

குருவி வாயினாலே தானே தண்ணீரைக் குடிக்க வேண்டும்? இது வாலினால் குடிக்குமாம்?

விடுகதையை விடுவிக்க எங்களால் முடியவில்லை.





''அது என்ன தெரியுமா? எண்ணெய்த் திரி! திரி எண்ணெயை வாலினால் தானே குடிக்குது?

சங்கரி விடை சொன்னாள்.

அடுத்த விடுகதையைச் செந்தில் சொன்னான்.

''அட்டைக்கரி பெண்ணுக்கு உச்சந் தலை மஞ்சள்!

அது என்ன?''

விழித்தோம்.

''இது தெரியலே! பனங்காய். பனங்காய் கருப்பா இருக்கும். அதன் உச்சி மஞ்சளா இருக்கும். பட்டணத்துப் பிள்ளைங்களா, பனங்காயை முழுசா பார்த்திருக்கிறீங்களா?''

செந்தில் விடை சொன்னதோடு எங்களைக் கிண்டல் வேறு செய்தான்.

சங்கரி மீண்டும் ஒரு விடுகதை சொன்னாள்.

''ஆள் இரண்டு இருக்கு; ஆசனம் ஒன்று! அது என்ன?''

மீண்டும் விழித்தோம்.

''அது என்ன தெரியுமா? கருவேல முள்'' என்று சங்கரி சொன்னதும் விடுகதையின் பொருத்தத்தை நினைத்து வியப்படைந்தேன்.

இப்போது செந்தில் முறை.

''அடித்தால் விலகாது! அணைத்தால் நிற்காது! அது என்ன?''

விடுகதை போட்ட செந்திலே, ''இது மட்டும் விடை சொல்லவா

டாக்டர் பூவண்ணன்

போறீங்க? நானே சொல்கிறேன். விடை தண்ணீர். அடிக்கப் பாருங்க விலகிப் போகாது. ஒன்னாயிடும். அணைக்கப் பாருங்கள், உங்க அணைப்பிலே அது நிக்காது'' என்று விடைக்கு விளக்கவுரை சொன்னான்.

''அடுக்கடுக்காய் இலையுண்டு ஆதண்டையல்ல!

கொத்துக் கொத்தாய்ப் பூப்பூக்கும் முருங்கையல்ல!

கோணக் கோணக்காய்காய்க்கும் புளியுமல்ல!

அது என்ன?''

மூவரும் விழித்தோம்.

''அது என்ன தெரியுமா? எருக்கஞ் செடி'' சங்கரி எங்களை வென்று விட்ட சந்தோஷத்தோடு விடை சொன்னாள்.

''ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு - அது என்ன? நிலா!'', ''காட்டுக்குள்ளே துளி ரத்தம்! அது என்ன? குண்டுமணி!'' என்பன போன்ற சாதாரண விடுகதைகள் மட்டுமே தெரிந்த நாங்கள், மாமா குழந்தைகள் போட்ட விதவிதமான - வியப்பு வியப்பான விடுகதைகளைக் கேட்டு விழித்தோம்! விழித்தோம்! விழித்துக் கொண்டே இருந்தோம்!

மாமாவின் சொந்த ஊர், கோயமுத்தூருக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் கள்ளிப்பாளையம் என்னும் சிற்றூர். மாமாவின் பெற்றோர் அங்கே இருந்தனர். மாமா குழந்தைகள் அடிக்கடி அங்கே போய் விடுவார்கள். அதனால் அந்தச் சிற்றூரின் சொந்தக் கலையான



விடுகதை இவர்களுக்குக் கைவந்த கலையாகி விட்டது.

''நாங்க ஐந்து விடுகதை போட்டாச்சு. நீங்க வாங்கின மார்க் ஜீரோ... அதுவும் பெரிய ஜீரோ! இப்போ நீங்கள் ஐந்து விடுகதை போடுங்க. நாங்க விடை சொல்கிறோம்.''

சங்கரி சொன்னாள்.

நான் ரம்யாவையும் கீர்த்தியையும் பார்த்தேன். இவர்களை மடக்குற மாதிரி விடுகதை போட என்னாலேயே முடியாது! என் தங்கை தம்பியால் மட்டும் முடியப் போகிறதா?

பேசாமல் 'வாக் ஓவர்' கொடுத்துத் தோல்வியை ஒப்புக் கொள்ளலாமா?

என் சிந்தனையைக் கலைத்தான் தம்பி கீர்த்தி.

''அண்ணா, நான் விடுகதை சொல்லட்டுமா?'' கீர்த்தி கேட்டது, தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறவனுக்குக் கைகொடுத்தது போலிருந்தது.

''கேள்'' என்றேன்.

கீர்த்தி ஆறாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புக்கு அப்போதுதான் தேர்ச்சி பெற்றிருந்தான். அவனுக்கு என்ன விடுகதை தெரியும்? பார்ப்போம்!

கீர்த்தி பேசினான்.

''விடுகதைப் புலிகளே! நீங்க ஐந்து விடுகதை சொன்னீங்க. பதில் சொல்லியிருந்தா நாங்க ஐந்து மார்க் வாங்கியிருப்போம். இப்போ ஐந்து ஜீரோ வாங்கிட்டோம். நாங்க பட்டணத்துப் பசங்க, நிறைய விடுகதை தெரியாது. அதனாலே ஒரே ஒரு விடுகதை போடறோம். நீங்க விடை சொன்னா ஐந்து மார்க். சொல்லலேன்னா ஐந்து ஜீரோ! சரியா?''

சங்கரியும் செந்திலும் சம்மதம் தெரிவித்தனர்.

கீர்த்தி நிறுத்தி நிதானமாக விடுகதை சொன்னான்.

''கங்கை நதிதலையில் உண்டு; சிவனார் அல்ல!

காலடியில் குமரி உண்டு; இராமன் அல்ல!

சங்கை யற்ற வயதுண்டு; கிழவி அல்ல!

சாத்திரத்தின் ஊற்றனையாள்; அலைமாதல்ல!

எங்குலத்தை பெற்றதுண்டு; பிரமன் அல்ல!

ஏற்றுண்ணும் எண்ணமில்லை; இறு மாப்பல்ல!

மங்கை என்று பாடிடுவார் புலவர் எல்லாம்.

மற்றிதனை இன்னதென வழுத்து வீரே''

கீர்த்தி கூறி முடித்தான்.

இப்போது சங்கரியும் செந்திலும் விழித்தனர்.

''என்ன புரியலையா, விடுகதைப் புலிகளே! இன்னொரு முறை சொல் கிறேன். கேட்டுக்கோங்க'' என்ற கீர்த்தி, அதே விடுகதையை மீண்டும் கூறினான்.

சங்கரியும், செந்திலும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு, ''தெரியலே, நீயே விடை சொல்லு'' என்றனர்.

''விடை என்ன தெரியுமா? பாரத தேவி!'' என்றான், கீர்த்தி.

''எப்படி?''

சங்கரியின் சந்தேகத்துக்குக் கீர்த்தி விளக்கம் சொல்லத் தொடங்கினான்.

''பாரத தேவியின் தலை முடியில் கங்கை நதி. காலடியில் குமரிமுனை. இவள் என்று பிறந்தவள் என்று உணர முடியாத வயது. ஆனால் அவள் குமரியே! கிழவியல்ல! பாரதத் தாய் தான் சாத்திரங்களின் பிறப்பிடம். பாரத மக்களைப் பெற்றெடுத்தவள், அவள். யாரிடமும் கையேந்தத் தேவையில்லாத இயற்கைவளம் பெற்றவள். அவளையே விடுகதை குறிக்கிறது.''

கீர்த்தி சொன்னான்.

பாரதத் தாயின் பெருமைகளைப் பேசும் இந்த விடுகதை எங்களை பிர மிக்கச் செய்தது. பெருமிதம் கொள்ளச் செய்தது.

''கீர்த்தி! எங்களுக்கு ஐந்து ஜீரோ! உங்களுக்கு ஐந்து ஜீரோ! கணக்கு சரி யாப் போச்சு. நீ சொன்ன விடுகதை புதுசா இருக்கே? இதை எங்கே கத்துக் கிட்டே?''

சங்கரி கேட்டாள்.

நானும் அதையே கேட்க விரும்பி னேன்.



''இதை எனக்குக் கத்துத் தந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்'' என்ற கீர்த்தி, தொடர்ந்து பேசினான்.

''தேர்வு முடிந்த பிறகு இரண்டு நாள் பள்ளி இருந்தது. அப்போது எங்கள் தமிழாசிரியர், ''பாரதிதாசன் கவிதை கள்'' என்னும் புத்தம் புதிய கையடக்கப் பதிப்பு நூலைக் கொண்டு வந்தார். அதில் இதுவரை எந்தப் பதிப்பிலும் இடம்பெறாத பாடல்கள் என்னும் பகுதி யில், பாவேந்தரின் தேசியப் பாடல்கள் இருப்பதைக் காட்டினார். அதிலிருந்த ''தேசிய விடுகதைகள்'' என்னும் பாடலைப் படித்துக் காட்டினார். அப் பாடலின் முதல் விடுகதை எனக்குப் பிடித்திருந்தது. அதை நோட்டில் எழுதி வைத்தேன். அது எனக்கு மனப்பாட மாகியிருந்தது. அதைப் பலமுறை படித் துப் படித்து மகிழ்ந்தேன். அதுதான் உங்களை மடக்க இப்போது எனக்குக் கை கொடுத்தது'' என்று கூறி முடித்தான் கீர்த்தி.

பாரதத் தாயைப் பாவேந்தர் அரு மையாகப் படம்பிடித்துள்ளார். அது வும் பாலர்கள் விரும்பும் விடுகதை வடி விலே! அதை எண்ணி வியந்தபடி எழுந் தேன்.

''எங்கேண்ணா, புறப்பட் டுட்டே?'' கீர்த்தி கேட்டான்.

''நீ குறிப்பிட்ட பாரதிதாசன் கவிதைகள் நூலை வாங்கத்தான். அதில் உள்ள மற்ற விடுகதைகளையும் படிக்கணும்'' என்று சொன்னேன்.


''எனக்கும் ஒரு புத்தகம் சேர்த்து வாங்கு'' என்று சங்கரி குரல் கொடுத் தாள்.

''சரி'' என்றபடி வெளியே சென் றேன்.

நான் தான் கோழை

ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் அன்றுதான் ஆய்வகத்துக்குள்ளேயே அடி எடுத்து வைக்கிறார்கள். அறிவியல் ஆசிரியர் அவர்களை அழைத்துச் சென்றிருந்தார்.

'பியூரெட்'டை எப்படி ஸ்டாண்டில் பொருத்துவது? 'பிப்பெட்' மூலம் திரவக் கரைசலை உறிஞ்சி எடுப்பது எப்படி? அதை அளவு பிரகாரம் பியூரெட்டில் இட்டு நிரப்பும் முறை - கண்ணாடி உபகரணங்களைக் கையாளும் போது



கடைப் பிடிக்க வேண்டிய கவனமான நடைமுறைகள் ஆகியவை பற்றி விளக்கிக் கூறிய ஆசிரியர், ஆளுக்கொரு சோதனை மேஜையை ஒதுக்கிக் கொடுத்தார். அவரவர்களுக்கென்று பியூரெட், மற்றும் கண்ணாடிக் குடுவைகளையும் வழங்கினார்.

நவீனுக்கு ஒதுக்கப்பட்ட சோதனை மேஜை கடைக் கோடியில் ஆசிரியரின் நேரடிப் பார்வை பட முடியாத இடத்தில் அமைந்திருந்தது. அந்த மட்டில் அவனுக்குப் பரம திருப்தி. பயம் இல்லாமல் செய்து பார்க்கலாம் அல்லவா?


ஊதா வண்ணப் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைப் பிப்பெட்டில் உறிஞ்சி எடுத்த நவீன், அதைப் பியூரெட்டில் பாய்ச்சினான். அடுத்த கணம் அதன் அடிப்பக்கம் அமைந்த மூக்கின் வழியே கரைசல்

சொட்டுச் சொட்டாக ஒழுக்கெடுப்பது தெரிந்தது.

குழாயின் அடைப்பான் சரியாக இறுக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொண்டவன், பிப்பெட்டை மேஜையின் மீது வைத்து விட்டு, அதைச் சரி பண்ணுவதில் முனைந்தான். பீங்கான் அடைப்பானைக் கூடிய மட்டும் திருகி வைத்து விட்டு, ரப்பர் பேண்டை வலுவாக இழுத்து அடைப்பானைச் சுற்றிக் கொண்டிருந்த போது 'பட்' டென்று சன்னமானதொரு சப்தம். தொடர்ந்து அடைப்பானுக்குக் கீழே அமைந்த பியூரெட்டின் நுனி மூக்கு மட்டும் ஒடிந்து அவன் கையோடு வந்து நின்றது.

செய்வதறியாமல் சிலையாகத் திகைத்து நின்ற நவீன், கரைசல் ஒழுகாமல் முழுவதையும் கண்ணாடிக் குடுவைக்கு மாற்றிவிட்டான். அவனுக்குள் புகுந்த அச்சம், அவனது நெஞ்சுக் கடிகாரத்தின் 'டிக்... டிக்....' வேகத்தை படுமோசமாக அதிகரிக்கச் செய்து விட்டது.

'உபகரணங்களை உடைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான தொகையைச் செலுத்



ரூ. ஸ்ரீனிவாசன்

தியே தீர வேண்டும்!' - என்று முதலிலேயே ஆசிரியர் விடுத்திருந்த கடுமையான எச்சரிக்கை அவனை நடுங்க வைத்தது!

'உரிய பணத்தையாவது கட்டித் தொலைச்சிடலாம். ஆனால் என்னைப் பற்றி ஆசிரியர் மனசிலே பதியப் போகிற அந்தக் கரும்புள்ளியை அழிக்க முடியாதே! இனிமேல் 'லேபு'க்குள்ளே கால் வைக்க விட மாட்டாரே!' என்று எண்ணிய போது அவனுக்கு அச்சம் மேலும் மிகுதியாகிப் போனது.

பக்கத்து மேஜையைப் பார்த்தான். அந்த மேஜைக்குரிய மாணவன் சேது அப்போது அங்கே இல்லை. ஏதோ சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அவன் ஆசிரியரிடம் போயிருந்தான்.

நவீனின் மனத்தில் 'பளிச்'சென்று ஒரு யோசனை. தத்தம் பணிகளில் ஈடுபட்டிருந்த மற்ற மாணவர்கள் நவீனைக் கவனிக்காதது அவனுக்குச் சாதகமாகப் போயிற்று. கண்சிமிட்டும் நேரத்தில் காரியத்தை நடத்தி முடித்து விட்டான்.

நவீனின் உடைந்த பியூரெட் இப்போது ஸ்டாண்டோடு சேதுவின் மேஜைக்கு இடம் மாறிற்று. சேதுவின் நல்ல பியூரெட் செட் நவீனின் இடத்தில் வந்து உட்கார்ந்து விட்டது.

'அப்பாடா!' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டவனாக நல்ல பிள்ளை போலத் தன் வேலையில் ஈடுபடலானான்.

தனது சோதனை மேஜைக்குத் திரும்பிய சேது, மூக்கு நுனி சிதைந்து மூளியாகக் காட்சியளிக்கும் 'பியூரெட்'டைப் பார்த்து அதிர்ந்து போய் நின்றான். அவனது கை கால்கள் உதறல் எடுக்க ஆரம்பித்தன.

வகுப்பிலேயே அப்பாவி என்று பட்டம் வாங்கியவன் சேது. அடித்தால் கூட அழத் தெரியாது. மிகவும் எளிய உடையோடு பள்ளிக்கு வரும் ஏழைப் பையனான அவன், வகுப்பு மாணவர்கள் எல்லோருக்குமே ஓர் ஏளனப் பொருளாக விளங்குபவன். மற்றவர்களின் கேலி விளையாட்டுகளுக்கு அவன் இலக்காகி நின்றாலும், அவர்கள் தனக்கு இழைக்கும் இம்சைகளைப் பற்றி ஆசிரியர்களிடமோ, தன் வீட்டிலோ சென்று புகார் சொல்லும் வழக்கமே அவனிடம் கிடையாது. எல்லாவற்றையும் பொறுமையாக ஏற்றுக் கொண்டு, பள்ளிக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறான்.

கொஞ்ச நேரம் 'திருதிரு' வென்று விழித்துக் கொண்டு நின்ற சேது, ஆசிரியரை அழைத்து வந்து உடைந்து போன பியூரெட்டைக் காட்டினான்.

''யாருடா உடைச்சது?'' என்று அதிரும்படியாகக் கர்ஜித்தார் ஆசிரியர்.

''நான்தான் சார்!'' - சேதுவின் குரலில் பயமும் பணிவும் பரவி நின்றாலும், தவறுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும் ஒரு வகைத் தைரியமும் உடன் தென்பட்டது.

யார் மீதும் புகார் கூறாமல், தான் உண்மையில் செய்யாத தவறைத் தன் தலையில் போட்டுக் கொள்ளும் சேதுவை, நவீன் இப்போது நேருக்கு நேர் பார்த்தான். 'இந்த ஏழைச் சேதுவுக்குத்தான் எத்தனை நல்ல மனம்! எவ்வளவு தைரியம்!' என்று குற்றம் புரிந்த நவீனின் மனம் தனக்குள் வியந்து பாராட்டியது. ஆனால் ஆசிரியரிடம் நடந்ததைக் கூறி அவனை விடுவிக்கும் மனவுறுதி அவனுக்கு வரவில்லையே.

''போடா வெளியே! பியூரெட்டின் கிரையம் அம்பது ரூபாயைக் கட்டாமே, பள்ளிக்கூட எல்லைக்குள்ளே கால் வைக்கக் கூடாது, தெரிஞ்சிக்க! லீடர்; இவன் பேரைக் குறிச்சி, எச்.எம். கிட்டே குடுத்துடு'' என்று கூப்பாடு போட்ட ஆசிரியர், சேதுவை வெளியே விரட்டி விட்ட பிறகுதான் வேறு வேலையைப் பார்க்கப் போனார்.



''மூளை இருக்கா'ன்னு கேட்டால் கோபப் படாமல் பதில் சொல்லும் ஒரே நபர் யார் சொல்லு?''
''கசாப்புக் கடைக்காரர்தான்!''
- சீர்காழி ஜே. பலராமன்.

அதற்குப் பிறகு ஐந்தாறு நாட்கள் சேதுவைப் பள்ளிக் கூடத்தின் பக்கமே காணோம். மற்றவர்கள் அவனைப் பற்றிக் கவலையேன் படப்போகிறார்கள்? ஆனால் நவீன் மட்டும் சேதுவை மறக்க முயன்றும் முடியாமல், குற்றவுணர்வுடன் வேதனையில் தவித்துக் கொண்டிருந்தான்.

அன்று காலை பள்ளிக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் நவீன். வீட்டுக்கு வெள்ளை அடிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. புத்தகப் பையை எடுத்துச் சைக்கிளில் மாட்டிக் கொண்டு நவீன் கிளம்பப் போகும் நேரம்....

அப்போது வெளி வாசலில் வந்து நின்றான் சேது. அவனது அலங்கோலத்தைப் பார்த்ததும் அப்படியே அயர்ந்து போய் நின்று விட்டான் நவீன்.

சேதுவின் இடது கையில் சுண்ணாம்பு நீர் நிறைந்த சிறிய வாளி. வலது கையில் இரண்டு மூன்று வெள்ளையடிக்கும் தென்னம் பாளை மட்டைகள். இடுப்பில் கிழிந்து போன காக்கி அரைக்கால் சட்டை. 'தொள தொள' வென்று உடம்பை மூடி நிற்கும் பெரிய அழுக்கு பனியன் அதுகூட அவனது அப்பாவுடையதாகத்தான் இருக்க வேண்டும்.

நவீனின் இதயத்தை யாரோ இறுக்கிப் பிழிவது போலிருந்தது.

எதிர்பாராமல் நவீனின் வீட்டுக்கே வெள்ளையடிக்க வந்து நிற்பதை உணர்ந்து பரக்கப் பரக்க விழித்தான் சேது.

''ஏண்டா சேது, இனிமே நீ பள்ளிக் கூடமே வர மாட்டியா?''


''மாட்டேன்.''


'பகீர்' என்று ஆகி விட்டது நவீனுக்கு.

''எதுக்கு? அம்பது ரூவா கட்ட முடியலேன்னு ஒங்க வீட்டிலே படிப்பை நிறுத்திட்டாங்களா?''

''எங்கப்பா தர்றதாத்தான் சொன்னாரு. நான்தான் வேண்டாம்னுட்டேன்.'' ''இன்னிக்கி அம்பது ரூவா. நாளக்கி ஒரு ஆயிரம் ரூவாப் பொருளை

"இராமன் இராவணனை ஜெயிக்க எது காரணம் சொல்லு?"
"தெரியலையே...?"
"அவரோட 'வில்'பவர்தான்!"
- தோணிபுரம் விரா.





"ஏண்டா, கணேஷ் 'ஹோம் ஒர்க்' கணக்கு எல்லாம் தப்பு தப்பா போட்டுருக்க...?"
"எங்க அம்மா ஊருக்குப் போயிட்டாங்க சார்! அதான் இப்படி....!"
- சீர்காழி ஜே. பலராமன்.

யாராச்சும் ஒடச்சிட்டு, என் தலையிலே கட்டுவாங்க. அப்போ எங்கப்பாவாலே அவ்வளவு பெரிய தொகையைக் கட்ட முடியுமா?"

'பியூரெட்டை உடைத்து இடம் மாற்றி வைத்தது, பக்கத்து மேஜையில் இருந்த நான்தான் என்ற உண்மையைச் சேது அறிந்து வைத்திருப்பான் போலிருக்கிறதே! அவனுடைய பேச்சு அதைத்தானே சொல்லாமல் சொல்கிறது? பிறகு ஏன் அன்றே இவன் ஆசிரியரிடம் கூறி வாதாடாமல், குற்றத்தைத் தானே சுமந்து கொண்டு போனான்?' - நவீனின் மனதில் சிறியதொரு போராட்டமே உருவெடுத்தது.

"நீ ஸ்கூலுக்கு வரணும் சேது. இனிமே ஒனக்கு யாராலேயும் எந்த இடைஞ்சலும் வராமே நான் பாத்துக்கறேன்!"

"வேணாம்ப்பா நவீன். நான் ரொம்ப ரொம்பக் கோழைப் பயல்! யாரோடயும் என்னால மோத முடியாது."

"அப்படிச் சொல்லாதே சேது. நீ கோழை இல்லே! உன் மீது பழியைப் போட்டுட்டு, செஞ்ச குற்றத்தை ஒத்துக்க தைரியம் இல்லாமே ஒதுங்கிக் கிட்ட நான்தான் கோழை! இப்பவே என்னோட கிளம்பு. ஆசிரியர் கிட்டே உண்மையைச் சொல்லி, என் தவறை ஒத்துக் கிட்டு, ரூபாயையும் நானே கட்டிடுறேன். நீ வரலேன்னா, என்னோட நெஞ்சு வெடிச்சிடும் போல இருக்குடா!" - அழாத குறையாகக் கெஞ்சினான் நவீன்.

அதற்குள் வெள்ளையடிப்பதற்கான சிறிய ஏணியோடு அங்கே வந்து சேர்ந்தார் சேதுவின் அப்பா. அவரிடம் நடந்தவை எல்லாவற்றையும் மிகவும் உருக்கமாக விவரித்து அழுதான் நவீன். மனம் நெகிழ்ந்து போன சேதுவின் அப்பா, "நான் வேணாம்ன்னு சொல்லலே தம்பி. அவன்தான் பள்ளிக்கூடமுன்னு சொன்னாலே பயந்து நடுங்குறான்" என்று பாசத்தோடு சொன்னார். அதே சமயம் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு அலுவலகம் புறப்படப் போன நவீனின் தந்தை அங்கே வந்தார்.

வேதனையால் துடித்துக் கொண்டிருந்த நவீன், தன் தந்தையைப் பார்த்ததுமே விக்கி விக்கி அழத் தொடங்கி விட்டான்.

மனம் திருந்தி, செய்த தவறை உணர்ந்து வருந்தியழும் தன் மகனைப் பார்க்கப் பார்க்கப் பெருமை தாங்கவில்லை அவருக்கு. அவனைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டி, பையிலிருந்து ஓர் ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து நவீனிடம் கொடுத்தார். சேதுவுக்குத் தேறுதல் கூறி, அவனையும் பள்ளிக்குப் போகச் சம்மதிக்க வைத்தார்.

தனது உடைகளைக் கொடுத்து அணியச் செய்த நவீன், அடுத்த பத்து நிமிடங்களில் சேதுவை ஏற்றிக் கொண்டு பள்ளியை நோக்கி சைக்கிளில் விரைந்தான்.

ஆண்டாள் என்ன சொன்னாள்?



இரா. வசந்தராஜன்

ஆண்டாள், வீட்டுக்குள் நுழைவதற்கும் அந்த அலறல் சப்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது. ஆண்டாள், அந்த வீட்டு வேலைக்காரி.

''ஐயோ... அம்மா அடிக்காதே. இனிமேல் டீ.வி. பார்க்கப் போக மாட்டேன். ஒழுங்காக உட்கார்ந்து படிக்கிறேன். ஐயோ... அடிக்காதே'' - உமா அலறிக் கொண்டிருந்தாள். அவள் அம்மாவின் கையில் பெரிய குச்சி.

''நிறுத்துடி கழுதை! உனக்கு எத்தனை நாள் சொல்றது? இப்போதிலிருந்தே ஒழுங்கா படிச்சாத்தானே நிறைய மார்க் வாங்கி பாஸ் பண்ண முடியும்? நீ என்னடான்னா, ஒவ்வொரு நாள் சாயந்திரமும் டீ.வி. பார்க்கப் போயிட்டு, ராத்திரி எட்டு மணிக்கு கரெக்டா சாப்பிடறதுக்கு வந்துடறே. இனிமேல் டீ.வி. பார்க்கப் போகாம ஒழுங்கா படிப்பியா?''

அம்மா, உமாவை மீண்டும் அடிக்கப் போக...

''அம்மா...''

ஆண்டாளின் குரல் கேட்டதும் அம்மா நிமிர்ந்தாள். அவள் பிடியில் இருந்து உமா தப்பி ஹாலுக்குள் ஓடி விட்டாள்.

''அம்மா... நான் ஒண்ணு சொல்றேன். சொன்னா கோவிச்சிக்க மாட்டீங்களே?''

''சொல்லு ஆண்டாள்! நீ இந்த வீட்டுக்கு வேலைக்காரிதான். ஆனா என் மேலேயும் என் மகள் மேலேயும் அளவு கடந்த பாசம் வைத்திருக்கிற உன்னை நான் என் சகோதரியாக நினைக்கிறேன்! என்ன சொல்லப் போறே? சொல்லு?'' - அம்மா கேட்டாள்.

''நாளைக்கு உமாகிட்ட நான் பேசிப் பார்க்கிறேன். எனக்கு அவளை மாத்திட முடியும் என்கிற நம்பிக்கை இருக்கு,'' உறுதியான குரலில் ஆண்டாள் சொல்ல... அம்மாவின் முகம் முழுக்க அவநம்பிக்கையின் ரேகைகள்!

'தான் எவ்வளவோ சொல்லியும் திருந்தாத மகள், இந்தக் குறைந்த படிப்புடைய வேலைக்காரி சொல்வதைக் கேட்டா திருந்தி விடப் போகிறாள்?' என்ற எண்ணம் பளிச்சிட்டது அவளுக்கு! இருந்தாலும், ''உன் ஆசையை நான் ஏன் கெடுக்கணும்? முயற்சி பண்ணிப் பார்,'' என்றாள் அம்மா.

மறுநாள் சனிக்கிழமை. காலை பத்து மணி.

பள்ளி விடுமுறை என்பதால் உமா பள்ளிக்குச் செல்லவில்லை. திண்ணையில் உட்கார்ந்திருந்த உமாவின் கையில் அறிவியல் புத்தகம் இருந்தது. கையில் தான் புத்தகம் இருந்ததே தவிர பார்வை அதில் இல்லை!

''உமாப் பொண்ணு...''

ஆண்டாளின் மென்மையான குரலில் கலைந்து, நிமிர்ந்தாள் உமா.

''உன்னோட தனியா ஒரு நிமிஷம் பேசணும். சமையல் ரூமுக்கு வாயேன்'' முகத்தில் குழப்ப மின்னல்கள் பளீரிட சமையலறைக்குள் நுழைந்தாள் உமா.

பத்து நிமிடங்கள் கழிய...

சமையலறையில் இருந்து முதலில் வெளியே வந்த உமாவின் முகத்தில் ஒரு பெரிய அதிர்ச்சி ஒட்டிக் கொண்டிருந்தது!

சாயந்திரம் ஆறு மணி.

சூரியன் மறைய ஆரம்பித்தது. பறவைகள் கூடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தன. மெலிதாக வீசிக் கொண்டிருந்த காற்றில் மழை வரும் அறிகுறி இருந்தது.

பூஜை அறைக்குள் படத்துக்கு பூவை வைத்து விளக்கேற்றி வைத்து விட்டு வெளியே வந்த அம்மா அதிர்ந்தாள்! அவள் கண்களை அவளாலேயே நம்ப முடியவில்லை!

ஹாலில் -

உமா என்றுமே இல்லாத புதுமையாக அக்கறையோடு படித்துக் கொண்டிருந்தாள்!

நான் எவ்வளவு சொல்லியும் கேட்காத தன் மகளை, ஆண்டாள் கொஞ்ச நேரத்தில் மாற்றி விட்டிருக்கிறாளே! அப்படி என்ன மாயம் செய்திருப்பாள்?

அம்மாவின் குரலைக் கேட்டு படிப்பதை நிறுத்தி நிமிர்ந்தாள் உமா.

''இத்தனை நாள் உன்னைப் படி படின்னு தலைபாடா அடிச்சிக்கிட்டேன். ஆனா நீ கொஞ்சம் கூட மசியலே! ஆண்டாள் இன்னைக்குக் காலைலதான் உன்கிட்ட என்னவோ சொன்னா. நீ இன்னைக்கே அக்கறையா படிக்க ஆரம்பிச்சுட்டே! ஆண்டாள் உன்கிட்ட அப்படி என்னதான் சொன்னாள்? சொல்லேன்...?'' என்ற அம்மாவின் முகத்தில், ஆர்வம் ஜொலித்தது!

இதுவரை பளிச்சென்று இருந்த உமாவின் முகத்தில் இப்பொழுது வருத்தம் ஒட்டிக் கொண்டது.

''அது வந்தும்மா... காலைல ஆண்டாள் அக்கா என்னைத் தனியா சமையல் அறைக்குக் கூட்டிக் கொண்டு போனாங்க. உன் கிளாஸ் டீச்சர் பேர் என்னன்னு கேட்டாங்க. சித்ரான்னு சொன்னேன். உனக்கு அவங்களைப் பிடிக்குமான்னு கேட்டாங்க. பிடிக்கும்னு சொன்னேன். 'ஏன்'னு கேட்டாங்க. அவங்க நல்லா பாடம் நடத்தறாங்க.





தோசை தின்ன ஆசை!

சின்ன சின்ன தோசை
சிவக்க வார்த்த தோசை
முத்து வண்ண தோசை
முறுக விட்ட தோசை

மல்லிகைப் பூப் போலே
மென்மை யான தோசை
மல்லித் துவையல் கூட
தொட்டு தின்ன ஆசை

சோறு தின்ன எனக்கு
சிறிதும் இல்லை ஆசை
ஆறு ஏழு தோசை
அதிகம் தின்ன ஆசை!

- ஜோதிர்லதா கிரிஜா.

அழகா இருக்காங்க. தினமும் ஒரு புடவை கட்டறாங்க. நிறைய பணம் வச்சிருக்காங்க. சமீபத்துல ஒரு மாடி வீடு கட்டியிருக்காங்க. அடிக்கடி ஏழை மாணவிகளுக்குப் பணம் கொடுத்து உதவி செய்யறாங்கன்னு சொன்னேன்.''


உமாவின் குரல் கரகரத்தது.

''உனக்கு ஒரு உண்மை தெரியுமான்னு ஆண்டாள் அக்கா என்னைக் கேட்டாங்க. என்ன உண்மைன்னு கேட்டேன். உன் கிளாஸ் டீச்சர் சித்ராவும் நானும் ஒரே ஊர்க்காரங்க. எட்டாவது வரைக்கும் நாங்க ஒண்ணாத்தான் படிச்சோம். சித்ரா நல்லா, அக்கறையா படிச்சா. நான் உன் மாதிரி படிப்பிலே கவனம் செலுத்தாம இருந்தேன். இப்ப என் நிலையைப் பார்த்தியா? சித்ரா அக்கறையா படிச்சா. முன்னேறினா. இன்னைக்கு அவளுக்கு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. நான் அப்ப ஒழுங்கா படிக்கலை. அதனால இன்னைக்கு ஒரு வேலைக்காரியா வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கு...''

ஒரு விநாடி பேச்சை நிறுத்தினாள் உமா. ''சமுதாயத்துல மற்றவங்க மதிக்கும்படி பெருமைக்குரிய ஓர் இடத்தை அடையணும்னா அதுக்கு ஒரே வழி, நல்லா படிக்கிறதுதான். படிக்கிற காலத்துல படிக்காம, என் மாதிரி பின்னால வருத்தப்பட்டு ஒரு பயனும் இல்லை. உனக்கு என் மாதிரி வாழ்க்கை வேணுமா? அல்லது சித்ரா டீச்சர் மாதிரி வாழ்க்கை வேணுமான்னு நீயே முடிவு பண்ணிக்கன்னு ஆண்டாள் அக்கா உருக்கமாகக் காலைல என்கிட்ட சொன்னாங்க...''

''அம்மா... இத்தனை நாள் படிப்பின் அருமை தெரியாம இருந்தேன். இன்னைக்கு அதனுடைய அருமையை ஆண்டாள் அக்கா எனக்கு அழுத்தமா மனசுல தைக்கிற மாதிரி உணர்த்திட்டாங்க. இனிமே நான் நல்லா படிச்சி, பெரிய வேலைக்குப் போகப் போறேன்,'' என்றாள் உமா!

மகளின் மாற்றம் கண்டு, அம்மாவுக்கு நிம்மதியாக இருந்தது. அவள் மனசுக்குள் ஆண்டாளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள்!



எலி போட்டதா?

ஒரு சிறிய கிராமம். அதில் பெட்டிக்கடை வைத்திருந்தாள் நல்லம்மாக் கிழவி. அவளுக்கு ஒரு மருமகள் இருந்தாள். பெயர் மீனா. மீனாவின் கணவன் வெளியூரில் வியாபாரம் செய்து வந்தான். மாதத்தில் ஓரிரு நாள் வீட்டுக்கு வந்து, அம்மாவையும், மனைவியையும் பார்த்துவிட்டு உடனே போய் விடுவான்.

நல்லம்மாக் கிழவி பெயரளவில் தான் நல்லம்மா! மற்றபடி செய் கையில் அவளை ஒரு தீயம்மா என்றே சொல்ல வேண்டும். மருமகள் மீனாவை, மகன் இல்லாத போது மிகவும் கொடுமை செய்தாள். வேண்டிய மட்டும் வேலை வாங்குவாள். ஆனால் வயிறாரச் சாப்பாடு கூடப் போட மாட்டாள். பட்டினி போட்டு வதைப்பாள். ஆனால் மகன் ஊரில் இருக்கும் போது மட்டும் மீனாவை அன்புடன் விழுந்து விழுந்து கவனிப்பதைப் போல நடிப்பாள் - மகன் நம்பும் வகையில்.

மாமியாரின் கொடூர குணத்தைப் புரிந்து கொண்ட மீனா, 'ஜாடிக்கேற்ற மூடி' போல, மாமிக்கு ஏற்றவிதமாக - 'ஒன்றும் தெரியாத மக்கு' போல வேஷம் போட்டுக் கொண்டாள்.


நல்லம்மாக் கிழவி வியாபாரத்தில் கெட்டிக்காரி. கிராம மக்களுக்கு வெற்றிலை, பாக்கு, புகையிலை கொடுத்து, வீட்டுக்குத் தேவையான கொள்ளு, கம்பு, சோளம், நிலக்கடலை ஆகிய தானிய வகைகளைப் பெற்றுக் கொண்டு விடுவாள்.

இப்படிச் சேரும் தானியங்களை மருமகளுக்குத் தெரியாமல் அடுக்குப் பானையில் போட்டுச் சேமித்து விற்றுப் பணமாக்கி விடுவாள்.




"மைக்ராஸ்கோப் போன்ற இன்னொரு கருவியின் பெயர் சொல்லு பாபு."

"சினிமாஸ்கோப்"



"மாம்பழத்தைக் கொட்டையோடு முழுங்கிட்டேன் டாக்டர்!"



"பாஸ் பண்ணா கொழுக்கட்டை தர்றேன்னு பிள்ளையாரை வேண்டிண்டு ஏமாத்தினது தப்பாப் போச்சு!"

- கே. சோமசேகர்

மாமியார் வீட்டில் இல்லாத போது, அவள் சேமிப்பான கடலை, கொள்ளு, சோளம் ஆகியவற்றில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வறுத்து, தனியாக ஒரு பானையில் போட்டு வைத்துக் கொண்டு, பசிக்கிற போதெல்லாம் அதைச் சாப்பிட்டு வந்தாள் புத்திசாலி மீனா.

அடுக்குப்பானையிலிருந்த தானிய வகைகள் அடிக்கடி குறைந்து வருவதைக் கண்ட நல்லம்மாக்கிழவி, தன் மருமகள் தனக்குத் தெரியாமல் எடுத்துத் தின்று தீர்க்கிறாளோ என்ற ஐயத்தில் மருமகளைக் கண்காணிக்கத் தொடங்கினாள்.

பாம்பின்கால் பாம்பு அறியும் என்பது போல மாமியாரின் கண்காணிப்பைப் புரிந்து கொண்ட மருமகள், சுதாரித்துக் கொண்டாள். தான் ஒன்றுமறியாதவள் என்பதை மாமியார் நம்பும்படி ஒருவேலை செய்தாள்.


பானையிலிருந்த தானியத்தைக் கொஞ்சம் எடுத்துக் கீழே சிதறப் போட்டு விட்டு, பின்னர் மாமியார் எதிரில் வீடு பெருக்கும் பாவனையில் சிதறிக்கிடந்த தானியமான கடலை, கொள்ளு, சோளம் ஆகியவற்றைக் கையில் எடுத்துப் போய், "அத்தே! இது என்ன தானியம்? இது எப்படி நம்ம வீட்டுக்கு வந்தது... எலி எதுவும் கொண்டு வந்து போட்டதா?" என்று அப்பாவி போலக் கேட்டு நடித்தாள்.

நல்லம்மா அசந்து போனாள். இப்படிப்பட்ட ஒன்றுமறியாத தன் அப்பாவி மருமகள் மீது சந்தேகப்பட்டோமே என்று வருந்தினாள்.

அத்துடன் விளக்கம் ஏதும் சொல்லி மருமகளுக்கு விளங்க வைக்க விரும்பாது அவள் கேட்டது போலவே "ஆமா... ஆமா... இதை எலிதான் கொண்டு வந்து போட்டு இருக்கும்! இதெல்லாத்தையும் பெருக்கி வெளியே போட்டுவிடு" என்று கூறிவிட்டாள்.

மாமியாரை ஏமாற்றிவிட்ட மகிழ்ச்சியில் புத்திசாலி மருமகள், மீண்டும் மாமியாருக்குச் சந்தேகம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள முடிவு செய்து கொண்டாள்.

- எஸ். உஷாராணி.



கழுதைக்குப் பிடித்தது காகிதம் தானா?

ரேவதி

பஸ் நிலையத்தில் எக்ஸ்பிரஸ் பஸ் வந்து நின்றது. சோடா, தண்ணீர், காப்பி குடிக்க பயணிகளில் பலர் இறங்கினர். இரண்டொரு குழந்தைகளுடன் ஒரு குடும்பம் இறங்கியது.

''அம்மா, தம்பி காகிதத்தோடு சாக்லேட்டை மெல்றான்'' என்றாள் ஒரு சிறுமி.

''சனியன் பிடித்த கழுதை'' என்று திட்டிக் கொண்டே அம்மா, தம்பியின் வாயை பலவந்தமாகத் திறந்து, விரலை விட்டு, குழந்தை மென்று கொண்டிருந்ததை எடுத்தாள். குழந்தை திமிறிக் கொண்டு 'ஓ'வென்று அழுது ஊரைக் கூட்டியது.

சர்பத் வாங்கிக் குடித்த ஒரு சிறுவன், கை தவறுதலாக கிளாசைப் போட்டு உடைத்து விட்டான்.

''சனியன் பிடித்த கழுதை'' என்று சிறுவனின் காதைப் பிடித்துத் திருகினார் அவன் தந்தை.

பஸ் நிலையத்தை ஒட்டியிருந்த டீக் கடை குட்டிச் சுவருக்கு அருகே இரண்டு கழுதைகள் நின்று கண்களை மூடி இளைப்பாறிக் கொண்டிருந்தன. ஒன்று ஆண் கழுதை ரங்கா. மற்றொன்று, அதன் மனைவியான பெண் கழுதை சம்பா. பஸ் நிலையத்தில் நடப்பதையும் மக்கள் பேசியதையும் இரண்டும் கேட்டுக் கொண்டுதான் இருந்தன.

''இந்த மனிதர்களுக்கு என்ன கொழுப்பு பார்த்தியா? அந்தக் குழந்தை சாக்லேட் காகிதத்தைத் தின்னாலும் சனியன் பிடித்த கழுதை என்று திட்டறாங்க. அந்தப் பையன் தவறு செய்தாலும் சனியன் பிடித்த கழுதைன்னு திட்டறாங்க!'' என்று ஆத்திரத்துடன் பொருமியது சம்பா.

''எனக்கு வர கோபத்தில், அந்த ஆளுடைய கையைப் போய் வெடுக்கென்று கடிச்சுடலாமான்னு கூடத் தோணுது'' என்று தானும் பொருமியது ரங்கா.

''இது நம்முடைய இனத்தின் தலைவிதி. நாம பொறுமைக்குப் பெயர் போனவங்க என்று மனிதர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இப்படி எதுக்கெடுத்தாலும் நம்மைக் கேவலப்படுத்திப் பேசறாங்க. தாங்க முடியாத அளவுக்கு சுமையைக் கட்டி வைச்சு நம்மைச் சுமக்க வைக்கிறாங்க. இதுக்கு நாம்ப ஏதாவது ஒரு முடிவு கட்டணும்.''

''போன வாரம் என்ன ஆச்சு தெரியுமா? நம்ம முதலாளி பொன்னன் என்னால் சுமக்க முடியாத அளவுக்கு சுமை ஏத்திட்டார். அதோட, வேகமா வேற போகணும்னு குச்சியால அடிக்க விரட்டினார். எனக்குப் பொறுமை போயிடுச்சு. இனிமேல் தாங்க முடியாதுன்னு அவர் மேலேயே பாய்ந்து காலை நல்லாக் கடிச்சிட்டேன். பின்னங்காலில் உதைச்சேன். மனுஷன் பாவம், அரண்டு போயிட்டாரு. அதுக்குத் தண்டனையா எனக்கு அன்னிக்கு தவிடு வைக்கலே. புல்லு மேய விடலே. கை வலிக்கிற வரை செமை அடி அடிச்சார். ஆனால், எனக்குத் திருப்தி. நல்லாக் கடிச்சு, பொறுமை போனா எப்படி இருப்பேன் கறதைக் காட்டிட்டேன். அதுபோதும்'' என்றது ரங்கா.



''இப்படி வீரமா நீ இருப்பதைப் பார்க்க எனக்கு எத்தனை மகிழ்ச்சியா இருக்கு தெரியுமா? மகிழ்ச்சிப் பெருக்கில் பாடணும் போல இருக்கு'' என்று கூறி ஓங்கிய குரலெடுத்துக் 'காள்காள்' என்று கத்தியது சம்பா.

''கழுதை கத்துது. நல்ல சகுனம்தான். போகும் காரியம் கண்டிப்பா வெற்றி பெறும்'' என்று மகிழ்ந்தாள் பஸ்ஸில் ஏற வந்த பெண்மணி ஒருத்தி.

யாரோ ஒருவர் டிபன் தின்று விட்டு எறிந்த வாழை இலை, ரங்காவின் கண்ணில் பட்டது. அதைத் தின்ன ஆவலாக விரைந்தது.


''சனியன் பிடித்த கழுதை. கத்துவதோடு நின்றிருக்கக் கூடாதோ? நல்ல சகுனம் என்று மகிழ்ந்தேன். இப்போ நேராக வந்து எதிர்ப்படறதே! சகுனம் கெட்டுப் போச்சே'' என்று புலம்பினாள் சகுனம் பார்த்த பெண்மணி.

''சனியன், யார் இதை இங்கே வரச் சொன்னார்கள்?'' என்று கடிந்து கல்லை எடுத்து வீசினார் பெண்மணியின் கணவர்.

இலையை மறந்து விட்டு மனைவியுடன் வந்து சேர்ந்து கொண்டது ரங்கா.

''இந்த அநியாயம் உண்டா? நல்ல சகுனத்துக்காக நாம மறைஞ்சிருந்து கத்தணுமாம். ஆனா, நாம எதிரே வந்தால் அது கெட்ட சகுனமாம்!'' என்று மனைவியிடம் நொந்து கொண்டது.

யாரோ ஒருவர் பத்திரிகைக் கட்டுடன் அந்தப் பக்கம் வந்தார். அவருடன் வந்தவர், ''இங்கேயே இருங்க. நான்



போய் டிக்கெட் வாங்கிக்கிட்டு வரேன். கட்டு பத்திரம். கீழே வைச்சிடாதீங்க. அதோ ரெண்டு கழுதைங்க இருக்கு. தின்னு தீர்த்துடும்'' என்று எச்சரித்து விட்டுச் சென்றார்.

''இந்த மனிதர்களுக்கு நாம காகிதம் மட்டுமே தின்னும் பிறவிகள்னு நினைப்பு. காகிதம் தோன்றுவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் இனம் தோன்றி விட்டது என்ற உண்மையை இவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஆடு, மாடு, குதிரை மாதிரியே நாமும் எல்லாத் தீனி வகைகளையும் தின்னக்கூடியவர்கள் என்ற எண்ணமே இவர்களுக்கு இல்லையே! காகிதத்தை மட்டுமே தின்னு வாழறோம்னு நினைக்கிறாங்க,'' என்று நொந்து கொண்டது சம்பா.

''சம்பா, ரங்கா'' என்று பொன்னன் அழைக்கும் குரல் கேட்டது.

''என்னது! நம்ப முதலாளி கூப்பிடற சத்தம் கேட்குது? அழுக்குத் துணியை சுமந்துகிட்டுப் போய், காஞ்ச துணியையும் கொண்டு வந்து விட்டோமே? இன்னும் என்ன வேலை இருக்கு? தெரியலையே?'' என்று மனைவியிடம் கேட்டது ரங்கா.

''முதலாளி தேடறார்னா, காரணம் கண்டிப்பா இருக்கும். சுத்த சுயநலக்கார மனிதன்'' என்று அலுத்துக் கொண்டது சம்பா.

''எங்க போச்சுன்னு தெரியலையே? இங்கேதானே ரெண்டும் வழக்கமா நிக்கும்?'' என்று உரக்க வியந்து கொண்ட பொன்னன், ''சம்பா, சம்பாக்கண்ணு'' என்று குழைவாக அழைத்தான்.

''கருப்பட்டி எடுத்து வந்திருக்கேன் சம்பா கண்ணு. எங்கேடி இருக்கே?'' என்று அன்பு பொங்கக் கெஞ்சலான குரலில் அழைத்தாள் பொன்னனின் மனைவி புல்வி.

''அதானே பார்த்தேன். என்னடா

திடீர்னு அன்பு பொங்கி வழியு தேன்னு? எனக்குக் கருப்பட்டி கொடுத்து பாலைக் கறந்து கொண்டு போக ரெண்டு பேருமா ஒற்றுமையா வந்திருக்காங்க. யாராவது குழந்தைக் குக் கொடுக்க கழுதைப் பால் கேட்டி ருப்பாங்க. எனக்கு ஒரு துண்டுக் கருப் பட்டி கொடுத்து, பாலைக் கறந்து கொடுத்துட்டு, பணம் புடைவை வெற் றிலை பாக்கு எல்லாம் வாங்கிக்கப் போறா இந்த புல்லி,'' என்று பொரு மியது சம்பா.


இதற்குள் சம்பாவையும், ரங்கனை யும் பொன்னன் பார்த்து விட்டான். ''அட! இதோ இருக்குதுங்க'' என்று கூறிக் கொண்டே சம்பாவை நெருங்கி னான் பொன்னன். பின்னாலேயே புல்லி யும் வந்தாள். அவளுடைய கையில் ஒரு சிறு கிண்ணம் இருந்தது. புல்லி, சம்பா வின் வாயில் கருப்பட்டியைத் திணித் தாள். பொன்னன், சம்பாவிடம் பால் கறக்க முயன்றான்.

'இருக்கிற பாலை இவரு கறந்து கிட்டுப் போயிட்டால் குட்டி, பாலுக் குத் தவிக்குமே' என்பதை எண்ணிய போதே சம்பாவுக்கு ஆத்திரம் பொங்கி யது. பின்கால்களால் எட்டி ஓர் உதை விட்டது. பாவம் பொன்னன் தாடை யைப் பிடித்துக் கொண்டு புல்லியின் மேல் சாய்ந்தான். புல்லி தடுமாறி விழுந் தாள்.

''இனிமே இங்கே இருந்தால் கொலையே பண்ணிடுவாங்க. ஓட்டம் பிடிங்க'' என்று ஓடியது சம்பா. ரங்க னும் பின்தொடர்ந்தது.

''நன்றி கெட்ட கழுதைகளா. இருங்க இருங்க. எப்படியும் வீட்டுக்குத் தானே வரணும். பார்த்துக்கறேன்'' என்று பொருமினாள் புல்லி.

''ஆமாம். பெரிசா வீட்டுல எங்க ளுக்குன்னு தனியா கொட்டகை போட்டு வைத்திருக்கிற மாதிரி பேச் சைப் பார். கோழிக்கு இரவிலே பத்தி ரமா தங்க, கூண்டு இருக்கு. மாடுக்குக் கொட்டகை இருக்கு. எங்களுக்கு என்ன பண்ணித் தந்திருக்கே? இப்படிச் கவ ருக்குக் கிட்ட, பனி மழையில் நின்னுக்



அறிவியல் உண்மைகள் :

★ கழுதை பொறுமைசாலிதான். ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு இல்லையா? அந்த அளவுக்கு அது துன்பத்தை அடைந்தால் வாயால் நன்றாகக் கடித்து விடும். பின்னங்கால்களால் உதைக்கும்.

★ ஆரோக்கியமான கழுதை நின்றபடிதான் தூங்கும்.

★ கழுதைப் பால் எளிதில் செரிக்கக்கூடியது. காசநோய் உள்ளவர்களுக்கு சத்துள்ள உணவு. இதில் 1.37% கொழுப்பும், 1.85% புரதமும், 6.19% சர்க்கரையும், 0.47% தாது உப்பும், 90.12% நீரும் உள்ளன.

★ கழுதை நாம் நினைப்பது போல் முட்டாள் அல்ல. நல்ல அறிவுள்ள விலங்கு. மனிதர்களை நன்கு நினைவு வைத்துக் கொள்ளும்.

★ பொதி சுமக்கவும் காடு மலைகளைக் கடக்கவும் நன்கு பயன்படும். அரேபியாவில் நிலத்தை உழவும், சவாரி செய்யவும் கூடக் கழுதைகள் பயன்படுகின்றன.

★ கழுதைக்கு நீர் என்றால் அலர்ஜி. குறைந்த அளவே நீர் குடிக்கும். குளிக்காது. மழையில் நனைவதோடு சரி.

★ காகிதத்தில் உள்ள செல்லுலோஸ் (Cellulose) எனும் தாவரப் பொருள் கழுதைக்கு மட்டுமல்ல ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகள் எல்லாமே விரும்பி உண்பது. ஆனால் இதுவே கழுதைகளின் உணவாகி விடாது. கழுதை மட்டுமே காகிதத்தை விரும்பி உண்ணும் என்பது சரியல்ல.

★ கழுதை மணிக்கு 3 முதல் 5 கி.மீ. வீதம், ஒரு நாளுக்கு 32 கி.மீ. வரை மலையில் பொதி சுமந்து நடக்கும். பழகின பாதையை நன்கு அறிந்து போகும்.

★ ஆயுட்காலம் சுமார் 40 ஆண்டுகள். 25 ஆண்டுகள் வரை நன்கு உழைக்கும்.

★ இதன் தோலால் 'முழவு' என்ற இசைக் கருவியைச் செய்கிறார்கள்.

★ இது குதிரை இனத்தில் அசினஸ் (Equus Asinus) பிரிவைச் சேர்ந்தது.

★ 2000 ஆண்டுகளுக்கு முன்பே வீட்டுக் கழுதைகள் தோன்றி விட்டன.


கிட்டுத்தானே தூங்கி இரவைக் கழிக்கிறோம்? அதனாலதானே ''கழுதை கெட்டாக் குட்டிச்சுவர்னு சொல்றாங்க. நல்ல காலம், நின்னுக்கிட்டே தூங்கப் பழகியிருக்கோம்,'' என்று தன் ஆற்றாமையைக் கணவனிடம் வெளியிட்டது சம்பா.

இரண்டும் வெகுதூரம் ஓடி தெப்பக் குளத்தின் கரையில் இருந்த ஒரு நாவல் மரத்தின் கீழே நின்றன.

''இந்தக் கழுதைதாம்பா என்னோட கணக்கு விடைத்தாளைத் தின்று விட்டது'' என்று யாரோ ரங்கனைச் சுட்டிக் காட்டி குறைகூறுவது கேட்டது.

இரண்டு கழுதைகளும் திரும்பித் திடுக்கிட்டுப் பார்த்தன. சிறுவன் ஒருவன் தன் தந்தையோடு வந்து கொண்டிருந்தான்.

''நூற்றுக்குக் கோழி முட்டை வாங்கின கணக்கு விடைத்தாளை, வீட்டுக்குக் கொண்டு போனால் அடிவிழும்னு, உன்னிடம் கொடுத்துத் தின்கச் சொன்ன அதே பையன்... இப்ப என்னமோ நீயே தேடிப் போய் அதைத் தின்னு விட்ட மாதிரி புளுகி, உன்னைக் குற்றம்சாட்டறான். அடி விழாம அவன் தப்பி, சிக்கிட்டான். நாம் இப்போ தப்பிக்கணும். ஓடு ஓடு'' என்று தானும் கணவனுடன் ஓடத் தொடங்கியது சம்பா.



தீபாவளி விருந்தாளி!

மு.நடராசன்

தீபாவளிக்குத் தேவையான பொருள்களை பக்கத்து நகருக்குச் சென்று வாங்கிவரப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் கனகசபை!

கதிரவனின் மனத்தில், சந்தோஷம் நிறைந்திருந்தது. பட்டாசு வெடிப்பதிலும், பிளவர் பாட்டைக் கொளுத்தி அதிலிருந்து வானுயர எழும்பி விழும் வண்ணப் பொறிகளைக் கண்டு ரசிப்பதிலும் எப்போதுமே அவனுக்கு அலாதி ஆசை! தனக்கு வேண்டிய பட்டாசுப் பட்டியலை அவன் இப்போதே தயார் செய்து விட்டான்!

இந்தத் தீபாவளிக்கு பட்டுப்பாவாடைதான் வேண்டும் என்று தீர்க்கமாய் அம்மாவிடம் சொல்லி விட்டாள் அறிவுமதி.

''அப்பா எல்லோரையும் கூடத்திற்கு வருமாறு அழைக்கிறார்.... அழைக்கிறார்'' என்று தன் இரு கைகளையும் ஒலிபெருக்கிபோல் வாய்க்கருகில் வைத்துக் கூவிக் கொண்டு வீடு முழுக்க ஒரு 'ரவுண்டு' வந்தான் முரளி.

முகத்தில் வழிந்த வேர்வையை புடைவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே கூடத்திற்கு வந்த அம்மா பண்டிகைக்கான மளிகைப் பட்டியலை அப்பாவிடம் கொடுத்தாள்.

அம்மா கொடுத்த மளிகைப் பட்டியலை வாங்கி, திருப்பிக் கூடப் பார்க்காமல் அதை மேஜை மீது வைத்து விட்டு, ''இந்த ஆண்டு தீபாவளியை வித்தியாசமாகக் கொண்டாட நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். திட்டம் என்பதை விட ஒரு போட்டி என்று கூடக் கூறலாம். வெற்றி பெறுபவருக்கு ஒரு சிறப்புப் பரிசு உண்டு. இதைச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்'' என்றார் அப்பா.

சில நேரங்களில், குழந்தைகளை உற்சாகப்படுத்த நினைக்கும் போதும் இப்படிச் சில போட்டிகளை வைப்பது அப்பாவுக்கு வழக்கம்!

பட்டாசு 'லிஸ்டை' மடித்து, சட்டைப் பையில் வைத்துக் கொண்டான் கதிரவன்!

அப்பா சொன்னதைக் கேட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தாள் அறிவுமதி.

''என்ன போட்டி சீக்கிரம் சொல்லுங்கப்பா?'' உற்சாகமாய்க் கேட்டான் முரளி.

''இங்க பார் மீனாட்சி, நீயும் இதில் கலந்து கொள்ளலாம். வென்றால் உனக்கும் பரிசு உண்டு'' என்று அம்மாவிடம் கூறிய அப்பா தொடங்கினார்.

''போட்டி மிக எளிது. இந்தத் தீபாவளிக்கு நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு விருந்தினரை நம் வீட்டிற்கு அழைத்து வர வேண்டும். அதே சமயம் ஏன் அவரை விருந்தினராகத் தேர்ந்தெடுத்தீர்கள் என்ற காரணத்தையும் கூற வேண்டும். இப்படி யார் சிறந்த காரணத்துடன் விருந்தினரை அழைத்து வருகிறார்களோ அவர்களுக்கு ஒரு சிறப்புப் பரிசைத் தருவேன். இதுவே உங்களுக்கான போட்டி,'' என்று முடித்தார் அப்பா.

''அப்போ, இந்தத் தீபாவளிக்கு, நம் வீட்டிற்கு நம் நால்வரை தவிர நான்கு சிறப்பு விருந்தினர்கள் வரப் போகிறார்களில்லையா? அதற்கேற்றவாறு மளிகைப் பட்டியலைத் திருத்திக் கொடு'' என்றார் அப்பா.

''நீங்களும் உங்களுக்குத் தேவை யானதைக் குறித்துக் கொடுங்கள். சீக்கிரம் புறப்பட வேண்டும்'' என்று குழந்தைகளைப் பார்த்துக் கூறிவிட்டுப் போனார் அப்பா.

தீபாவளி தினம்! ஒவ்வொருவரும் தங்கள் விருந்தினரை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்!

அதோ அப்துல்லா வந்து விட்டான். கதிரவன் ஓடிச்சென்று அவனைக் கைகுலுக்கி வரவேற்று அனைவருக்கும் அறிமுகப்படுத்தினான்.

''அப்பா, இந்த அப்துல்லாதான் எனது விருந்தினர். நமது பண்டிகைகளின் பாரம்பரியம் மற்றும் நடைமுறைகளையும் கலாசாரத்தையும் நேரில் கண்டு தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டியும், மத நல்லிணக்கத்தை வளர்க்கவும்தான் நான் இவனை விருந்தினராகத் தேர்ந்தெடுத்தேன்'' என்றான் கதிரவன்.

சற்று நேரத்திற்கெல்லாம் உடல் ஊனமுற்ற பூங்கொடி அங்கு வந்து சேர்ந்தாள். அவள்தான் அறிவுமதியின் விருந்தினர். அப்பாவிடம் அறிவுமதி சொன்னாள்.

''அப்பா, யாரும் தன்னுடன் இயல்பாய்ப் பழகுவதில்லை என்று பூங்கொடிக்கு எப்போதுமே ஒரு தாழ்வு மனப்பான்மை. அதைப் போக்கு



வதற்காகவே நான் அவளை என் விருந்தினராக இருக்க அழைத்தேன்.''

பூங்கொடியைப் பார்த்து நேசமுடன் புன்னகைத்தார் கனகசபை.

''இதோ நம்வீட்டு வேலைக்காரி முனியம்மாதான் என் விருந்தினர். இன்று நம் வீட்டில் ஒருவராய், அவளுக்கு எல்லா உபசரணைகளையும் செய்து கௌரவிக்க நினைத்தே அவளை என் விருந்தினராக்கினேன்'' என்று சாவதானமாய் அப்பாவிடம் கூறிவிட்டுச் சென்று விட்டாள் அம்மா.

முரளியை மட்டும் காணவில்லை!

எங்கே இந்த முரளியைக் காணோம்? எல்லோரும் பரபரப்படைய, தெருக்கோடியிடையில் ஒரு சிறுவனுடன் வந்து கொண்டிருந்தான் முரளி!

அந்தச் சிறுவன் நன்கு அழுக்கேறிய கால்சட்டை மட்டும் அணிந்திருந்தான். அதுவும் பின்புறம் கிழிந்திருந்தது. அவன் தலை எப்போது எண்ணெய் கண்டதோ! அவன் முதுகில் ஒரு கோணிப்பை தொங்கிக் கொண்டிருந்தது!

அவனை அழைத்துக் கொண்டு முரளி படி ஏறும்போதே முகம் சுளித்தான் கதிரவன்.

''எங்கேடா போனே? இன்னும் உன் விருந்தாளி வரவில்லையே? அந்த அக்கறை கூட இல்லாமல்.....'' இளக்காரமாய்க் கேட்டாள் அறிவுமதி.

முரளி அடக்கமாகப் புன்னகைத்தான்.

''இதோ இவன்தான் என் விருந்தாளி'' என்று முரளி அந்த சிறுவனைக் காட்டிச் சொன்ன போது அப்பாவே சற்று அதிர்ந்து விட்டார்!

''அப்பா, இவனுடைய பெயர் எனக்குத் தெரியாது. இவனுடைய மதம் என்னவென்று இவனுக்கே தெரியாது. இவனுடைய ஊர் யாருக்கும் தெரியாது. பரம ஏழையின் குடிசையில் கூட இன்று சந்தோஷம் துளிர்த்திருக்கும். ஆனால் இவனுக்கோ இன்று என்ன நாள் என்பது கூடத் தெரிந்திருக்க நியாயமில்லை. இவ னுக்கு எல்லா நாளும் துன்ப நாட்கள் தான். ஆனந்தத்தை இன்றைக்காவது இவனுக்கு அறிமுகப்படுத்தவே இந்த காகிதக் குப்பை பொறுக்கும் சிறுவனை என் விருந்தினராய் அழைத்து வந்தேன்! இவனைத் தலை முழுக வைத்து, என் உடைகளை இவனுக்கு அணிவித்து மகிழப் போகிறேன்'' என்று முரளி சொன்ன போது, தன் மகனின் பரந்த மனதைக் கண்டு பெருமிதப் பட்டார் அப்பா.

சிறந்த விருந்தினரை அழைத்து வந்ததற்கான பரிசாக ஒரு தங்க மோதிரத்தை முரளியின் கையில் அப்பா அணிவித்த போது அனைவரும் சேர்ந்து கரவொலி எழுப்பினர். அந்த வீட்டில் அந்த தீபாவளி இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தது!



''பத்திக்கிச்சு, பத்திக்கிச்சு! பறந்து போடா!''

''போகும் வழியில் பொட்டு வெடி போட்டது யாருடா?''



மாணிக்க மனிதர்!



பள்ளியில் ஆண்டு விழாக் கூட்டம். அதோடு குழந்தைகள் தினமும் சேர்ந்து கொண்டது. தலைமை வகிக்கவும், குழந்தைகளுக்குப் பரிசு வழங்கவும் கவிஞரை அழைத்திருந்தார்கள். பணியில் இருந்து ஓய்வு பெற்றிருந்ததால் கவிஞரும் ஒப்புக் கொண்டார்.

கவிஞர் தலைமைவகித்து சிறப்பாகப் பேசினார். நல்ல கூட்டம். எல்லோருமே பேச்சை நன்கு ரசித்தார்கள். கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. கவிஞரின் புகழ்பெற்ற ''மனிதருக்குள் மாணிக்கம், மக்கள் போற்றும் தலைவராம்'' என்ற நேருவின் புகழ் பாடும் பாடலைக் குழந்தைகள் ஆடிப் பாடினார்கள். பரிசளிக்கும் நிகழ்ச்சி. எல்லோருக்கும் பரிசளித்த பிறகு, ''இப்பொழுது மனிதருக்குள் மாணிக்கம் என்ற இந்தப் பாடலை எழுதி நிகழ்ச்சியைத் தயாரித்தவருக்கு குழந்தைக் கவிஞர் பரிசு வழங்குவார்'' என்று அறிவித்தார்கள். குழந்தைக் கவிஞருக்கு ஒரே திகைப்பு. கவிஞருடன் சென்றிருந்த எனக்கும் அதிர்ச்சி. என் முகம் போன போக்கைப் பார்த்து என்னை அருகில் வரச் சொன்ன கவிஞர், ''இதைப் பெரிசு பண்ண வேண்டாம். ஆசிரியர் பாதிக்கப்படுவார். இதை நான் விரும்பவில்லை'' என்று கூறி விட்டார்.

பரிசளிப்பு தொடர்ந்தது. தான் எழுதிய பாடலை, இன்னொருவர் எழுதியதாகக் கூறிக் கொண்டதையும், அவருக்குத் தன் கையாலேயே புன்னகையுடன் பரிசு வழங்கியதையும் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். பரிசு பெற்ற அந்த ஆசிரியரை, இரவு ரயில் நிலையத்திற்கு வரும்படி கேட்டுக் கொண்ட கவிஞர், தம் கையாலேயே அவருக்குத் தனது கவிதை நூல் ஒன்றை வழங்கினார். அதில் ''மனிதருக்குள் மாணிக்கம்'' பாடலும் வெளியாகியிருந்தது! ஆசிரியருக்குத் திகைப்பு. முகம் வெளிறி விட்டது. காலில் விழாத குறை. ''பக்கத்து வீட்டுக் குழந்தை பாடிக் கொண்டிருந்தது. நன்றாக இருந்தது. எடுத்துக் கொண்டு பயன்படுத்தினேன். யார் எழுதியது என்பது தெரியவில்லை'' என்று குழறினார். ''நீங்கள் எழுதவில்லை என்பது உறுதியாகத் தெரிந்த நிலையில் இப்படிப் பரிசு வாங்கத் துணிவது ஆபத்தானது'' என்று அறிவுறுத்தினார் கவிஞர். மனிதருள் மாணிக்கமான நேருஜியின் பிறந்த மாதத்திலேயே, மாணிக்க மனம் படைத்த குழந்தைக் கவிஞரின் பிறந்த நாளும் வருவது எத்தனை பொருத்தம்!

– ரே



எதிர்கால நம்பிக்கை டெண்டுல்கர்!

சின்னப் பையனாக கிரிக்கெட் அரங்கில் பிரவேசித்து 'பெரிய' சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் இந்திய கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர். இவரது ஆட்டத் திறமைக்கு மகுடம் சூட்டும் வகையில் இப் போது அணியின் உதவி காப்டன் பொறுப்பு இவரிடம் தரப்பட்டிருக்கிறது.

குறைவான உயரத்துடன் பால் முகம் மாறாத புன்னகையுடன் டெண்டுல்கர் 'பேட்' பிடித்த போது, ''பப்பிள்கம் ஹீரோ வந்து விட்டார்''. ''குண்டுக் குழந்தை வந்து விட்டது''! ''ஃபீடிங் பாட்டில் பேபி விளையாட வந்து விட்டது!'' என்கிற விமர்சனங்கள் பல திசைகளில் இருந்தும் வந்தன!

டெண்டுல்கர் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. 'யார் என்ன பேசினால் என்ன? பொறுத்திருந்து பாருங்கள். என்னுடைய ஆட்டத்தின் திறமை புரியும்' என்கிற உறுதியான நம்பிக்கையுடன் டெண்டுல்கர் பொறுமையாகக் காத்திருந்தார்.

உலக கிரிக்கெட் அரங்கின் அதிவேகப் பந்து வீச்சாளர்கள் டெண்டுல்கருக்குப் பந்து வீச களத்திற்கு வந்த போது: ''இந்த சின்னப் பையன் நம்ம பந்து வீச்சுக்கு எப்படி ஆடப்போகிறான்! பலமான சிபார்சில் டெஸ்ட் மேட்சுக்கு வந்து விட்ட அறியாப் பையன்? பாவம்! முதல் பந்திலேயே விக்கெட்டை இழந்து விடுவான் போல இருக்கிறதே!'' என்று பரிதாபப்பட்டவர்கள் ஏராளம். பீல்டிங் செய்து கொண்டிருந்த

ஆட்டக்காரர்களுக்கும் இந்த எண்ணம் தான்!

பந்து வீசப்பட்டது. ஆனால் பலரும் எதிர்பார்த்தபடி டெண்டுல்கர் அவுட் ஆக வில்லை. அவரது ஆட்டத்தைப் பார்த்து பந்து விசியவர்கள்தான் அதிர்ந்து போனார்கள்! கட்டுக் கடங் காத வேகமான பந்தை அதன் திசையி லேயே திருப்பி 'பவுண்டரிக்கு' அனுப் பும் லாவகம் டெண்டுல்கரிடம் இருந் ததை அவர்கள் நேரில் கண்டு திகைத் தனர்! விமர்சனம் செய்தவர்கள் வாயை இறுக மூடிக் கொண்டார்கள்!

சாதனை செய்வதற்கு வயது ஒரு பிரச்னை அல்ல. சாதனையாளர்கள் எத் தகைய தடையிலும் கூட நல்ல நடை போட்டுத் தங்கள் திறமையைக் காட்டக் கூடியவர்கள். இதற்கு டெண்டுல்கர் நல்ல ஒரு உதாரணம்.

இந்திய அணிக்கு இவர் புதிய துணை காப்டனாக நியமிக்கபட்டிருக் கிறாரே? தேர்வாளர்களின் கணிப்பு சரி யாக இருக்குமா? இதே கேள்வி சில ஆண்டுகளுக்கு முன் வந்திருந்தால் இப் படிப்பட்ட சின்னப் பையனுக்கு பெரும் பொறுப்பைத் தரக்கூடாது என்ற எதிர்ப்பு எழுந்து இருக்கும்.

அன்று சியால் கோட் நகரில் ஒரு போட்டி. இக்கட்டான நிலையில் அணி தடுமாறிக் கொண்டிருக்க, டெண்டுல்கர் களம் வந்தார்.

பல சவால்களை முறியடித்து அரு மையாக அரை சதம் ஒன்றை டெண் டுல்கர் பெற; ரசிகர்களின் மகிழ்ச்சி கரை கடந்தது! பாசப் பெருக்கால் 'சோட்டி' (சிறிய சகோதரனே) என்று அவரை அழைத்தார்கள். அந்தப் போட்டியின் இந்திய அணியின் காப்டனாக இருந்த ஸ்ரீகாந்த் உணர்ச்சிப் பெருக்கில், ''டெண்டுல்கர், நீயும் ஒருநாள் இந்திய காப்டன் ஆவாய்'' என்று வாழ்த்தினார்.

சமீபத்தில் - கவாஸ்கர் கூட 'டெண் டுல்கரை காப்டனாக ஆக்க லாம். அந்த அளவிற்கு அவரிடம் திறமை இருக் கிறது'' என்றார். கவாஸ்கரின் கருத்தைப் பெரும்பாலானவர்கள் பெரிதாக எடுத் துக் கொள்ளவில்லை. டெண்டுல்கர் மீது கவாஸ்கருக்கு அதிக பிரியம். இரு வரும் பம்பாய் வாசிகள். அதனால் இப் படிச் சொல்கிறார் என்று நினைத்தார் கள்.

உதவிக் காப்டன் பொறுப்பை ஏற்ற தில் இருந்து, டெண்டுல்கர் மேலும் நல்ல பக்குவம் பெற்றிருக்கிறார். டெண் டுல்கரின் அணுகு முறை, காப்டன் அசா ருதீன், மானேஜர் அஜித் வடேக்கர் போன்று அனைவரையும் கவர்ந் துள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் நான்கு ஆண்டுகளே அனுபவம் பெற்றுள்ள டெண்டுல்கர் சக ஆட்டக்காரர்களிடம் மிகவும் மென்மையாகப் பழகுகிறார். இது அவரை மேலும் உயர்த்திருக்கிறது.

நல்ல திறமை மிக்க வீரருக்கு உணவு உட்பட எல்லா விஷயத்திலும் கட்டுப் பாடு வேண்டும். டெண்டுல்கருக்கு ஐஸ் கிரீம் என்றால் மிகவும் பிடிக்கும். கண் ணில் தெரிகிற போது விரும்பி வாங்கிச் சாப்பிடுவார்.

ஆனால் உடல் எடை கூடுதலாக ஒரு கிலோ ஏறி விட்டால் போச்சு. நாக்குக் குக் கடிவாளம் போட்டு விடுவார். ஐஸ் கிரீம் என்ன, மற்ற பிடித்தமான உணவு வகைகளையும் கூட டெண்டுல்கர் எப் பொழுது வேண்டுமானாலும் உதறித் தள்ளிவிடத் தயங்க மாட்டார்.

இளம் வீரர் டெண்டுல்கருக்கு தின மும் ஏராளமான ரசிகர்கள் கடிதம் எழுது கிறார்கள். வருகிற ஒவ்வொரு கடிதத்திற் கும் டெண்டுல்கர் 'பிரிண்ட்' செய்யப் பட்ட கடிதத்தில் கையெழுத்திட்டு அனுப்புகிறார். பதில் அனுப்பாமல் இருப்பதை விட இப்படிச் செய்வது நல்லதுதானே என்கிறார் பம்பாய் வாசி யான இந்த நட்சத்திர ஆட்டக்காரர்.

கிரிக்கெட்டைத் தவிர இளம் வயதி லேயே உலக சாதனை புரிந்த இந்திய வீரர்கள் லியாண்டர் பயஸ் (டென் னிஸ்) விஸ்வநாதன் ஆனந்த் (செஸ்) ஆகி யோரது ஆட்டத்தை டெண்டுல்கர் ரசிப்பது உண்டு. ஆனால் அவர்களை இதுவரை நேரில் பேசும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறார் டெண்டுல்கர்.

- எஸ். காந்திமதிபாய்



இரண்டு மடங்கு ஆனந்தம்!

பொம்மைக் கொலுவினை அழகாக்கப்
போட்டி நடந்தது வீட்டினிலே!
அம்மா தொடங்கி சுந்து வரை
அத்தனை பேரும் உழைத்தார்கள்!

பலகை அனைத்தும் படியாகும்!
படிகள் மேலே அப்பாவின்
சலவை வேட்டிகள் மறைவாகும்!
சரிகைக் காகித அலங்காரம்!

வண்ணத் தாளில் தோரணமாம்!
வாசல் மாவிலை வரவேற்போம்!
மண்ணைக் குவித்து மலைக்கோட்டை
மற்றும் திருக்குள ஏற்பாடாம்!

அருமையாகக் கொலு வைத்தார்;
அனைவரும் மிகவே மகிழ்ந்தார்கள்!
இருந்தும் சுந்துப் பயலுக்கோ
இரண்டு மடங்கு ஆனந்தம்!

படிகள் அமைக்கும் போதினிலே
பாடப் புத்தகப் பெட்டியினை
அடியில் வைத்து விட்டார்கள்;
அதுதான் சுந்துவின் ஆனந்தம்!

– இளையவன்.

வாழ்த்தி வரவேற்போம்!

தீபா வளித்திருநாள்; – சுடர்
சிரிக்கும் ஒளித்திரு நாள்!
மேவும் வாழ்த்துக்களில் – பல
மேன்மை பூத்திடும் நாள்!

எண்ணெய் நீராடி – உடல்
ஏற்கும் சீராடை!
பண்ணும் பலகாரம்; – கண்ணில்
பட்டால் பசியாறும்!

சிதறும் முத்தாக – பூக்கள்
சிந்தும் மத்தாப்பு!
அதிரும் வெடியோசை; – கேட்டால்
அடங்கும் இடியோசை!

ஏழை எளியவரும், – வாழ்வில்
எந்த நிலையவரும்,
சூழும் உறவோடு – கூடும்
சுவைசேர் சுபத்திருநாள்!

நரகப் பகைகொய்து, – நன்மை
நாட்டும் வகைசெய்ய
வருமாம் திருநாளை – நாமும்
வாழ்த்தி வரவேற்போம்!

– குரு. சீனிவாசன்.



பட்டாசு பிறந்த கதை!



தீபாவளிப் பண்டிகையின் தனிச் சிறப்பு பட்டாசுதான்! இந்தப் பட்டாசையும் மத்தாப்பையும் எதற்காக வெடிக்க வேண்டும்? இந்த வழக்கம் எப்போது ஆரம்பமாயிற்று?


பட்டாசு வெடிப்பது வெகு காலமாகவே வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

மிகப் பழங்காலத்தில் ஆசியாக் கண்டத்தில் கடலிலிருந்து வெகு தூரத்தில் கடலையே பார்க்காமல் வசித்து வந்த மக்கள், சமையலில் சேர்க்க உப்புப் பாறைப் பொடியை உப்பாகப் பயன்படுத்தினர். இந்த உப்புப் பொடி தவறி அடுப்பில் சிந்தும் போது வர்ணஜாலம் காட்டி மயக்கும்; பட்டாசு மத்தாப்புகளை உருவாக்கும். இதைக் கொண்டே ஏன் பட்டாசு, மத்தாப்பு செய்யக் கூடாது என்ற எண்ணம் மனிதனுக்குத் தோன்றியிருக்கலாம்.

சீனநாட்டில் மிகப் பழங்காலத்தில் பூதம், பேய், பிசாசுகளை விரட்டுவதற்கு 'படீர் படீர்' என்று பலமான ஓசையுடன் வெடிக்கும் மூங்கில் குச்சிகளைத் தீயில் போடும் வழக்கமிருந்தது. பிறகு மூங்கிலுக்குள் வெடி மருந்தடைத்துச் செய்த மூங்கில் பட்டாசுகளை சீனர்கள் கண்டு பிடித்தார்கள். இதற்குப் பிறகு விங் வம்சம் தொடங்கிய போதுதான் (கி.பி. 960-1279) சீனாவில் இப்போது இருப்பதைப் போல் காகிதக் குப்பியில் வெடி மருந்தைத் திணித்து வெடிக்கும் பழக்கம் ஏற்பட்டது.

முதன் முதலில் காகிதத்தால் பட்டாசுகளைச் செய்தவர்கள் சீனர்கள் தான்! சீனாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த பழங்கால வர்த்தகர்கள், யாத்திரிகர்கள் மூலம் நமது நாட்டிலும் வாண வெடிகளை வெடிக்கும் பழக்கம் ஏற்பட்டது. இந்தியாவுக்கு வந்த பாஹியான், யுவான் சுவாங் போன்ற சீன யாத்திரிகர்களின் குறிப்புகளில் இந்தியாவில் மத சம்பந்தமான பண்டிகைகளில் வாண வெடிகள் வெடிக்கும் பழக்கம் இருந்ததாக எழுதியுள்ளனர்.

பழங்காலத்தில் சீனர்கள் வாண வெடிகளைத் தயாரித்து இந்தியாவுக்கும் அனுப்பினர். அதனால்தான் பட்டாசுக்கு சீனவெடி என்றே பெயர் ஏற்பட்டது. விசேஷ காலங்களில் வாணங்களை விடுவதும், வெடிகளை வெடிப்பதும் 1500 - ஆம் ஆண்டு வாக்கிலிருந்து குஜராத், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா, விஜயநகரம் ஆகிய இடங்களில் வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆனந்தத்துக்கும், உற்சாகத்துக்கும் இடமளிக்கும் வகையில் விளங்கும் தீபாவளியன்றும் வாண வெடிகளை வெடிக்கும் பழக்கம், விஜயநகர அரசர்கள் காலத்திலிருந்து (1500 - ம் ஆண்டு வாக்கிலிருந்து) ஆரம்பித்தது. தீபாவளியைக் கொண்டாடும்





வழக்கம் வடக்கிலிருந்து தெற்குப் பகுதிகளுக்குப் பரவியபோது வாண வேடிக்கையும் கூடவே வந்துவிட்டது!

பதிமூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் வாண வெடிகள் பரவின. ஐரோப்பிய நாடுகளில் முதன் முதலாக பட்டாசைத் தயாரித்தது இத்தாலிதான்.


1788 - ல் பொட்டாசியம் குளோரைட் என்னும் வெடியும் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அதுவே நவீன பட்டாசுக் கலைக்கு அடிப்படையாக அமைந்தது. இப்போது கலவை மருந்துகளை மாற்றி மாற்றி அமைத்து பலவிதமான பட்டாசுகளைத் தயாரிக்கின்றனர்.

சில பட்டாசுகள் விசையுடன் தீப்பொறியை எழுப்பும். இவைகள் தாம் நாம் வெடி என்றழைக்கும் பட்டாசு வகை. இவைகளின் கூடுகள் உறுதியானவை. அந்தக் கூட்டுக்குள் மருந்து உள்ளடைத்து வைக்கப்பட்டிருக்கும். இவைகளுக்குத் தீ வைக்கும் போது தீப்பற்றி கூட்டினுள் வாயுக்களை எழுப்பி விடுகின்றன. வாயுக்களின் அழுத்தத்தால் தீப்பொறி அதிவிசையுடன் பீறிட்டு வெளிப் படுகின்றன. அதனால், கூடும் வெடித்துப் பெரும் சத்தம் உண்டாகிறது.

பழங்காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பட்டாசுகள் மிகச் சாதாரணமாக வெண்ணிற ஜ்வாலைகளையும், தீப்பொறிகளையும்தான் கக்கின. பட்டாசுகள் பளிச்சென்று ஒரு மின்னலுடன் வெடிப்பதைப் பார்த்திருப்பீர்கள். இந்த மின்னலுக்கு முக்கியக் காரணம் அலுமினியத் தூளாகும். பேரியம், பொட்டாசியம், ஸ்ட்ரான்ஷியம் ஆகிய உலோக உப்புகள் ஒளியுண்டாவதற்கு முக்கிய காரணங்களாகும். எந்த வகையில் ஒளி வீச வேண்டுமோ அந்த வண்ணத்திற்கேற்ற உலோக உப்புகளை பட்டாசு மத்தாப்புகளில் சேர்க்கின்றனர். பேரியம் உப்புகள் எரியும் போது பச்சை நிறத்தைத் தரும். அது போல ஸ்ட்ரான்ஷியம் உப்பு சிகப்பு நிறத்தையும், சோடியம் உப்பு மஞ்சள் நிறத்தையும், பொட்டாசியம் உப்பு ஊதா நிறத்தையும் தருகின்றன. பட்டாசுகள், மத்தாப்பு என்றாலே சிவகாசி என்ற ஊர்தான் நம் நினைவுக்கு வரும். பட்டாசு, மத்தாப்புகளைப் பொருத்தவரை இந்தியத் தேவையின் 95 சதத்தை சிவகாசிதான் பூர்த்தி செய்கிறது.

- ஆர். மகாதேவன்.

சார் தபால்!



★ எலியை, முதலையைப் பற்றி இத்தனை அறிவியல் செய்திகளா? - சிதம்பரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், காங்கேயம் வெ. முத்துலட்சுமி.

★ ''ராஜு 'வுக்கு என்னாச்சு?'' நல்ல பயனுள்ள கதை. இதைப் படித்து விட்டு மாணவர்கள் வீட்டுப் பணிகளுக்கு உதவுவார்களா? - வந்தவாசி த. ஜம்பு லிங்கம், ஈரோடு எஸ். சண்முகம்.

★ மேடை ஏறிப் பேசினேன் எங்களுக்கு நல்ல வழிகாட்டி! - கோவை. தா. முத்து சாமி, மதுரை பா. மாதரையன், சிவல்புரி க. கருணை, தம்மம்பட்டி தா. பாலமுத்து, மதுரை பி. காந்திமதி நண்பர்கள்.

எது சரி?

★ ''பேய் நாட்டுப்புறம்'' சிரிக்கவும் வைத்தது. சிந்திக்கவும் வைத்தது. தலைப்பு நன்கு ஈர்த்தது - திருக்கண்ணங்குடி க. பாலசுப்பிரமணியன் நண்பர்கள், சேலம் எம். கே. வேங்கவேல்.

★ பீனிக்ஸ் பறவை பற்றிய தகவல்கள் திகைக்க வைத்தன! - சிதம்பரம் ச. ஞானப்பிரகாசம்.

★ மேகனாவின் சாதனை + பேட்டி எங்களுக்கு வழிகாட்டி! - பட்டுக்கோட்டை ஆர். பாஸ்கரன், மேலப்பாதி எஸ். நாகராஜன், தருமபுரி எம். சோமசுந்தரம்.

★ செப்டெம்பர் இதழில் கானல் நீரை ஆங்கிலத்தில் மைரேஜ் (MIRAGE) என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதன் சரியான உச்சரிப்பு என்ன? - சூரக்கோட்டை கண்ணம்மாள், குன்றத்தூர் ஆ. காமாட்சி பாரதி மற்றும் பலர். (''மீராஜ்'' என்பதே சரியானது - ஆசிரியர்)

★ ஜார்ஜ் கோட்டைக்கு நாங்களே போய் வந்த மாதிரி இருந்தது. பயனுள்ள கட்டுரை - குடந்தை எஸ். கே. மூர்த்தி.

★ கொடிச் செய்திகள், கட்டுரை எழுதப் பெரிதும் பயன்பட்டன. - கோபி சாருமதி, தஞ்சை ஆர். புனிதா.

★ ''என்ன சாதிக்க முடியும்?'' - சமுதாயச் சிந்தனையைத் தூண்டி விட்டது. பயன் இருக்க வேண்டும் - அஸ்தம்பட்டி எல். பிரகாஷ், நீர் கொடிமங்கலம் எஸ். ராமலிங்கம்.

★ பாலகங்காதர திலகர் குறித்த கட்டுரை பல அரிய உண்மைகளைப் புரியவைத்தது! - மதுகடிப்பட்டு, எஸ். அரிகிருஷ்ணன்.

★ பாண்டியனைத் திருத்திய பாடல் போட்டி, படமும் சரி கதையும் சரி ஜோர் ஜோர்! - சிதம்பரம் பா. சரவணன், சீர்காழி டி. தரணிமணி, வலிவலம் எஸ். பார்வதி மற்றும் பலர்.

★ கூத்தபிரான் சும்மா சஸ்பென்சாவே எழுதித் தள்றாரே! அபிராமியின் அட்டிகையைப் படிக்கப் படிக்க ஆவல் கூடுகிறது! - தம்மம்பட்டி க. கிருஷ்ணமூர்த்தி, இராயபுரம் என். வசந்தா, புதுக்கோட்டை எச். நாராயணன்.

★ ஸைடர் ஜாக்கு வித்தியாசமாக இருந்தது. தொடர்ந்து வெளியிடுங்கள் - பழனி எஸ். சையது நண்பர்கள், மேடவாக்கம் கு. கண்ணப்பன், எட்டையபுரம் எம். ராஜாத்தி, சின்னத் தாம்பரம் கு. லட்சுமி.

★ ''காட்டுக்கு ராஜா யார்?'' படக் கதையில் 83-ஆம் பக்கத்தில் ''எகிப்தில் உள்ள சிங்க முகச் சிலை ''ஸ்பிங்ஸ்'' என்று உள்ளது. இது உண்மையில் மனித முகமும் சிங்க உடலும் கொண்டதுதான் - மல்லசமுத்திரம் செ. ஆனந்த்.

★ திருட்டுத் தேங்காய் கதையில் ராமு தேங்காயை உரிப்பதே இல்லையே. எப்படி அர்ச்சகர் உடைப்பார்? - ஸ்ரீதேவி நகர் இரு. சிவா, காத்தூர் எம். அலமு, மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


"எக்கோ" ஸ்கெட்ச் பேனாக்களால் முகமூடிகளை உருவாக்குவது எளிதானது மட்டுமல்ல,
அது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது!
"எக்கோ" பளிச்சிடும் பல வண்ணங்களில் 12, 24 மற்றும் 30 பேனாக்கள் கொண்ட
பேக்குகளில் கிடைக்கிறது.
அனைத்திற்கும் மேலான சிறப்பு, "எக்கோ" நீர் அடிப்படையிலானது, நச்சுத் தன்மையற்றது.
ஆகவே, நீங்கள் உபயோகிக்க முற்றிலும் பாதுகாப்பானது.
சற்று நினைத்துப் பாருங்கள், எவ்வளவு தாய்மார்கள் அதை விரும்புகிறார்கள்!
உருவாக்குங்கள் புதுமுகங்களை 'எக்கோ'வினால்!
ஆயிரக்கணக்கான பரிசுகளை வென்றிடுவீர்!
"எக்கோ" என்றாலே எல்லையற்ற களிப்பு!
Ekco®

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka